ஈ50(ந) 2.

வெளியீடு—10—7—1968]
Issued—10—7—1968]

MADRAS STATE ARCHIVES
6674/L.
5 - OCT 1968
EGMORE, MADRAS

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

780

திங்கட்கிழமை, 1967 நவம்பர் 27
Monday, 27th November 1967

தொகுதி VI—எண். 3
Volume VI—No. 3

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை. 50 காசுகள்].
[50 Paise]

11, 31 N67
N67. 6-3;1
65032

Y211,31 N67
N67-6-

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள் .. .. .. .. .. | 251–275 |
| 2. | ஒத்திவைப்புத் தீர்மானங்கள்— | |
| | (i) இராமநாதபுரம் மாவட்டத்தில் உணவு தானியங்கள் கிடைக்காமை .. .. .. .. | 275–276 |
| | (ii) வடலூர், நெய்வேலி சிராமிக் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் .. .. .. .. | 276–278 |
| 3. | அரசினர் மசோதா— | |
| | 1967-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்த) மசோதா .. .. .. .. .. | 278 |
| 4. | 9617-68-ம் ஆண்டு தமிழக மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது விவாதம் .. ... .. .. | 278–334 |
| 5. | பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 334–335 |


A.—161 (i)

65032

# தமிழக சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1967 நவம்பர் 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில், மாண்புமிகு **பேரவைத் தலைவர்** திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை **கூடியது.**

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப் பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் "வினாக்கள்—விடைகள்". உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள். வினாக்கள் 450-லிருந்து 452 வரை தள்ளிவைக்கப் படுகின்றன.

*Expert Committee on Education*

* 453 *Q.*—THIRU K. VINAYAKAM:
THIRU L. BALARAMAN:
THIRU A. M. RAJA:
PULAVAR P. PONNAMBALAM:
} Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government propose to constitute an expert committee consisting of eminent Educationists, experienced Professors and Administrators to review the educational policy of the Government?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தற்சமயம் இது போன்ற கோரிக்கை யோசனையில் இல்லை.

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, மேலும் இது போன்ற அறிவுரை வழங்குவதற்காக கல்விக் குழுவை அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் ஏதாகிலும் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** "ஆய்ந்து பார்க்க" என்று கேள்வியில் இருக்கிறது. அப்படி ஆய்ந்து பார்க்க வேண்டும் என்பது குழுவின் நோக்கம் அல்ல. ஆனால் முன்பு இருந்தது போன்று ஒரு கன்சல்டேடிவ் கமிட்டி—சட்டப் பேரவை உறுப்பினர்கள், மேல் அவை உறுப்பினர்கள் அடங்கிய கமிட்டி—ஆலோசனை கூறுவதற்காக அமைக்கும் யோசனை இருக்கிறது. இது தவிர, அட்வைசரி போர்ட் ஆப் ஜெனரல் எஜுகேஷன் என்ற ஒரு குழுவில் கல்வித் துறையில் ஈடுபட்டவர்கள் இருந்து அவ்வப் போது ஆலோசனை கூறி அதன்மூலம் முடிவுகள் எடுக்கலாம் என்ற யோசனையும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

[1967 நவம்பர் 27

திரு. கே. விநாயகம்: இதுவரையில் கல்வித்துறையில் என்ன தவறு கண்டிருப்பதாக இந்த முடிவுக்கு வந்து வைஸ்-சான்சலரும் மற்ற எமினன்ட் எஜுகேஷனிஸ்ட்ஸ், சட்டமன்ற உறுப்பினர்கள், அல்லது கல்வியிலே அக்கறை கொண்டவர்கள் எல்லாம் சேர்ந்து அதைத் திருத்தி அமைக்க வேண்டுமென்ற முடிவுக்கு அரசாங்கம் ஏன் வந்தது? அத்தகைய சிக்கல் எப்பொழுது எழுந்தது? என் மாறுதல் செய்ய அரசாங்கம் விரும்புகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தக் கேள்வியினுடைய நோக்கம் அதுவல்ல. ஆய்ந்து பார்ப்பதற்காக என்று கேள்வியில் இருக்கிறது. ஆனால், அப்படி ஆய்ந்து பார்ப்பதற்காக குழு அமைக்கும் நோக்கம் இல்லை என்று முன்பே குறிப்பிட்டேன். கன்சல்டேடிவ் கமிட்டி என்பது அவ்வப்போது உள்ள நிலைமைகளை ஆராய்ந்து ஆலோசனை சொல்வதற்கு பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் கொண்டதாக இருக்கும். அட்வைசரி போர்ட் ஆப் ஜெனரல் எஜுகேஷன் என்பதை வைப்பதன் மூலம் கல்வித் துறையிலே உள்ள பற்பல நிலைகளை ஆராய்ந்து பார்த்து முடிவு எடுக்கலாம். அவையெல்லாம் இதற்காக அமைக்கப்பட்ட கமிட்டிகள்தான். முன்னால் இருந்ததை ஆய்ந்து அதிலே தவறு கண்டுபிடிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் அவை அமைக்கப் படவில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித்துறையில் தாய் மொழி, வட்டார மொழியாகிய தமிழ் மொழியின் வளர்ச்சியைக் கருதித் தனித் தமிழ் பயின்றோருக்குத் தக்க வழி வகை செய்யும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா? அப்படி ஏதேனும் இருந்தால் அது எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை.

Dr. H. V. HANDE: Does not the Government think that it is absolutely necessary to have such a Committee, especially in view of the fact that the S.S.L.C. course in Madras State and another neighbouring State, Andhra, is for a period of 11 years, whereas in Mysore and Kerala, it is a 10 year course? As we have a 11 year course in Madras, by the time a student finishes his Degree course, he will have to study for 15 years, whereas the students from the other two neighbouring States would have to spend only 14 years for obtaining their Degree. In view of this, the students of this State are under a great handicap when they compete for All India Services along with the students from other States. Under the circumstances, will the Government consider the desirability of constituting an Expert Committee, so that such anomalies can be rectified and the best students of Madras are given the same chances that are given to the students of the neighbouring States?



1967 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிவரை சில மாநிலங்களில் 10 வகுப்புகளும், சில மாநிலங்களில் 11 வகுப்புகளும் இருக்கின்றன. இன்னும் சில மாநிலங்களில் 12 வகுப்புகள் இருக்கின்றன. கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலே இதுகுறித்து பேசப்பட்டது. தமிழகத்தைப பொறுத்தவரையில் 11 வகுப்புகள்தான் பொருத்தமாக இருக்கும் என்று அழுத்தம் திருத்தமாக தெரிவிக்கப் பட்டிருக்கிறது. பல மாநிலங்களில் பல முறைகள் கையாளப் பட்டு வருகின்றன. அதற்காகத் தனியாக எக்ஸ்பர்ட் கமிட்டி வைக்க வேண்டியதில்லை. கன்சல்டேடிவ் கமிட்டி, அட்வைசரி போர்ட் இவைகள்கூட இது பற்றிய முடிவுகள் எடுக்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: கல்விக்கு நிபுணர் குழுவாக இருந்தாலும் சரி, கன்சல்டேடிவ் கமிட்டியாக இருந்தாலும் சரி, அந்தந்த மட்டத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. ஆராய்ச்சி செய்து ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்படக்கூடிய நோக்கிலே இது கல்லூரி மட்டத்தில் இருப்பதாக இருந்தால், சர்க்காரே அதை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரம் உண்டா? அல்லது கிடையாதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அந்த ஆலோசனைக் குழுக்களெல்லாம் கல்வித்துறையினுடைய எல்லா மட்டங்களையும் ஆராய்ந்து பரிந்துரை செய்யத்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதிலே பல்கலைக்கழகத்திற்கு சில உரிமைகள் இருக்கின்றன. அரசாங்கத்திற்கு சில உரிமைகள் இருக்கின்றன. அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்ய இந்தக் குழு எல்லா மட்டத்திலும் பரிசிலனை செய்கிறது.

திரு. வி. டி. அண்ணாமலை: ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் போதிய வித்தியாசம் தெரியாத முறையில் இருக்கின்றன என்ற காரணத்தினாலே, ஆசிரியர்களுக்கு பண்டைக்கால முறைப்படி கோட்டும், தலைப்பாகையும் அணிவதற்கு அரசாங்கம் ஆணையிடுமா அல்லது குழுவின் மூலம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை.

Thiru K. VINAYAKAM: May I know whether this Expert Committee has been constituted and if so, who the Members of this Committee are? May I also know what are the terms of reference to this Committee and what kind of work, if any, they have turned out so far?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, கன்சல்டேடிவ் கமிட்டி சென்ற 5, 6 ஆண்டுகாலமாக இருந்து வந்தது. பொதுத் தேர்தல் நடந்து முடிந்தபோது அதனுடைய பீரியட் ஓவர் ஆகிவிட்டது. அதற்குப்பிறகு கன்சல்டேடிவ் கமிட்டி நியமிக்கவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டது.

7, 8 மாதங்கள் நிலைமைகளைப் பார்த்தபிறகு, கல்வித் துறையின் பிரச்சினை பற்றி 7, 8 மாத அனுபவத்திற்குப் பிறகு அமைப்பது நல்லது என்ற வகையில் கருதி, அந்த வகையில் இனிமேல் அது அமைக்கப்படும். அமைக்கப்பட்ட பிறகு, யார் யார் அங்கத்தினர்கள் என்று தெரிவிக்கப்படும்.

**திரு. க. ர. நல்லசிவன்** : முன்பு இருந்த அரசாங்கத்தின் கல்விக் கொள்கையைப் பரிசீலிப்பதற்காக இந்தக் கமிட்டியா? அல்லது புதிய சர்க்காருடைய கொள்கையைப் பரிசீலனை செய்வதற்காக இது நியமிக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : ஒரு குறிப்பிட்ட நோக்கத்தைப்பற்றி முடிவு செய்வதற்காக இது அமைக்கப்படவில்லை. கன்சல்டேடிவ் கமிட்டி, அட்வைசரி போர்ட் இவையெல்லாம் அவ்வப்போது கல்வித்துறையிலே ஏற்படுகிற பிரச்சனைகளையும் பரிசீலனை செய்வதற்கு உதவும் அந்த முறையில்தான் அமைக்கப்படுகின்றன.

### மதிய உணவுத் திட்டம்

454 **வினா.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்** : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜனத் துறையினரால் நடத்தப்படும் மதிய உணவுத் திட்டம் போல கல்வித் துறையினரால் நடத்தப்படும் மதிய உணவுத் திட்டத்திற்கு மான்யம் தலா 15 நயா பைசாக்களாக உயர்த்த உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) இல்லையெனில், அத்திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு மேற்கொண்டுள்ள வழி வகைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: ஒரு சாப்பாட்டுக்கு 6 காசு வீதம் இப்பொழுது கொடுக்கப்பட்டுவரும் மதிய உணவு மான்யத்தை உயர்த்த உத்தேசமில்லை. தற்பொழுதுள்ள மதிய உணவுத் திட்டம் பொதுமக்களின் ஆதரவுடன் செவ்வனே செயல்பட்டு வருகிறது.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்** : தலைவர் அவர்களே, இந்த மதிய உணவுக்காக வெல்பேர் இலாகாவினால் கொடுக்கப்படுகிற தொகைக்கும் பஞ்சாயத்து யூனியனால் கொடுக்கப்படுகிற தொகைக்கும் பாதிக்குமேல் வித்தியாசம் இருக்கிற காரணத்தினால், பள்ளிகளில் படிக்கிற மாணவர்கள் விரும்பி பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளுக்கு வருவதில்லை. வெல்பேர் இலாகாவின் கீழுள்ள பள்ளிகள் எங்கே இருக்கின்றன என்று தேடிக்கொண்டு போகிறார்கள். இந்த நிலையை தவிர்ப்பதற்காக பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கிற பள்ளிகளுக்கு 15 காசு கொடுப்பதற்கு. இது வரைக்கும் இல்லா விட்டாலும், இனிமேலாவது இந்த அரசு வழி வகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, மதிய உணவுத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் கிட்டத்தட்ட ரூ. 2 கோடி அரசாங்கத்தின் சார்பாக மாநிலம் முழுவதும் செலவழிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் சார்பாக ஆறு காசுகளும் பொதுமக்களின் சார்பாக இரண்டு காசுகளும், ஊராட்சி மன்றங்களின் சார்பாக இரண்டு காசுகளும், ஆக மொத்தம் 10 காசுகளும் கொடுக்கப்பட்டு, "கேர்" நிறுவத்தினர் கொடுக்கும் உணவுப் பொருள்களையும் பயன்படுத்துவதன் மூலம், இது சரிக்கட்டப்பட்டு வருகிறது. மூன்றில் ஒரு பகுதி மாணவர்கள் மதிய உணவுத் திட்டத்தின் பயனைப் பெறுவதற்கு வழிவகைகள் காணவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுக்கொண்டு வருகிறது. ஆகவே, இந்தத் திட்டம் இப்பொழுது மூன்றில் ஒரு பகுதி மாணவர்கள் பயன் அடையத்தக்க அளவுக்கு இருக்கிறது. 15 காசுகள் தரலாம் என்றால், மாணவர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்கவேண்டிய கட்டம் ஏற்படக் கூடும். அரசாங்கம் செலவழிக்கக்கூடிய தொகையை அதிகமாக ஆக்கவேண்டியிருக்கும். இப்பொழுது இரண்டு கோடி ரூபாய் அந்தத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்படுகிறது. அதற்குள்ளேயே சரிக்கட்டவேண்டும் என்பதுதான் நோக்கம். ஆங்காங்குள்ள குழுக்கள் சிறிது முயற்சி எடுப்பதன் காரணமாக அதிக நிதி சேர்த்து, சில பல இடங்களில் சிறப்பாகவும், செம்மையாகவும் நடத்தி வருவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். தரப்பட்ட வேண்டிய கட்டணத்தை உயர்த்தினால், மாணவர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்கவேண்டிவரும்.





**திரு. நா. காசிராமன்** : 1950-ம் ஆண்டு வாக்கிலே ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின்கீழ் அப்பொழுதிருந்தே ஒரு மாணவனுக்கு 6 பைசா கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், எவ்வளவு குறைவாகவும், சிக்கனமாகவும் செய்தாலும், ஒரு மாணவனுக்கு 11 பைசாவுக்குக் குறைந்து மதிய உணவு தயார் செய்ய முடியவில்லை. அப்படியிருக்கும்பொழுது நகரசபைகளும், பஞ்சாயத்துக்களும் இதற்காக அதிகமான தொகை செலவழிக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுதுள்ள விலைவாசியை அனுசரித்து, அந்தத் தொகையை சற்று கூடுதலாக்கித் தருவதுபற்றி இந்த அரசாங்கம் யோசிக்க முன் வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போன்று 11 காசு வைத்துக்கொண்டாலும், இப்பொழுது 10 காசு கொடுக்கப்பட்டு வருகிறது. "கேர்" நிறுவத்தினர் கொடுக்கும் உணவுப் பொருள்களையும் சேர்க்கும்பொழுது அந்த அளவுக்கு வரக்கூடும். அந்தத் தொகையை அதிகமாக்கினால், மாணவர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியிருக்கும். ஆங்காங்கு இருக்கும் குழுவும், பொதுமக்களும் கொஞ்சம் முயற்சி எடுத்துக் கொண்டு தொகை வசூலித்து, இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த முன் வந்தால் தேவையான அளவுக்கு இதைச் சரிக்கட்டக் கூடும். அதிகத் தொகை கொடுக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், இதிலே அதிகமான மாணவர்கள் ஈடுபடுத்தப்படவேண்டும். அதற்கு அரசாங்கத்தின் நிதி வசதி இடம் தரவில்லை.

[1967 நவம்பர் 27

திரு. எஸ். முருகையன் : மேஜர் பஞ்சாயத்துக்களில் அரிஜன நல இலாகாவினால் நடத்தப்படக்கூடிய பள்ளிகளும் இருக்கின்றன, மேஜர் பஞ்சாயத்துக்களால் நடத்தப்படக்கூடிய பள்ளிகளும் இருக்கின்றன. ஒரே ஊரில் அரிஜனநல இலாகா பள்ளிக்கு 15 காசும், அதே நேரத்தில் மேஜர் பஞ்சாயத்து பள்ளிக்கு 6 காசும் கொடுக்கப்படுகிறது. இந்தப் பாகுபாட்டை மாற்றி முழுவதும் அரிஜனங்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள பள்ளிக்கு 15 காசு வீதம் உடனடியாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதிலே என்ன வேறுபாடு இருக்கிறது என்றால், சாதாரணமாக மற்றைய பள்ளிகளில் நடைபெறுகிற மதிய உணவுத் திட்டம் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கிற குழுக்களின் மேற்பார்வையின்கீழ் நடத்தப்பட்டு வருகிறது. அரிசன நல இலாக்கா நடத்தும் பள்ளிகளில் கண்டிராக்டர்கள் மூலம் இந்தத் திட்டம் நடைபெறுகிறது. அதாவது பொதுமக்களிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் வசூலிக்காத வகையிலே, இந்தத் தொகையை வைத்துக்கொண்டே கண்டிராக்டர்கள் மூலம் உணவு தயார் செய்து தரப்படுகிறது. அதன் காரணமாகத்தான் அந்தப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், 15 காசு கொடுக்கப்பட்டு வருகிறது அதையும் ஒரு குழுவிடம் ஒப்படைத்து, சிறப்பாக நடைபெறும்படி அமைக்கலாமா என்ற ஆலோசனை இருந்து கொண்டு வருகிறது.

திரு. கே. சகாதேவக் கண்டர் : பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்படும் 2 பைசா தொகையும் சரியான முறையில் பஞ்சாயத்துக்கள் கொடுப்பதாகத் தெரியவில்லை. அந்த 2 பைசாவும் பஞ்சாயத்து யூனியனே கொடுத்துவிட்டு, பஞ்சாயத்து யூனியனே ஏற்றுக்கொள்ள அரசாங்கம் அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப்பற்றி தகவல் இல்லை. கனம் உறுப்பினர் கருத்து ஆலோசிக்கப்படும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : இந்த மதிய உணவுத் திட்டத்தின் மூலம் நமது மாநிலத்தில் எவ்வளவு பேர்கள் பயன்பெறுகிறார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைப்பற்றி தகவல் இல்லை. ஆனால் நான் முன்பு கூறியபடி, மூன்றில் ஒரு பகுதி மாணவர்களாவது, துவக்கப் பள்ளிகளில் படிக்கிறவர்கள், இந்த மதிய உணவுத் திட்டத்தின் மூலம் பயன் பெறவேண்டும் என்ற திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இந்த மதிய உணவுத் திட்டம் எங்கு பார்த்தாலும் சரியாக நடக்கவில்லை, பல ஊழல்கள் இருக்கின்றன, அதைக் கண்காணிக்க முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை கைவிட்டு வேறு ஏதாவது வழியில் இதைப் பயன்படுத்தினால் நன்றாக இருக்காதா என்பதை அரசாங்கம் யோசிப்பார்களா ?



1967 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பலரும் பல வகையில் ஆதரித்துத்தான் வருகிறார்கள், அதை எப்படி எப்படி சீர்திருத்தலாம், எப்படி செம்மைப்படுத்தலாம் என்பதைப்பற்றி, பல ஆலோசனைகள் தெரிவிக்கப்படுகின்றன. இந்த திட்டத்தைக் கைவிடுகிற யோசனை இல்லை. இதைச் செம்மைப்படுத்த வேண்டும், சீர்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலே "கேர்" நிறுவனத்தினர் உதவி செய்ய முன் வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பூவிருந்த வல்லியை ஒட்டிய பகுதியிலே மதிய உணவு மையத் திட்டம் துவக்கப்பட்டு 56 பள்ளிகளில் 46 பள்ளிகளுக்கு இரண்டு வேன்களை வைத்து, தினமும் உணவு கொண்டுபோய் வழங்கும் திட்டம் ஓரளவுக்கு வெற்றிகரமாக நடந்துவருகிறது என்ற கருத்து வந்துகொண்டிருக்கிறது. மேலும் அதை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துகிற முயற்சியை அரசினர் மேற்கொண்டால், "கேர்" நிறுவனத்தினர் அதற்காக ஆதரவு தர முன் வந்திருக்கிறார்கள்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: கிராமப் புறத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் சில அதிகாரிகள் பார்வைக்கு வரும்போதுதான் உணவு கொடுக்கப்பட்டு வருகிறது. மற்றைய காலங்களில் உணவு கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது என்பது பழக்கத்தில் இருக்கிறது. பொதுவாக ஆசிரியர்களும் சில இடங்களில் வசூல் செய்வதற்கே சென்று விடுகிறார்கள். அதன் காரணமாக கல்வித் தரம் குறைவதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆகவே, இந்த மதிய உணவுத் திட்டத்திற்காக சர்க்கார் கொஞ்சம் கூடுதலாக பணத்தை ஒதுக்கி, இந்தத் திட்டத்தை மேலும் நல்ல முறையில் நடத்துவதற்கு உதவி செய்வது பற்றி யோசிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே இம்மாதிரி கேள்விக்கு விடை அளித்திருக்கிறேன். ஆகவே, அது மாதிரி கூடுதலாக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும், நிதி நிலைமை இடம் கொடுக்கவில்லை. மேலும் தொகையை கூடுதலாக்க வேண்டுமென்றால் மாணவர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியிருக்கும். ஆங்காங்கு இந்த மதிய உணவுத் திட்டம் செம்மையாகவும் சீராகவும் நடைபெறவேண்டும் என்ற ஆர்வம் எல்லோருக்கும் இருக்கிறது. பொதுத் தொண்டு செய்கின்றவர்களைக் கொண்ட குழுக்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. அதைச் செம்மையாகப் பயன்படுத்திக் கொண்டு, பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள் அத்தனைபேர்களும் இதில் அக்கறையும், ஆர்வமும் காட்டினால், இந்தத் திட்டம் மேலும் செம்மைப்படுவதற்கு வழி ஏற்படக்கூடும்.

திரு. எம். சுரேந்திரன் : மதிய உணவுத் திட்டம் ஆரம்பித்த பொழுதிலிருந்தே அதன் பிரயோசனத்தைவிட, பிரசாரத்திற்கே தான் பிராதானியம் கொடுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும், இப்பொழுதும் அதே நிலைமையை வைத்துக் கொண்டிருப்பது

இந்த அரசுக்குப் பெருமை அளிக்காது. குறைந்த அளவு பேர்களுக்கு மதிய உணவு அளித்தாலும், உபயோககரமாகக் கொடுப்பதற்கு ஏதாவது ஒரு வழி கண்டுபிடிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதை அரசாங்கம் செய்யுமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மாணவர்களுக்குத் தரப்படுகிற மதிய உணவுத் திட்டம் செம்மையான முறையில் நடைபெறவேண்டுமானால், சர்க்கார் கொடுக்கும் மானியம் அல்லது பஞ்சாயத்து யூனியன் கொடுக்கிற உதவித் தொகை இவைகளோடு மட்டும் இருந்தால், அது நல்ல முறையில் இயங்க முடியாது. அந்தந்த ஊரிலுள்ள பொதுமக்கள் தொண்டர்கள் அதற்காக தங்கள் தங்களுடைய நிலத்தை ஒப்படைத்து, அவர்களும், மற்றவர்களும் இம்மாதிரி நல்ல பொதுக் காரியங்களுக்கு உதவுவது நல்ல முறையில் பயன்படக்கூடும். பூவிருந்தவல்லி பக்கத்தில் அமெரிக்க ஸ்தாபனத்தாரும் ஈடுபட்டு இந்தத் திட்டம் செம்மைப்படுத்தப் பட்டிருப்பது பற்றி நமது கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அமெரிக்க ஸ்தாபனத்தார் முன்வருவதற்கு முன்னாலேயே, என்னுடைய காஞ்சிபுரத்தில் பள்ளி மதிய உணவுத் திட்டத்திற்காக அந்த இடத்திலுள்ள பொதுமக்களோடு தொடர்பு கொண்ட ஒரு தலைவர் தன்னுடைய நிலத்தில் 5 ஏக்கர் நிலத்தை இந்த மதிய உணவுத் திட்டத்திற்கென்று நன்கொடையாகக் கொடுத்து, அதிலிருந்து வருகிற நெல்லை இந்தக் காரியங்களுக்கு பயன்படும்படி செய்திருக்கிறார்கள். அதனால் இந்தத் திட்டம் அந்த இடத்தில் செம்மையாக நடக்கிறது. நம்முடைய மதிப்பிற்குரிய கும்பகோணம் தொகுதி உறுப்பினர் தக்க முயற்சி எடுத்துக்கொண்டு, தஞ்சாவூர் ஜில்லாவில் நிறைய நிலங்களை இந்தத் திட்டத்திற்குக் கொடுத்து உதவினால், இதைச் செம்மையான முறையில் நடத்த முடியும்.

* 455 Q.—THIRU K. VINAYAKAM : }<br>THIRU N. S. V. CHITHAN : } Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether there is any proposal to supply vitamin-rich food for pupils under the midday meals programme; and

(b) if so, the extra financial implications of the same?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. விநாயகம் :** இப்பொழுது மாணவர்களுக்கு தரப்படுகிற மதிய உணவு சத்தில்லாமல் இருப்பதாகவே பலரும் கருதுகிறார்கள். அதிக சத்துள்ளதாக இருந்தால், எந்த நோக்கத்தோடு இந்தத் திட்டத்தை வைத்திருக்கிறோமோ, அந்த நோக்கம் வெற்றிபெறும். 'வைடமின் ரிச் ஃபுட்' என்று சொல்லப்படுகிற உணவுப் பொருள்களை 'கேர்' ஸ்தாபனத்தாரிடமிருந்து அதிகமாகப் பெறுவதற்கும், அதே நேரத்திலே, பற்றாக்குறை இருப்பதால், பொதுமக்கள் முன் வந்து உதவிகள் செய்யவேண்டும் என்று



கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்களே அந்த வகையில் செய்ய வேண்டும். ஆசிரியர்களே வேலை நேரத்தில் இந்த வேலைகளில் ஈடுபடுவதால், வேலையை விட்டு விட்டு, வசூல் செய்வதற்கும், சமையல் செய்வதற்கும் ஈடுபட்டிருக்கிறார்கள். பள்ளியில் உள்ள ஒரு ஆசிரியர் இப்படிப்பட்ட சமையல் வேலைக்காக காலையிலிருந்து சாமான்களை சேர்த்து, அடுப்பை மூட்டி, கொதித்த பிறகு இறக்கிவைத்து, அந்த வேலைகளைச் செய்கிறார்கள். பள்ளி நேரத்தை இப்படிச் செலவு செய்துவிடும் குறையைத் தீர்க்க அரசாங்கம் என்னென்ன யோசனைகள் செய்கிறது?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அரசாங்கத்திற்கு இப்படி ஆசிரியர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள், ஈடுபடுகிறார்கள் என்பது தெரியும். ஆனால், அது அரசாங்கத்திற்குப் பெருமை என்று கூறவில்லை. அதை நிவர்த்திக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்கு அக்கறை இருக்கிறது. அது சம்பந்தப்பட்ட வரை, மறுதரமும் காஞ்சீபுரத்தைப் பற்றிக் குறிப்பிட அவை அனுமதிக்க வேண்டும். காஞ்சீபுரத்தைப் பொறுத்த வரையில், அங்கே இந்தப் பணிகளில் ஆசிரியர்கள் ஈடுபடுவதில்லை. நாங்கள் ஒரு தனிக் குழு அமைத்து, மேல் அவை அங்கத்தினர் திரு. தங்கவேலு முதலியார் அவர்கள் தலைமையில் செம்மையாக நடைபெற்று வருகிறது. சமையல் வேலைக்கு என்று தனியாக ஒரு ஆள் போட்டு, ஒரு பொது இடத்தில் சமையல் செய்து, ஒவ்வொரு பள்ளிக்கும் தனித் தனிப் பாத்திரங்கள் வைத்து, சூடு ஆறாமல் வைத்து, வண்டி மூலம் கொடுத்தனுப்பிக் கொண்டு இருக்கிறோம். காஞ்சீபுரத்தில் முடிவது, திருத்தணியில் முடியலாம். சட்ட மன்ற உறுப்பினர்கள் முன் வந்து உதவி செய்தால், ஆசிரியர்கள் இந்த வேலைகளில் ஈடுபடாமல் இருக்கச் செய்யலாம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது கனம் உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டைப் பொறுத்த அளவில் அந்த நிலை பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. அதை மெல்ல மெல்ல மாற்றி வருகிறோம். சமையல் வேலையில் எந்த ஆசிரியரும் ஈடுபடுத்தப்படவேண்டாம் என்றும், அதற்கு என்று தனி ஆள் போட்டு, அந்த வேலைக்கான ஊதியத்தையும், இந்த நிதியிலிருந்தே கொடுக்கலாம் என்றும் முயற்சிக்கப்படுகிறது. சத்து உணவுபற்றிக் கூறினார்கள். ஹோம் சயன்ஸ் பிரிவுகள் மூலம் ஆராய்ந்து, எவ்வளவு சத்துள்ள உணவு வேண்டும் என்று ஆராய்ந்து, "கேர்" நிறுவனத்தார், ப்ரொடின் கலோரி எல்லாம் இவ்வளவு இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டு, அந்த அளவுக்கு கணக்கிட்டு, கலந்து கொடுக்கிறார்கள். உணவுச் சத்து குறையாமல் பார்த்துக்கொள்ளுகிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, மதிய உணவுக்கு நிதி வசதி குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஒவ்வொரு வகுப்பிற்கும் பாட புத்தகங்களை அரசாங்கமே அச்சிட்டு விற்று அதில் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு, இந்தக் குறையை தீர்க்க சர்க்கார் முன் வருமா?

[1967 நவம்பர் 27

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* பாட புத்தகங்களை அச்சிட சர்க்கார் முன்வந்ததே, பாட புத்தகங்களை அச்சிடுவோர் அதிக லாபம் அடிக்கிறார்கள், அதைத் தவிர்க்கவேண்டும் என்பதற்காகத்தான். நாமும் இப்பொழுது லாபம் சம்பாதிக்கலாம் என்றால், அதை அவை ஏற்றுக்கொள்ளுமானால் அந்த யோசனையை நான் கவனிக்கத் தயார்.

*திரு. பே. மலைச்சாமி:* தலைவர் அவர்களே, மதிய உணவுத் திட்டத்தின் வளர்ச்சிக்காக, எந்த எந்த நாடுகள், எந்த எந்த வகைப் பொருள்களைப் பரிசாக வழங்குகின்றன என்பதை அறியலாமா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, முக்கியமாக அமெரிக்காவிலிருந்து, 'கேர்' நிறுவனத்தார் தான் இப்பொழுது மதிய உணவுக்கான உதவிகளைச் செய்கிறார்கள். அதைப் பெற்றுவருகிறோம். மேலும், என்னென்ன உதவிகள் என்பதைப் பற்றி விவரமாக வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துச் சொல்லலாம்.

*ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :* பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனுடைய அற உணர்வை, அருள் உணர்வை மக்கள் வளர்ச்சிக்கான நல்ல பணியில் ஈடுபடுத்த நம்முடைய முதல் அமைச்சர் சீரணிப்படை அமைத்திருக்கிறார்கள். அது, நடுப்பகல் உணவுக்கான உதவிகளை மக்களிடத்திலிருந்து பெற உறு துணையாக இருந்து பணியாற்ற, நல்லதொரு திட்டத்தை சீரணிப்படையிடம் கொடுக்க அமைச்சர் முயற்சிப்பார்களா ?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* சீரணிப்படையினர் செம்மையான முறையில் வேலை செய்ய வேண்டும் என்று, அவர்களுக்கும் பணத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாமல் வைத்திருக்கிறேன்.

*திரு. செ. பாலசுப்பிரமணியன் :* 'யூனிசெப்' என்கிற நிறுவனம் குழந்தைகள் நலனுக்காகவே இருக்கிறது. அவர்களிடமிருந்து பெற்று, ஏதாவது விடமின் டாப்லெட்ஸ், அடெக்ஸலின் டாப்லெட்ஸ் போன்ற மாத்திரைகளைக் கொடுக்க யோசனை உண்டா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* அது பற்றித் தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் கொடுக்கலாம்.

*திரு. கரு. சீமைச்சாமி :* தலைவர் அவர்களே, மதிய உணவுத் திட்டத்திற்கு காஞ்சிபுரம் வழிகாட்டுகிறது என்று அமைச்சர் குறிப்பிட்டார்கள். ஐந்து ஏக்கர் நிலம் கொடுத்தார் ஒரு பெரியவர் என்றும் சொன்னார்கள். அந்தப் பெரியவர் யார் என்று அறியலாமா ?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* மேல் அவை உறுப்பினராக இருந்து, இப்பொழுது காஞ்சிபுரம் முனிசிபாலிடியின் தலைவராக உள்ள திரு. அ. க. தங்கவேலு அவர்கள்.



1967 நவம்பர் 27]

## ஆசிரியர்கள்

* 456 வினா.—*திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :* மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடும்பக் கட்டுப்பாடு, சிறு சேமிப்பு, மதிய உணவிற்கு நன்கொடை திரட்டுதல், பள்ளிச் சீரமைப்பிற்கு பொருள்கள் நன்கொடை திரட்டுதல் போன்ற பள்ளி அலுவல்களுக்குப் புறம்பான திட்டங்களில் ஆசிரியர்கள் ஈடுபடுவதினின்று தடுக்கப்பட்டு, போதனை முறையில் மட்டும் முழுக்கவனத்தையும் செலுத்த வகை செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* பள்ளி அலுவல் நேரங்களில் ஆசிரியர்கள் குடும்பக்கட்டுப்பாடு, சிறு சேமிப்பு, மதிய உணவு, பள்ளிச் சீரமைப்பு போன்ற திட்ட வேலைகளில் ஈடுபடக் கோரப்படுவதில்லை.

*திரு. நா. காசிராமன் :* மதிய உணவு பணிகளில் ஆசிரியர்கள் ஈடுபடுவதில்லை என்று சொன்னார்கள். கும்பகோணத்தில், 1,500 மாணவர்களுக்கு ஒரே மையமாக வைத்து வேலை செய்கிறோம். யாரும் நிலம் கொடுக்காவிட்டாலும், நகரசபையின் சார்பில் ஏற்றுச் செய்கிறோம். எல்லா நகரங்களிலும் மையமான இடத்தில் வைத்துச் செய்தால் நலமாக இருக்கும். அதைப் பற்றி அரசு யோசிக்குமா?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:* கல்வி அமைச்சர் அளித்த பதிலிலிருந்து, சமையல் வேலையில் ஆசிரியர்கள் ஈடுபடுவது அதிகமாக இல்லை, அடியோடு தவிர்க்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. நான் குறிப்பிட்டது போல, கும்பகோணம் நகரசபைத் தலைவர் குறிப்பிட்டது போல, கும்பகோணம், காஞ்சிபுரம் போல மற்றவர்களும் செம்மையாக வேலை செய்ய வழி கோல வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that teachers are given extra work and practically they have to spend most of their time in attending to it, will this Ministry take this opportunity to give an assurance on the floor of the House whether they are going to grant the City Compensatory Allowance to the teachers also?

THE HON. THIRU C. N. ANNADURAI : Though there is no immediate connection between the two, the hon. Members know that the City Compensatory Allowance has been granted to teachers.

THIRU K. VINAYAKAM : Arising out of the answer given by the Hon. Chief Minister. . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* வருகிற புதன்கிழமையன்று கல்வியைப் பற்றி நீண்ட விவாதம் வரவிருக்கிறது. அப்பொழுது பேசிக்கொள்ளலாமே.

THIRU K. VINAYAKAM : My question arises out of the answer given by the Hon. Chief Minister. The Hon. Chief Minister has been pleased to state on the floor of the House that the City Compensatory Allowance has been granted to the teachers. Is he aware of the fact that it is not ganted to the teachers employed by private managements in the City of Madras?

THE HON. THIRU C. N. ANNADURAI : I am sorry the hon. Member is not following the proceedings in the newspapers. I have assured them that.

### மின் இறைவை பாசனத் திட்டங்கள்

*457 வினா—திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு முடிய எத்தனை மின் இறைவை பாசனத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன?

(இ) நடப்பு ஆண்டில் மேலும் எத்தனை திட்டங்கள், எங்கெங்கே நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு முடிய ஒன்பது (9) மின் இறைவைப் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன ?

(இ) 6 (ஆறு) திட்டங்கள் நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளன.

(1) ஒக்கநாடு கீழையூர், ஒரத்தநாடு வட்டம்,

(2) ஐமூர், திருத்துறைப்பூண்டி வட்டம்.

(3) வளவனாறு விஸ்தரிப்பு, திருத்துறைப்பூண்டி வட்டம்.

(4) பாங்கல், திருத்துறைப்பூண்டி வட்டம்.

(5) விளாங்காடு. திருத்துறைப்பூண்டி வட்டம்.

(6) கீழ்த்தங்கையாறு, திருத்துறைப்பூண்டி வட்டம்.

திரு. செ. பாலசுப்ரமணியன் : வேளாங்கண்ணி இறைவைத் திட்டத்தைப் பொறுத்த வரையில், நல்ல நீரோடு கடல் நீர் புகுந்துவிடுவதால், மூன்று வருடங்களாக விவசாயிகளுக்குப் பிரயோசனம் இல்லாமல் இருந்தது. இப்பொழுதுதான் பயன் அடைந்திருக்கிறார்கள். இம்மாதிரி ஏற்படாமல் இருக்க, அரசாங்கம் இனியாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது செய்தது போலவே தொடர்ந்து செய்யும்.

திரு. கரு. சீமைச்சாமி : இதற்காகச் சர்க்காரால் கொடுக்கப் பட்ட கடன் தொகை எவ்வளவு ? இதனால் எத்தனை ஏக்கர் நிலங்கள் அதிகமாக சாகுபடிக்கு வரும்?





மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முதலில் நிறைவேற்றப்பட்டுள்ள ஒன்பது திட்டங்களின் ஆயக்கட்டுகளைக் குறித்துத் தனித் தனியாகக் குறிப்பிடுகின்றேன். ஆய்மூர் விசையேற்றத் திட்டத்தின் மூலம் 717 ஏக்கராவிற்கும், பாமணி முள்ளியாறு திட்டத்தின் மூலம் 740 ஏக்கராவிற்கும், சிவாம்பாள் பட்டணம் திட்டத்தின் மூலம் 350 ஏக்கராவிற்கும், முள்ளியாறு விசையேற்றத் திட்டத்தின் மூலம் 1,539 ஏக்கராவிற்கும், ஆயக்காரம்புலம் திட்டத்தின் மூலம் 750 ஏக்கராவிற்கும், வளவனாறு திட்டத்தின் மூலம் 1,970 ஏக்கராவிற்கும், தென்னடாறு திட்டத்தின் மூலம் 1,040 ஏக்கராவிற்கும், வேளாங்கண்ணி விசையேற்றத் திட்டத்தின் மூலம் 2,264 ஏக்கராவிற்கும், விழுந்தமாவடி திட்டத்தின் மூலம் 1,611 ஏக்கராவிற்கும் பயன்பட்டிருக்கிறது. இவற்றிற்கான தொடக்கச் செலவுகளையெல்லாம் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. வழக்கமான தண்ணீர்த் தீர்வை, நடைமுறைச் செலவுகள் முழுவதும் இவற்றினால் பயன்பெறுகிறவர்களிடமிருந்து விகிதம் வைத்து வசூலிக்கப்படுகிறது.

திரு. கே. பி. எஸ். மணி : இந்த இறைவைத் திட்டத்திலே சாகுபடி செய்கிற விவசாயிகளுக்கு அதிகமான செலவு ஆகிறது. இன்ஜின் போட்டு இறைக்கும்போது, அதற்கு வேண்டிய எண்ணெய் போன்ற வகைகளில் செலவு ஆகிறது. ஆகவே, வரி விதிக்கும்போது, மேற்படி செலவுக்கான தொகையைக் குறைத்துக் கொண்டு, வரி விகிதத்தைக் குறைத்து வசூலிக்க அரசாங்கம் முயற்சிக்குமா ? மேலும், தஞ்சை மாவட்டத்தில் கோள்ளிடம், உப்பனாறு போன்ற ஆறுகளைப் பொறுத்தும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தஞ்சை மாவட்டத்தில் மேலும் 17 திட்டங்கள் ஆலோசனையில் உள்ளன. அவைகளில் ஒன்றாக இது இருக்குமானால், அதுபற்றி யோசிக்கப்படும்.

செலவு அதிகம் ஆகிறது என்று கனம் உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அதைப் போலவே, மின் இறைவைப் பாசனத் திட்டங்களை வைப்பதற்கும் அரசாங்கத்திற்குத் தொடக்கச் செலவு அதிகம் ஆகிறது. விவசாயிகளிடமிருந்து நாம் கோருவது நடைமுறைச் செலவும் தண்ணீர்த் தீர்வையும்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்து, மூல வினாவையொட்டிய துணை வினா ஒன்றை திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கேட்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : எத்தனை வருட காலத்தில் இந்தப் பணம் வசூலிக்கப்படுகிறது ? அப்படி வசூலித்ததற்குப் பிறகு, அது அந்த விவசாயிகளுக்கே ஒப்படைக்கப்படுகிறதா ? அல்லது தொடர்ந்து வசூல் செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நடைமுறைச் செலவுகளுக்காக வசூலிக்கப்படுவது திரும்ப விவசாயிகளுக்கு ஒப்படைக்கப் படுவதில்லை.

திரு கே. விநாயகம் : தஞ்சை மாவட்டத்திலுள்ள வேளாங்கண்ணிக்கு அருகாமையில் இருக்கும் லிஃப்ட் இர்ரிகேஷன் ஸ்கீமை நாங்கள் நேரடியாகப் போய்ப் பார்த்தோம். அங்கிருக்கும் விவசாயிகள், அந்த லிஃப்ட் இர்ரிகேஷன் மூலமாகத் தரப்படுகிற தண்ணீர் உப்புத் தண்ணீராக இருப்பதால், நெற்பயிருக்கு அது பயன்படாது என்று சொல்லி, அதை மறுத்து, வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். என்றாலும், அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி, நாங்கள் கீழேயிருந்து தண்ணீர் எடுத்துவிட்டோம்; ஆகவே அதைப் பயன்படுத்தித்தான் தீரவேண்டும் என்று திணிப்பதை விடுத்து, அவர்களுக்கு இதிலேயிருந்து விதிவிலக்குத் தர முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : திணிப்பதை எப்போதுமே இந்த அரசாங்கம் ஏற்காது. அது மாத்திரம் அல்ல. அங்கிருந்த குறைபாட்டை இந்த அரசாங்கம் போக்குவதற்குப் பல முயற்சிகள் எடுத்து, ஓரளவு போக்கியும் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தஞ்சை மாவட்டத்தை யொட்டிய துணை வினாவை மாண்புமிகு உறுப்பினர் திரு. சீமைச் சாமி அவர்கள் கேட்கலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த மின் இறைவைப் பாசனத் திட்டம் நல்ல திட்டமாகும். இதை வைகையாற்றுப் படுகைகளில் எங்கெங்கு வசதிகள் இருக்கின்றனவோ அங்கே விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : எங்கெங்கு தேவை என்று கனம் உறுப்பினர் குறிப்பிட்டு, அதற்குத் தனியாகக் கேள்வி கேட்பாரானால், விவரம் சேகரித்துத் தர முடியும்.

*Madras—Tindicanam Bus*

* 458 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that the Government bus plying between Madras and Tindivanam was stopped for some time past;

(b) if so, the reasons therefor; and

(c) whether it has again been put into service?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : (அ) சென்னைக்கும் திண்டிவனத்திற்கும் இடையே தமிழக அரசுப் போக்குவரத்து பஸ் 1-10-1965 முதல் 8-11-1965 வரை, 39 நாட்கள் விடப்பட்டு, பிறகு நிறுத்தப்பட்டது.

(ஆ) போதுமான உபரி பஸ்கள் இல்லை என்று அப்போது காரணம் கூறப்பட்டது.

(இ) மறுபடியும் இப்பொழுது சென்னை-திண்டிவனம் அரசினர் பஸ் விடப்படுகிறது.





திரு. கே. விநாயகம்: சென்னையிலிருந்து திண்டிவனம் போகிற பஸ்ஸைப் பொறுத்தவரையில், ஒரு மாதச் செலவு எவ்வளவு, ஒரு மாத வருவாய் எவ்வளவு என்று கணக்கிட்டு, இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்ததில், அரசாங்கத்திற்கு அதன் மூலம் நஷ்டம் வருகிறதா, லாபம் வருகிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: இன்னும் அந்தக் கணக்கு சரிவரப் பார்க்கப்படவில்லை. ஆனால், நஷ்டம் வருவதாகக் கூற முடியாது.

திரு. க. இராமமூர்த்தி : இப்பொழுது அதிகப்படியான பஸ்கள் திண்டிவனத்திற்கு வருவதன் காரணமாக, அரசாங்க பஸ் நிலையத்தை விஸ்தரிப்பதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா? விஸ்தரிக்க முன்வருமா ? அத்துடன், பஸ் ஸ்டாண்டில் சிற்றுண்டி விடுதிக்கும் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அரசாங்க சார்பில் தனியாக பஸ் நிலையங்கள் நிறுவுகிற நேரத்தில், ஏற்கனவே நகராட்சியின் சார்பிலே இருக்கும் பஸ் நிலையங்களுக்கும் அதிகத் தொல்லை இருக்கக்கூடாது என்று கொள்கை வகுக்கப்பட்டு, அதன்படி ஏற்பாடுகள் செய்ய முடியுமா என்று கவனிக்குமாறு டைரக்டர் அவர்களிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கான தகவல் கிடைத்த பிறகு அதுபற்றி யோசிக்கப்படும்.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அரசாங்க பஸ்களைப் பொறுத்த வரையில், ஒரு புது பஸ் விடப்பட்ட நாளிலிருந்து அது எத்தனை ஆண்டுகள் வரை ஓடுவதற்கு லாயக்குள்ளது என்று காலம் ஏதாவது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : முன்பிருந்த காலகட்டத்தை விட இப்பொழுது ஓராண்டு அதிகமாகக் காலகட்டம் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : சென்னையிலிருந்து திண்டிவனம் வரையில் அரசினர் பஸ் விட்ட காரணத்தால் தனியார் பஸ் கட்டணம் குறைந்திருக்கிறது. அதேபோன்று செஞ்சிக்கும் திருவண்ணாமலைக்கும் சென்னையிலிருந்து அரசாங்க பஸ் விட அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : உரிய நேரத்தில் யோசிக்கப்படும்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : திண்டிவனத்திற்கும் சென்னைக்கும் இடையே விடப்பட்டிருந்த பஸ்கள், போதுமான பஸ்கள் இல்லாத காரணத்தால், நிறுத்தப்பட்டன என்று சொல்லப்படுகிறது. ஆனால், தனிப்பட்ட முதலாளிகளின் வருவாய் பாதிக்கப்படுகிறது என்று முன்னால் இருந்த அமைச்சர்களிடம் சொன்ன காரணத்தால், அப்பொழுது அரசாங்க பஸ்கள் நிறுத்தப்பட்டன என்று சொல்லப்படுவது அமைச்சருக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : பழைய விஷயங்களைக் கிளறத் தேவை இல்லை என்று கருதுகிறேன்.

[1967 நவம்பர் 27

*Special safety hats*

* 459. Q.—THIRU K. VINAYAKAM :
THIRU S. J. RAMASWAMY :
THIRU KOLATHUR KOTHANDAM : } Will the
Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration to compel the riders of scooters and motor cycles to wear special safety hats (shock absorbing helmet); and

(*b*) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) ஸ்கூட்டர்களை அல்லது மோட்டார் சைக்கிள்களை ஓட்டிச் செல்பவர்களுக்கு சாதாரணமாக தலையில் அடிபட்டு அவர்கள் பெரும்பாலும் இறக்க நேரிடுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தலையில் அடிபடுவதைத் தடுக்கும் பொருட்டு மேலைநாடுகள் சிலவற்றில் உள்ளது போலவே இங்கும் ஸ்கூட்டர்களையும் மோட்டார் சைக்கிள்களையும் ஓட்டிச் செல்பவர்கள் "தலைக் கவசம்" (Crash helmet) அணிந்து செல்வதைக் கட்டாயப்படுத்தலாமா என்பது பற்றி யோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. விநாயகம்.** ஸ்கூட்டர் ஓட்டுகிறவர்கள் மாத்திரம் தலையில் 'க்ராஷ் ஹெல்மெட்' போட்டுக்கொள்ள வேண்டுமா? அல்லது பின்னாலே உட்காருகிற மங்கையும் போட்டுக்கொள்ள வேண்டுமா? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஓட்டுபவர் கீழே விழுந்தால் மங்கையும் தப்ப முடியாது. (சிரிப்பு).

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** ஸ்கூட்டர் ஓட்டுபவர்கள் தலையில் ஹெல்மெட் அணிந்துகொள்ளவேண்டுமென்ற செயற்குறிப்பு இன்றைய அரசினரால் செய்யப்பட்டதா? அல்லது, இதற்கு முன்னால் இருந்த அரசினரால் செய்யப்பட்டதா? இந்த ஹெல்மெட்டுகளைச் சென்னையிலேயே தயார் செய்யப்போவதாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அந்தப் பரிசிலனை இன்றைய அரசு செய்ததா? அல்லது, முன்னால் இருந்த அரசு இதைப்பற்றி ஆலோசித்ததா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சென்னையில் உள்ள பிரபல நியுரோ-சர்ஜன் டாக்டர் இராமமூர்த்தி அவர்கள், பழைய காங்கிரஸ் அரசாங்கத்திற்கு இதுபற்றி ஒரு குறிப்பு அனுப்பியிருந்தார். இப்படிப்பட்ட ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் அதிகமாகத் தலையில்தான் அடிபடுகிறது என்றும், ஆகவே, தப்பிக்க முடியாமல் உடனே இறந்துவிட நேரிடுகிறது என்றும் குறிப்பு அனுப்பியதன் பேரில், அப்பொழுது முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள், 'இது மிகவும் சிறந்த யோசனை; இதை அமல்படுத்தலாம்' என்று 8-7-1966 அன்று குறிப்பு எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்.



1967 நவம்பர் 27]

**திரு. கே. விநாயகம்.** இந்த ஷாக் அப்ஸார்பிங் ஹெல்மெட் என்று சொல்லப்படும் தொப்பியை யார் உற்பத்தி செய்கிறார்கள்? ஒரு தனி நிறுவனமும் இது மாதிரி தொப்பிகளை உற்பத்தி செய்ய முன் வரவில்லையென்றால், அரசாங்கமே தம்முடைய ஒர்க்ஷாப்பிலே உற்பத்திசெய்து, அதை மலிவான விலைக்கு ஸ்கூட்டர் ஓட்டுபவர்களுக்குத் தரத் தயாராக இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதுபற்றி வழக்கு மன்றத்திலே ஒரு வழக்கு இருப்பதால், இங்கே தகவல்கள் கொடுப்பது அவ்வளவு உசிதமாக இராது.

அரிசி அரைவை ஆலைகள்

*460 வினா—திரு. கரு. சீமைச்சாமி : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1966-ம் ஆண்டில் ரைஸ் மில்கள் நிறுவுவதற்காக வழங்கப்பட்ட லைசென்சுகள் எத்தனை, மாவட்டவாரியாக?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சட்ட மன்றத்தின் முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கரு. சீமைச்சாமி :** ரைஸ் மில்கள் நிறுவுவதற்காக லைசென்ஸ் வழங்கப்படுவதில் ஊழல் ஏற்பட்டதன் காரணமாக, அதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணவு இலாக்காவிலிருந்து மாற்றப்பட்டார்களா? அப்படி மாற்றப்பட்டிருந்தால், அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதுமாதிரியான தகவல் ஒன்றும் இல்லை.

* 461 வினா—திரு. இல. பலராமன் : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாநில சர்க்கார், ரைஸ் மில்களுக்கு வழங்கும் லைசென்ஸ் முறையை ரத்து செய்யும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 1958-ம் ஆண்டு அரிசி அரைவை தொழில் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 5-ம் பிரிவின் கீழ் அரசினால் வழங்கப்படும் அனுமதிச்சீட்டுகள் பற்றித்தான் மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றார். இவ்வனுமதிச் சீட்டு வழங்கும் முறையை ரத்து செய்வது குறித்து எவ்வித செயற்குறிப்பும் அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, இதுபோன்ற ரைஸ் மில்கள் நடத்த அனுமதி வழங்கும் சீட்டு கேட்டு விண்ணப்பம் செய்துள்ள நபர்கள் தமிழகம் பூராவும் அதிகமாக இருப்பதாகக்

---

* 93-ம் பக்கத்திலுள்ள இணைப்பைப் பார்க்கவும்.

கூறப்படுகிறது. கிராமத்திலுள்ள விவசாய மக்கள் இம்மாதிரியான சிறு சிறு தொழில்களை நடத்த முன்வரும்போது சர்க்கார் அதற்குத் தடையாக இருக்கிறது என்று கூறப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் அவர்களுடைய கூற்று முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். அரிசி அரைக்கும் ஆலைகள் ஏராளமானதாகவும், தாராளமாகவும் நாடு பூராவும் ஏற்பட வேண்டுமென்பதற்காகத்தான் புதிய அரசாங்கம் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் அனுமதிச் சீட்டுகள் வழங்கி வருகின்றது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவர் அவர்களே, நமது அண்டை மாநிலமான ஆந்திராவில் விவசாயிகள் விவசாயத்திற்கு வைத்திருக்கும் 5 அல்லது 6 ஹார்ஸ் பவர் மோட்டாரை வைத்து நெல் அரைப்பதாகவும், அதற்கான லைசென்ஸ் பெறாமல் அதாவது ஃப்ரீ லைசென்ஸாக 'காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ்' என்ற முறையில் ரைஸ் மில்களை நடத்தி வருவதாகத் தெரிகிறது. அந்த முறையை நாம் அமல் நடத்தினால், விவசாயிகள் நெல் கொடுப்பதற்குப் பதிலாக அரிசியே கொடுப்பதற்குச் சௌகரியமாக இருக்கும். இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அம்மாதிரியான திட்டத்தை அமல் நடத்தும் திட்டம் அரசாங்கத்தின் கவனத்தில் இல்லை. அதற்கு நேர்மாறாக, புதிய ராக்ஷஸ ஆலைகளை கூட்டுறவுத் துறையிலும், வேறு பல துறைகளிலும் நம் மாநிலத்தில் ஏற்படுத்த அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ரைஸ் மில்களுக்கான லைசென்ஸ் வழங்குவதில், தேர்தல் முடிந்து புதிய அமைச்சரவை பதவியேற்பதற்கு முன்னுள்ள இடைக்காலத்தில், முன்னாள் ஆட்சியினரால் விதிமுறைகளையும் மீறி லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று புகார் சொல்லப்படுகிறதே, அதை மாற்ற இந்த அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக் கொண்டுள்ளது? மேலும் ஒரே ஊரில் ஒரு ரைஸ் மில் இருக்கும் போது மேலும் அதிகமாக லைசென்ஸ்கள் பழைய அரசால் வழங்கப்பட்டிருப்பதாகப் புகார்கள் வந்துள்ளன. இதுபற்றி அரசாங்கம் எப்படி தீர்வு காணப்போகிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் அவர்கள் கூறிய புகார்களுக்குக் கொஞ்சமும் ஆதாரம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, எல்லைப் பகுதிகளில் ரைஸ் மில் லைசென்ஸ் வழங்குவதற்கு ஏதேனும் தடை விதித்திருக்கிறதா ? அப்படி ஏதேனும் தடை இருந்தால் அல்லது டைரக்ஷன் கொடுத்திருந்தால் அதை அரசாங்கம் திரும்ப வாபஸ் வாங்குமா ?





மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், விளவங்கோடு தாலுகாவில் நெல் உற்பத்தியாகாத காரணத்தால் ரைஸ்மில் லைசென்ஸ் வழங்க தடை விதித்திருக்கிறது. மேலும், வேறுமாதிரியாக அண்டை மாநிலத்திற்கு கள்ளக்கடத்தல் நடத்தக்கூடாது என்பதற்காகவும் அரசாங்கம் இம்முறையை ஏற்படுத்தியிருக்கிறது.

திரு. எஸ். இ. ராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏராளமான அளவிலே நெல் உற்பத்தியாகியிருக்கிறது. நவீன அரிசி ஆலைகள் உருவாக்கி நல்ல அரிசியைத் தமிழக மக்களுக்கு வழங்க அரசாங்கம் ஏதேனும் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தமிழகத்தில் அம்மாதிரியான நவீன ஆலைகளை ஏற்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. அந்த ஆலைகளை கூட்டுறவுத் துறையிலும், தனியார் துறையிலும் ஏற்பாடு செய்வதற்காக அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

DR. H.V. HANDE : Are the Government aware of the fact that previously we were getting hand-pounded rice which is extremely good for the health of the people and it has also solved the unemployment problem of the small farmers who are living in thickly rice-growing areas. In view of the fact, have the Government taken into consideration the needs of these small farmers who are jobless after the harvest and chalk out a comprehensive and co-ordinated programme with regard to the issue of licences for rice mills?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The Government are aware of the problems of the small farmers but what the hon. Member has stated is not the panacea.

திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அரிசி ஆலை வேண்டுமென்று கோரி மனுக்கொடுத்திருக்கிற விண்ணப்பதாரர்கள் தகுந்த பரிந்துரைகள் கொடுக்கப்பெற்றிருந்தும், அவ்விண்ணப்பங்கள் செயலாளர் மூலமாகப் புறக்கணிக்கப்படுகின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அமைச்சர் அவர்கள் அந்தக் குறை நீங்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக ரைஸ்மில் அனுமதிச் சீட்டுகள் மத்திய அரசாங்கத்தினுடைய சட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. நம்முடைய மாநில சட்டம் அல்ல. அதை நிர்வகிக்கின்ற பொறுப்புமட்டும் மாநில அரசாங்கத்திடம் இருக்கிறது. மாவட்டக் கலெக்டர்களும், டி.ஆர்.ஓ-க்களும்தான் அதை நன்கு பரிசீலித்து வழங்குகிறார்கள். அப்படி ஏதாவது அனுமதிச் சீட்டுக்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்றால் அது நியாயமான காரணங்களுக்காகவே தான் புறக்கணிக்கப்பட்டு இருக்கும். எல்லா விண்ணப்பங்களுக்கும் அனுமதிச் சீட்டு வழங்க வேண்டுமென்பது அவ்வளவு சரியானதல்ல.

*திரு. ஏ. சி. நரசிம்மன் :* தலைவர் அவர்களே, ஏராளமான அரிசி ஆலைகளுக்கான லைசென்ஸ்கள் வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். சர்க்கார் அரிசி வியாபாரத்தை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய காரணத்தால் ஏராளமான லைசென்ஸ்கள் வழங்குவதால், அரிசி வழங்குவது சர்க்காருடைய கட்டுப்பாட்டிலிருந்து சிறிது சிறிதாக விலகிவிடும் என்ற அச்சம் ஏற்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* கனம் உறுப்பினருடைய அச்சத்திற்கு எந்தவிதமான காரணமும் இல்லை. தமிழகத்தில் உணவு உற்பத்தி மிக அதிகமான அளவில் பெருகிக்கொண்டிருக்கிறது. நம்முடைய தேவையைப் பொறுத்து அரிசி ஆலைகள் ஏற்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் எண்ணம்.

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* சபாநாயகர் அவர்களே, ரைஸ்மில் லைசென்ஸ்கள் அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ரைஸ்மில் மெஷினில் 'ஹல்லரை' விட 'ஷெல்ல'ருக்குத்தான் அதிகமான அளவில் லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. ஷெல்லருக்குத்தான் லைசென்ஸ் வழங்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் யோசனை கூறுமா?

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* நண்பருடைய யோசனையின்படி ஷெல்லருக்குத்தான் லைசென்ஸ் வழங்க வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. அதிகமாக எது நல்லது என்று தோன்றுகிறதோ அதைக்கவனித்து அரசாங்கம் செயல்படும்.

*திரு. அ. ஆறுமுகம் :* அதிகமாக ரைஸ் மில் பர்மிட் கொடுத்திருப்பதனால் கள்ளக் கடத்தலுக்கும், பதுக்கலுக்கும் ஏதுவாக இருக்கிறது என்பதை அரசாங்கம் அறியுமா? ஒரு கிராமத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட ரைஸ் மில் பர்மிட் கொடுத்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* அதிகமாக ரைஸ்மில்கள் இருப்பதனால் கள்ளக் கடத்தல் வரும் என்று நினைத்துவிடக் கூடாது. கள்ளக் கடத்தலைத் தடுக்கவும், அதற்கான கொள்கைகளை அமல் நடத்தவும் சரியான விதிமுறைகள் அரசாங்கத்திடம் இருக்கின்றன.

*திரு. டி. எஸ். ஆதிமூலம் :* சபைத் தலைவர் அவர்களே, 'ஹல்லர்' 'ஷெல்லர்' என்பவைகளுக்கிடையேயுள்ள வித்தியாசங்கள் எனக்குத் தெரியவில்லை. அதனால் என்ன நன்மை என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்துவார்களா?

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* 'ஷெல்லர்' என்பதன் மூலமாக அரைக்கும் அரிசியில் உணவுச் சத்துக்கள் அதிகமாக இருக்கின்றன. 'ஹல்லர்' மூலமாக அரைக்கும் அரிசி பார்ப்பதற்கு வேண்டுமானால் அழகாகவும் பளபளப்பாகவும் இருக்கும். இதில் உணவுச் சத்துக்கள் குறைந்துவிடுகின்றன.





*திரு. வி. எஸ். எஸ். மணி :* தலைவர் அவர்களே, ரைஸ் மில்லுக்கு லைசென்ஸ் வழங்குவது எந்த அடிப்படையில்? ஒரு கிராமத்தில் இரண்டு, மூன்று ரைஸ் மில்கள் இருந்தபோதிலும் மேலும் லைசென்ஸ்கள் வழங்கப்படுகின்றன. அப்படி மேலும் மேலும் கொடுத்தால், பழைய ரைஸ் மில் உரிமையாளர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* லைசென்ஸ்கள் வழங்கும் முறை அந்த ஊரினுடைய உணவு உற்பத்தி, அந்த இடத்தினுடைய வியாபாரத்தன்மை போன்றவற்றையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டுதான் அதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்து லைசென்ஸ்கள் வழங்கப்படுகின்றன.

THIRU K. VINAYAKAM : Whereas grant of licence for rice mills is governed by the Rice Milling Regulation Act of the Central Government and whereas the Government of India are thinking in terms of nationalising the entire rice milling industry, have they consulted the State Government on this issue, and if so, what is the view expressed by our State?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The Government of India have not consulted the State Government. But ideologically the State Government are not against nationalisation of rice milling industry. Yet we want to encourage the present rice mills and also to streamline them with new machinery.

*திரு. க. மு. ராசகோபால் :* தலைவர் அவர்களே, பெரும்பாலும் அரிசி ஆலைக்குக் கொடுக்கப்படும் அனுமதிச் சீட்டு நகர்புறங்களில் கொடுக்கப்படுகிறது. ஆனால் நாட்டுப்புறங்களில் எங்கே நெல் விளைகிறதோ, அந்த இடங்களில் அரிசி ஆலை வைக்க முடியாதபடி விதிமுறை இருக்கிறது. 5 மைல், 3 மைலுக்குள் ஆலை வைக்கக் கூடாது என்ற விதி முறை இருப்பதால் நாட்டுப்புறங்களில் அரிசி ஆலைக்கு அனுமதி கொடுக்காமல் தடுக்கப்படுகிறது. அந்த நிலைமை போய் நாட்டுப்புறங்களில் ஒவ்வொரு ஊருக்கும் ஒரு அரிசி ஆலை வைப்பதற்கு அனுமதிச் சீட்டு வழங்கப்படுமா?

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* ஒவ்வொரு ஊருக்கும் ஒரு ஆலை என்ற அடிப்படையில் எந்தெந்த கிராமத்தில் அரிசி ஆலை இல்லாமல் இருக்கிறதோ அங்கே குறைந்தபட்சம் ஒரு அரிசி ஆலையாவது ஏற்படுத்தவேண்டுமென்ற அடிப்படையில் ஏராளமான அனுமதிச் சீட்டுகள் புதிய அரசாங்கம் வழங்க ஆரம்பித்து இருக்கிறது.

*திரு. மு. ச. சிவசாமி :* அரிசி தரக்குறைவாகவும், கலப்படம் உள்ளதாகவும் இருப்பதற்கு தனியாருடைய ரைஸ் மில் தான் காரணம் என்று பொது மக்கள் கருதுவதால் தனியார் துறைக்கு ரைஸ் மில்லுக்கான லைசென்ஸ் கொடுக்கும் முறையை மாற்றி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* கனம் அங்கத்தினர் சொல்கிற குறைபாடுகள் இருக்கின்றன. விதி முறைகளின்படி அந்த லைசென்ஸ்களை ரத்து செய்வதற்கும் அந்த உரிமையை எடுத்துக்கொள்வதற்கும் அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

[1967 நவம்பர் 27

அதன்படி செயல்பட்டு வருகிறது. ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வதுபோல் அதையே ஒழித்து விடவேண்டுமென்று வளர்ந்துவிட்ட அரிசி ஆலைத் தொழில் பற்றி நினைக்கமுடியாது. ஆனால் கூட்டுறவுத் துறைகளின் மூலமும் அரசாங்கமே பெரிய பெரிய நவீன ஆலைகளை ஏற்படுத்துவதற்கும் யோசித்துக் கொண்டு வருகிறது.

**திரு. ப. மகாதேவன் :** சார், சமீபத்திலே குமரி மாவட்டத்திற்கு தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்த நெல் நனைந்து இருந்த காரணத்தால் முக்கால் அங்குலம் முளையும், ஒன்றரை அங்குலம் வேருமாக இருந்தது. ரைஸ் மில்காரர்களை காய வைத்து அரைத்து அரிசியாகக் கொடுக்கவேண்டுமென்று சொன்னபோது அவர்கள் மறுத்துவிட்ட காரணத்தால் ரேஷன் வரப்பிலும் அது மாதிரி முளைத்த நெல்லையே கொடுக்கவேண்டி நேரிட்டது. ஆகவே, ரைஸ் மில்காரர்களைக் கட்டாயப்படுத்தி அரிசியாகக் கொடுக்கச் செய்ய அரசாங்கத்துக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. அரிசி ஆலைகள் சில விதி முறைகளின் கீழ்தான் செயல்படுகின்றன.

### விவசாய வருமான வரி

* 462 வினா—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:
திரு. எஸ். ராமச்சந்திரன் :
திரு. ஏ. எம். ராஜா :
திரு. மு. சின்னசாமி :
} மதிப்பிற்குறிய

உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில், 1966-67 வரை உள்ள விவசாய வருமான வரி பாக்கி எவ்வளவு, மாவட்டவாரியாக ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :**

(1966–67 வரை பாக்கி)

| | ரூ. | காசு. |
|---|---|---|
| சென்னை .. .. .. .. .. | 55,300 | 20 |
| செங்கற்பட்டு .. .. .. .. .. | 2,95,259 | 70 |
| வட ஆர்க்காடு .. .. .. .. | 39,962 | 06 |
| தென் ஆர்க்காடு .. .. .. .. | 1,12,855 | 74 |
| மதுரை .. .. .. .. .. | 3,42,319 | 72 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 1,48,372 | 44 |
| சேலம் .. .. .. .. .. | 86,984 | 61 |
| தருமபுரி .. .. .. .. | 31,176 | 38 |
| கோயம்புத்தூர் .. .. .. .. | 8,23,579 | 29 |
| நீலகிரி .. .. .. .. .. | 10,00,255 | 42 |
| தஞ்சாவூர் .. .. .. .. .. | 10,73,652 | 24 |
| இராமநாதபுரம் .. .. .. .. | 59.895 | 87 |
| கன்னியாகுமரி .. .. .. .. | 1,19,670 | 18 |
| திருநெல்வேலி .. .. .. .. | 6,97,872 | 50 |
| மொத்தம் .. | 48,87,156 | 35 |



1967 நவம்பர் 27]

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, அமைச்சர வர்கள் பதிலிலிருந்து மொத்தமாக 48 லட்சம் ரூபாய்க்கு மேல் வசூலிக்கப்படாமல் பாக்கியாக இருக்கிறதென்று சொன்னார்கள். விவசாய வருமான வரி கட்டுகிறவர்கள் அத்தனை பேரும் வசதி உள்ளவர்கள் ஆகத்தானே இருப்பார்கள்? அப்படியிருக்க இது வரைக்கும் வசூல் செய்யாததற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வசூல் ஆகவில்லையென்று நான் கூறவில்லை, இந்த 48 லட்சம் ரூபாயில், புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு 30-9-1967 வரை ரூ. 26,50,142.20 வசூல் செய் திருக்கிறது. அதுபோக மீதமுள்ள ரூ. 22,37,014.15 பல்வேறு வகைகளிலும் வசூலிக்கப்படும் கட்டத்திலே இருக்கிறது. அவை களின் விவரங்களை நான் இந்த மன்றத்திற்கு சமர்ப்பிக்கிறேன்.

Amount not ripe for collection—Rs. 1,254.45.

Amount covered by section 41 (1) (Recovery under Revenue Recovery).

Act—Rs. 15,63,106.67.

Amount covered by stay orders—Rs. 5,83,630.74.

Amount treated as not in default—Rs. 83,523.81.

Other reasons—Rs. 5,498.48.

22 லட்சம் ரூபாய் வசூல் செய்வதற்கு மாதந்தோறும் அக்ரிகல்சரல் இன்கம்டாக்ஸ் கமிஷனர் அவர்கள் கீழ் இருக்கும் அதிகாரிகளை கண்காணித்து துரிதப்படுத்துகிறார்கள். ரெவின்யூ ரெகவரி ஆக்டின் கீழ் வசூல் செய்வதற்கும் வருமான வாரியம் (போர்ட் ஆப் ரெவின்யூ) ஒவ்வொரு மாதமும் கண்காணித்து வருகிறார்கள். அதற்கான விவரங்கள் அரசாங்கத்திற்கு நேரிடை யாக அனுப்பப்பட்டு வருகின்றன.

**திரு. எஸ். இ. ராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, விவசாய வருமான வரி பாக்கி எவ்வளவு காலமாக இருந்து வருகிறது என்ற விவரத்தைத் தெரிவிக்கலாமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த வருமான வரி பாக்கி ஆண்டாண்டு காலமாக இருந்து வருகிறது. 1964, 1965 ஆகிய வருஷங்களில் ஏறக்குறைய 10 லட்சம் ரூபாய் பாக்கியாக நின்று விட்டது. ஆனால் இந்த அரசாங்கம் பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்தத் துறையிலே பாக்கியாக இருந்து வந்த 48 லட்சம் ரூபாயில் 26 லட்சம் ரூபாய் ஏற்கனவே வசூல் செய்துவிட்டது, மீதம் உள்ள 22 லட்சம் ரூபாய் பற்றிய வசூல் பல்வேறு கட்டங் களில் இருக்கிறது என்பதை சபைக்குத் தெரிவித்துக்கொள் கிறேன்.

**திரு. மு. சின்னசாமி :** வருமான வரி பாக்கி கொடுக்கவேண்டிய வர்கள் அனைவரும் பெரிய பணக்காரர்களாக இருக்கிறார்கள், அதனால் அதிகாரிகள் சென்று அங்கே வசூல் செய்யும்போது அவர் களை மிரட்டி உதைத்து துன்பப்படுத்துகிறார்கள் என்ற சம்பவம் சர்க்காருக்குத் தெரியுமா? சாதாரண விவசாயிகளுடைய

பொருள்களை ஜப்திசெய்து வசூல் செய்கின்ற முறை இருக்க இந்தப் பணக்காரர்களிடம் இவ்வளவு பணத்தை விட்டு வைப்பது சரியா? அதிகாரிகள் தங்களுடைய கடமையைச் செய்ய அரசாங்கம் அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு கொடுக்குமா?

மூன்றாவதாக, இங்கே இருக்கின்ற வரி பாக்கியில் பழைய கோட்டை பட்டையக்காரர் குடும்பத்தாரிடமிருந்து எவ்வளவு வரி வசூல் செய்ய வேண்டியிருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : பழையகோட்டை பட்டையக்காரர் அவர்கள் குடும்பத்தினர் எவ்வளவு பாக்கி கொடுக்க வேண்டுமென்ற தகவல்கள் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதைப்பற்றிய விவரத்தைக் கொடுக்க முடியும். ஆனால் பொதுப்படையாக, அதிகாரிகளுக்கு இம்மாதிரியான ஆபத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அப்படி தனிப்பட்ட நிலைமைகள் வருமானால் அதற்கான தக்க நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுப்பதற்கு தயாராக இருக்கும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : தலைவர் அவர்களே, * * *

மு.ப. 10-00 இந்த 48 லட்ச ரூபாய் பாக்கியை வசூலிக்க ஏன் துரிதமாக நடவடிக்கை எடுக்கக்கூடாது?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : கனம் உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் முற்பகுதியை நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால், இப்பொழுது அது வழக்கில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சட்டப் பேரவை விதி 31 (5)-இன்படி திரு. சித்தன் அவர்கள் கேட்ட வினா அனுமதிக்கப்படக் கூடாததாக இருக்கிறபடியால், விதி 235-இன்படி அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கக் கட்டளையிடுகிறேன். நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறக் கூடாது என்று நீக்கிவிட்ட பகுதி செய்தித் தாள்களிலும் வெளிவரக்கூடாது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. கே. விநாயகம்** : குறிப்பிட்ட சம்பவம் ஒருவேளை வழக்கு மன்றத்தில் இருந்தாலும் கூட அதுமாதிரியான முறையை இனியாகிலும் கையாளமாட்டார்கள் என்ற உத்தரவாதம் அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : இனியாகிலும் என்று சொல்வதில் இருந்து இதை நாங்கள் ஒத்துக்கொள்வதாக ஆகும். அத்தகைய ஏமாளிகள் அல்ல நாங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வழக்குமன்றத்தில் இருப்பதால் அந்த வினாவை நீக்கிவிடுவதாக நான் சொல்லவில்லை. சட்டப் பேரவையின் 31-வது விதி 5-வது உள் விதிப்படி, அதை நீக்கிவிட ஆணையிட்டேன்.

---

* பேரவைத் தலைவர் ஆணைப்படி அகற்றப்பட்டது



DR. H. V. HANDE: Sir, while I am definitely for taking strict measures to recover all the arrears of the Agricultural Income-tax, I wish to know from the Hon. Chief Minister whether the one-man committee appointed to consider the incidents at Vettakaran Puthur has submitted his report and if so, when this Ministry is going to place it on the table of the House?

THE HON. THIRU C. N. ANNADURAI: It will be placed before the House if the Government think it necessary.

**திரு. சு. துரைசாமி** : ஏற்கனவே 1964-65 இல் இருந்தே வரி பாக்கி இருப்பதாகச் சொல்கிறார்கள். வரி கட்ட வேண்டியவர்கள் பெரியவர்கள். ஐம்பதாயிரத்திற்கும் மேல் கட்ட வேண்டிய வரி பாக்கிக்காரர்களின் பட்டியலை வெளியிடுவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : அதற்குத் தனியாக கேள்வி போட்டால் இந்த மன்றத்திற்கு விவரம் கொடுக்க முடியும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி** : தலைவர் அவர்களே, விவசாய வருமான வரி வசூலாக வேண்டியது வடாற்காடு மாவட்டத்தில் தான் குறைவாக இருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்தில் 2½ லட்சம் பாக்கி விழுந்திருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் பத்து லட்சம் பாக்கி விழுந்திருக்கிறது. வடாற்காடு மாவட்டத்தில் அதிகாரிகள் மிகமிக துரிதமாக வசூல் செய்துவிட்டு, மற்ற மாவட்டங்களில் வழவழா என்று விட்டு வைத்திருப்பதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : நீலகிரி மாவட்டத்தில் வரி பாக்கி அதிகமாக இருப்பதற்குக் காரணம் தோட்டப் பயிர். வடாற்காடு மாவட்டத்தில் வரி பாக்கி அதிகம் இல்லை என்றால் அந்த மாவட்ட மக்கள் அதிகாரிகளோடு ஒத்துழைக்கிறார்கள் என்பதுதான் பொருள்.

**திரு. வி. டி. அண்ணாமலை** : மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் விவசாய வருமான வரியின் மொத்த டிமாண்டு எவ்வளவு? அந்த வரியை வசூல் செய்வதற்கு ஆகும் செலவு எவ்வளவு என்று தெரிவிப்பார்களா?

(விடை இல்லை).

**திரு. ஜே. பெள்ளி கௌடர்**: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் 10 லட்சத்திற்கு மேற்பட்ட தொகை வசூலாகாமல் இருப்பதற்காக வருந்துகிறேன். அதை உடனடியாக வசூலிக்க தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன என்றுதான் விளக்கினேன்.

மதுரை சிறப்பு அங்காடி

*463 வினா.—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை சிறப்பு அங்காடியில் எத்தனை பேர்கள் பணியாற்றி வருகிறார்கள்?

(இ) அவர்களுக்கு, மாதத்துக்கு எவ்வளவு பணம் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) 122 பேர்கள்.

(இ) ரூ. 12,691.

**திரு. கரு. சீமைச்சாமி:** மதுரை சிறப்பு அங்காடி நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறதே, அதற்குக் காரணம் அங்கே அதிகமான பேர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பதுதான் என்கிற கருத்து உலவுகிறது. ஆகவே அங்குள்ள ஆட்களைக் குறைத்து நஷ்டத்தை ஈடு செய்ய அமைச்சர் அவர்கள் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் அங்கே அதிகமான பேர்கள் இருக்கிறார்கள் என்பது மட்டும் அல்ல, வேறு காரணங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அதுபற்றி சட்டமன்றத்தில் ஓர் அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கிறது. முன்பு 140 பேர்கள் இருந்தார்கள். அந்த எண்ணிக்கையும் 122 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும் தொடர்ந்து தேவையில்லாதவர்களை எடுத்துவிடவேண்டும் என்றும் அரசாங்கம் சொல்லியிருக்கிறது.

**திரு. மா. பா. சாரதி:** தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பு அங்காடியை மாவட்டந்தோறும் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா? வேலூரில் ஆரம்பிக்கும் திட்டம் ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தமிழ்நாட்டில் மொத்தம் எவ்வளவு சிறப்பு அங்காடிகள் அமைக்கலாம் என்று மத்திய சர்க்கார் சொல்லுகிறார்கள். சில சிறப்பு அங்காடிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. வேலூரில் பரிசீலிக்கப்படலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதுரை சிறப்பு அங்காடியைப் பற்றி திரு. சுரேந்திரன் அவர்கள் கேட்பார்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** சிறப்பு அங்காடியில் வேலை செய்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற குறைந்த சம்பளம் எவ்வளவு ? அது அவர்களுடைய வாழ்க்கைக்குப் போதுமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சம்பள விகித விவரம் பொதுவாக இல்லை. மதுரை சிறப்பு அங்காடியைப் பற்றி மட்டும் தான் இருக்கிறது. மற்றக் கடைகளில் கொடுக்கப்படுகிற சம்பளத்தை விட இதில் அதிகமாகக் கொடுக்கிறார்கள். இது சரிதானா என்பதைக்கூடப் பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறேன்.



**திரு. என். எஸ். வி. சித்தன்:** மதுரை சிறப்பு அங்காடியில் தற்போது நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் அதிகமான வாடகையுள்ள கட்டடத்தில் அது இருப்பதுதான் என்று சொல்லப்படுகிறது. அதை குறைந்த வாடகையுள்ள கட்டடத்திற்கு மாற்ற ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பல காரணங்களில் அதுவும் ஒன்று. இந்த ஆண்டு அந்தக் கட்டடத்திற்கு வாடகையைக் குறைத்திருக்கிறது.

**DR. H. V. HANDE:** Will the Hon. Minister tell us the exact reasons in detail for these Supermarkets to run at a loss?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதுபற்றி அறிக்கை ஒன்றை ஏற்கனவே திரு. சீமைச்சாமி கேட்ட கேள்விக்குத் தந்திருக்கிறேன். பொதுவாக எட்டு லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணம் பம்பாயில் போய் ஜவுளியை வாங்கி, அது இங்கே தேங்கும்படியாகச் செய்துவிட்டதுதான். கட்டட வாடகையும் ஒரு காரணம். இந்தக் காரணங்களை எல்லாம் ஆராய்ந்து அவற்றுக்குப் பொறுப்பான குழு நீக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்க மருத்துவ மனை, அரக்கோணம்

*464 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி: மதிப்பிற்குரிய மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரக்கோணம் நகரத்தில் அரசாங்க மருத்துவ மனையில் கூடுதலாக படுக்கை வசதிகள் பெருக்கவும், மருத்துவ மனையை விஸ்தரிக்கவும் திட்டமிட்டு நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு (Emergency) நிறுத்தி வைக்கப்பட்டதை மீண்டும் எடுத்து நடத்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அரசின் நிதி நிலை வசதியான பின் இந்த விஷயம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** அரக்கோண நகர ஆஸ்பத்திரியில் முன்பு இருந்த படுக்கை வசதிகள்தான் இப்போதும் இருக்கின்றன. முன்பு இருந்த அமைச்சரவையை, படுக்கை வசதியை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டோம். அதற்குள் எமர்ஜன்ஸி வந்துவிட்டது. இப்போதுதான் அது நீக்கப்பட்டு விட்டதே. ஆகையால் அரக்கோண நகர ஆஸ்பத்திரியில் படுக்கை வசதியை அதிகப்படுத்த இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் நிதிநிலைமை சரிப்பட்டதும் அது கவனிக்கப்படும்.

[1967 நவம்பர் 27

### *Adulteration of milk*

* 465 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that large scale adulteration of milk is carried on by milk vendors in Tiruchirappalli Municipal area; and

(*b*) if so, the action taken to prevent such adulteration?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) திருச்சிராப்பள்ளி நகராட்சியில் உணவுக் கலப்படத்தடைச் சட்டத்தின்கீழ் குறிப்பிட்ட தேதிகளிலும் முன்னறிவிப்பில்லாமலும் பால் மாதிரிகள் எடுக்கப்பட்டு சோதனை செய்யப்படுகிறது. பாலில் கலப்படம் செய்பவர்களின் மேல் சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்வதன் மூலம், பாலில் கலப்படம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு மிகக் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**திரு. கே. வினாயகம் :** வெளிக் கிராமங்களில் இருந்து திருச்சி நகரத்திற்குள் பால் கொண்டு வருகிறவர்கள் வீதியில் இருக்கிற குழாய்களில் தண்ணீரைப் பிடித்துக் கொண்டு விற்கிறார்கள் என்ற புகார் வந்ததா? அது உண்மைதானா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** வருகிற புகார் எல்லாம் திருச்சி நகரத்தில் உள்ள வீதிக் குழாய்களில் போதுமான தண்ணீர் வரவில்லை என்பதுதான். (சிரிப்பு)

### திருவண்ணாமலையில் பஸ் நிலையம்

* 466 வினா.—**திரு. பி. எஸ். சந்தானம் :** மதிப்பிற்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் நகராட்சிமன்றம் நடத்தும் பஸ் நிலையம் ஒன்று செயல்பட்டு வருகின்றதா?

(இ) ஆமெனில் அந்த பஸ் நிலையத்திற்கு எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது?

(உ) இந்த ஆண்டு மேலும் ஒரு பஸ் நிலையம் கட்ட சர்க்காரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

(எ) இப்பொழுது கட்ட வேண்டுமென்று கருதிக் கொண்டிருக்கும் நகராட்சிமன்றத்தின் பஸ் நிலையத்தின் மதிப்பீடு என்ன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) ரூ. 37,071.

(உ) ஆம்.

(எ) ரூ. 4,22,000.

**திரு. பி. எஸ். சந்தானம் :** சட்டமன்றத் தலைவரவர்களே, முன்னதாகக் கட்டப்பட்ட பஸ் நிலையம் நல்லமுறையில்தான் செயல்பட்டு வருகிறது. இப்பொழுது தனியார் சௌகரியத்தை



1967 நவம்பர் 27]

முன்னிட்டு சர்க்காருக்கு வீண் செலவு ஏற்படுத்தக் கூடிய முறையில் கட்டப்படக் கூடிய இந்த பஸ் நிலையத்தைக் கட்டாமல் இருப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஏற்கனவே இருந்த பஸ் நிலையம் ஊருக்கு மத்தியப் பகுதியில் இல்லாத காரணத்தால் மத்தியப் பகுதியொன்றைத் தேர்ந்தெடுத்து அங்கே பஸ் நிலையம் கட்டப்படவேண்டுமென்ற நகராட்சிமன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க இப்பொழுது அதற்கான உரிமம் வழங்கப்பட்டு அதற்காக 25 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்பட்டு இருக்கிறது.

### சின்னாற்றின் குறுக்கே பாலம்

* 467 வினா.—**திரு. க. முருகேசன்:** மதிப்பிற்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தர்மபுரி வட்டம், பாலக்கோடு-கசர்குளி ரோட்டில் சின்னாறு குறுக்கே பாலம் கட்டும் திட்டம் தற்போது என்ன நிலையில் உள்ளது, எப்போது நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படும்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் நிச்சயித்துள்ள முக்கியத்துவப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு தான் "இதர சாலைகளின்" கீழ் புது வேலைகள் துவங்க அரசு அனுமதி அளிக்கிறது. பாலக்கோடு- கசர்குளி சாலையில் 5-வது மைல் 7-வது பர்லாங்கில் சின்னாற்றின் குறுக்கே பாலம் கட்டும் வேலையானது, மாவட்ட அபிவிருத்தி மன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 வேலைகளில், 3-வது வேலையாக சேர்க்கப்பட்டுள்ளது. "இதர சாலைகளில்" ஏற்கெனவே 212 வேலைகள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. கேள்வியில் சொல்லும் வேலையை விட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள வேலைகளை அனுமதித்த பிறகுதான் இந்த வேலையை எடுத்துக் கொள்ள இயலும்.

### பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள்

* 468 வினா—**திரு. ஈ. எம். நடராசன் :** மதிப்பிற்குரிய உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை tribal-block — குகள் இருக்கின்றன?

(இ) கோவை மாவட்டத்தில் பர்கூர் மலைப் பிரதேசத்தை ஒரு tribal-block — ஆகச் செய்யும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) இம்மாநிலத்தில் பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள் இரண்டு உள்ளன. ஒன்று சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லிமலை வட்டாரத்திலும், மற்றொன்று ஏர்க்காடு வட்டாரத்திலும் உள்ளது.

(இ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. ஈ. எம். நடராசன் :** தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் பர்கூர் மலைப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் பின்னடைந்த நிலையில் இருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியை தனி வளர்ச்சி வட்டாரமாகக் கருதி அந்தப் பகுதி மக்கள் முன்னேற தமிழக அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பர்கூர் பகுதியை அந்த முறையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கத்தின் விதிமுறைகளின்கீழ் அது வராத காரணத்தால் அதை நல்ல முறையில் வட்டார வளர்ச்சிப் பகுதியாக மாற்றக் கூடிய நிலை இல்லை. இந்த ஆண்டு நிதி நிலை தட்டுப்பாடாக இருக்கிற காரணத்தால் புதிய அமைப்பை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

## ‘கிராம நலம்’

* 469 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மதிப்பிற்குரிய உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசால் நடத்தப்பெறும் ‘கிராம நலம்’ என்ற மாதப் பத்திரிகைக்கு ஆண்டொன்றுக்கு ஆகும் செலவென்ன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** சந்தா தொகை ரூ. 27,681-ம் இந்திய அரசினரால் அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 13,000-ம் வரவு வைத்த பின்னர் 1966–67 ஆண்டில் செலவிடப்பட்ட நிகரத் தொகை ரூ. 1,15,064.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, இந்தப் பத்திரிகையை அரசே நடத்தவேண்டிய முக்கிய காரணமென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கிராம வளர்ச்சியைப் பற்றியும், வட்டார வளர்ச்சியைப் பற்றியும் முன்னேற்றங்களைப் பற்றியும், அதுபற்றி அரசாங்கம் அவ்வப்பொழுது விடுக்கின்ற அறிவிப்புகளைப்பற்றியும் அந்தந்தப் பகுதி மக்களுக்கு அறிவிப்பதற்காக இந்த விளம்பரப் பகுதி நீண்டகாலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவண்ணாமலை பஸ் நிலையத்தைப்பற்றிய 466-வது வினாவின்போது, ஒரு துணை வினாவைக் கேட்க நகராட்சித் தலைவர் திரு. தா. விஜயராஜ் அவர்கள் கையை உயர்த்தியதை நான் கவனிக்கவில்லை. ஆதலால் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இசைந்தால், அவ்வுறுப்பினர் அதுபற்றி ஒரு துணை வினா கேட்க நான் இப்பொழுது அனுமதிக்கிறேன்.

**திரு. தா. விஜயராஜ் :** ஏற்கனவே உள்ள பஸ் நிலையம் சரியாக இல்லை என்ற காரணத்தால் புதிய பஸ் நிலையம் ஒன்று கட்ட





அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு அதனுடைய வேலை மிகவும் நிதானப் போக்கிலே நடந்துகொண்டு இருக்கிறது, ஆகவே உடனடியாக அந்த வேலையைச் செய்வதற்கு சர்க்கார் முயற்சி செய்யுமா? ஏற்கனவே அரசாங்கத்தால் கொடுத்த கடன் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டது, அதில் பாக்கியில்லை என்று அரசாங்கம் தெரிவிக்குமா? புதிதாக பஸ்நிலையம் கட்டுவதால் அதன்மூலம் அரசாங்கத்திற்கு வருவாய் வரும் என்ற காரணத்தால் இதை உடனடியாகக் கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஏற்கனவே கொடுத்த கடனை திருப்பிக் கொடுத்தார்களா இல்லையா என்ற தகவல் இல்லை. கொடுத்திருந்தால் மகிழ்ச்சி. ஏற்கனவே 3 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் அனுமதித்ததற்கு முதல் தவணையாக 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அந்த வேலை நடைபெறும். அது பயனுள்ளதாக இருக்கிறது என்று அரசாங்கம் நினைப்பதால் தான் வேலை தொடர்ந்து நடைபெறுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கனவே தள்ளிவைக்கப்பட்ட வினாக்கள் 450 முதல் 452 வரை இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## பதநீர் இறக்கும் உரிமம்

* வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுவிலக்கு காரணமாக மரமேறும் தொழிலாளர்களுக்கு பதநீர் இறக்க லைசென்சுகள் உரிய காலத்தில் கொடுக்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதை மாற்றி அமைத்து லைசென்சுகள் உடனடியாகக் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) துறைப் பணியாளர்கள் சுறுசுறுப்பாகச் செயல்படவில்லை என்ற காரணத்தால் மரமேறும் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்குவதில் தாமதம் எதுவும் ஏற்படவில்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** லைசென்ஸ்கள் வழங்கப்படுவது குறிப்பாக பருவகாலத்திற்குப் பிறகுதான் இது வரை வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசாவது டிசம்பர் மாதத்திற்குள் லைசென்ஸ்கள் வழங்குவதற்கு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவரவர்களே, எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்களின்படி லைசென்ஸ்கள் வழங்கப்படுவதில் தவக்கம் இல்லை. லைசென்ஸ்கள் வாங்கிக் கொள்கிறவர்கள் மட்டத்தில்தான் ஏராளமான தவக்கம் இருப்பதாகத் தெரிகிறது.

[1967 நவம்பர் 27

**திரு. எம். எஸ். மணி :** பழைய அரசாங்கத்தில் மரத்தில் ஏறி பதநீர் இறக்கத்தான் லைசென்ஸ் கொடுத்தார்கள், விற்பனை செய்ய லைசென்ஸ்கள் கொடுக்கப்படவில்லை. பல போராட்டங் களுக்குப் பிறகும் கொடுக்கப்படவில்லை. இந்த அரசாங்கம் கொடுப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இது லைசென்ஸ் களைப் பற்றியது. அதுபற்றிய விவரங்கள்தான் என்னிடத்தில் இருக்கின்றன.

* 451 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மதிப்பிற்குரிய முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மரமேறும் தொழிலாளர்களுக்கு தற்போது பதநீர் இறக்க ஆண்டுக்கு ஒரு முறை வழங்கிவரும் லைசென்சு முறையை, ஆண்டு தோறும் புதுப்பித்துக் கொள்ளும் வகையில் மாற்றியமைக்க வேண்டும் என மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன மாநாடுகளில் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ள தீர்மானங்களின் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளன மாநாடுகளில் நிறைவேற்றப் பட்ட எத்தீர்மானமும் அரசாங்கத்திடம் வந்து சேரவில்லை.

### போலீஸ் துறையிலுள்ள நாய்கள்

* 452 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் போலீஸ் மோப்ப நாய்கள் எத்தனை உள்ளன?

(இ) அவைகளை மேலும் அதிகப்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ)—

**சென்னை மாநகரம்—**

| | | |
|---|---|---|
| ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை | .. .. | 9 நாய்கள் |
| தற்போதுள்ள எண்ணிக்கை | .. .. | 3 நாய்கள் |
| | | 4 நாய்க் குட்டிகள் |

**மதுரை—**

| | | |
|---|---|---|
| ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை | .. .. | 6 நாய்கள் |
| தற்போதுள்ள எண்ணிக்கை | .. .. | 5 நாய்கள் |

**கோயம்புத்தூர்—**

| | | |
|---|---|---|
| ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை | .. .. | 3 நாய்கள் |
| தற்போதுள்ள எண்ணிக்கை | .. .. | 1 (பயிற்சியில் உள்ளது) |

(இ) இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த எண்ணிக்கை குறைந்ததற்கான காரணம் என்ன? சரியான முறையில் வேலை செய்யவில்லை என்ற காரணத்தால் குறைக்கப்பட்டதா அல்லது என்ன காரணத்தால் குறைக்கப்பட்டது?



1967 நவம்பர் 27]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** வேலை சரியாகச் செய்யவில்லை என்பதற்காக நாய்களின் எண்ணிக்கை குறைக்கப் படவில்லை. இந்த வேலை செய்வதில் அலுத்துப்போய் சில நாய்கள் செத்துவிட்டன.

**திரு. மா. பா. சாரதி :** மோப்ப நாய்களை வைத்து துப்புக் கண்டுபிடிப்பதை போலீஸ் பயிற்சி நிலையம் இருக்கின்ற வேலூருக்கும் ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** போலீஸ் பயிற்சி நிலையம் இருப்பது காவல் துறையினர் எந்த எந்த முறையிலே தங்களுடைய கடமைகளை நிறைவேற்றவேண்டுமென்பதைப்பற்றி அறிந்துகொள்ளத்தான். மோப்ப நாய்களைப் பயிற்றுவிக்க சென்னையிலும், கோவையிலும், மற்ற இடங்களிலும் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

THIRU K. VINAYAKAM : Whereas it has been the usual practice to set these police detective dogs to find out culprits involved in murder and burglary in houses, has this Government tried these dogs in finding out the culprits involved in the whole-sale fire accidents in the hutment areas in the City of Madras?

THE HON. THIRU C. N. ANNADURAI : My hon. Friend as an Advocate should know that in arson, evidences are burnt out. Therefore there cannot be any question of sending these dogs there.

I would request the hon. Members and others that, whenever they make a reference to these dogs, they need not say ' police dogs ' but may say ' detective dogs in the Police Department '.

THIRU K. VINAYAKAM : Sir, I would like the Hon. Chief Minister to refer to the proceedings. I was very careful as not to cast aspersion against the Police Department. The Hon. Chief Minister has stated that usually in incidents of this nature, evidences are burnt out. But in the case of the fire incidents to the hutments in the City of Madras, evidences are mostly human beings and there cannot be any possibility of burning out these evidences. So, I want to know whether the Government have seriously tried it or is the Hon. Chief Minister trying to evade my pertinent question?

THE HON. THIRU C. N. ANNADURAI : I do not gain anything in particular by evading things. Nor is the question so difficult to answer. What the hon. Member should know is that these dogs work by the method of finding out the scent and in arson even scents are burnt out and new kinds of scents are created which would naturally mislead the dogs.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** கோவை மாவட்டத்தில் குற்றங்கள் அதிகரித்திருக்கும் நிலையில் நாய்கள் குறைவாக இருக்கிற காரணத்தால் குற்றங்களைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, நாய்களின் எண்ணிக்கையை அரசாங்கம் அதிகரிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அரசுத் தரப்பிலிருந்து நாய்களை அதிகம் தருவதற்கு ஒப்புக்கொள்கிறேன். பொது மக்கள் தரப்பில் குற்றங்களைக் குறைப்பதற்கு நண்பர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

திரு. ந. தருமலிங்கம் : இந்த நாய்களைப் பற்றிக் கூறும்போது 'போலிஸ் நாய்' என்று சொல்வதால் அது போலீசாரைக் கேவலப்படுத்துவதாக அமைந்துள்ள காரணத்தால் இதற்கு வேறு ஒரு நல்ல பெயரை வைக்க அரசு முன்வருமா?

(விடை இல்லை.)

திரு. கரு. சீமைச்சாமி : யாராவது கொலை செய்யப்பட்ட பிறகு துப்புக் கிடைக்காத நிலைமையில் போலிஸ் நாய்கள் வரவழைக்கப்படுகின்றன. கொலை செய்யப்பட்டவர்களுடைய உறவினர்கள் அந்த உடலைத் தொட்டு விடுவதன் காரணமாக அந்த நாய்கள் அத்தகைய உறவினர்களுடைய வீட்டைச் சுற்றி வரக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, குற்றம் செய்தவரைக் கண்டு பிடிப்பதற்காக வசதி செய்யும் வகையில், யாருமே அந்த உடம்பைத் தொடக்கூடாது என்பதுபற்றி பொதுவான விளம்பரம் கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பொதுவாக அப்படிப்பட்ட அறிவிப்புக் கொடுப்பதிலே தவறு இல்லை. ஆனால், எப்படி குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலே உள்ள முறைகள் வளர்ந்து வருகின்றனவோ அதேபோல் குற்றங்களைச் செய்கிறவர்களும் நேர்த்தியான முறையில் குற்றங்களைச் செய்து துப்புத் துலங்க முடியாத நிலைமையை ஏற்படுத்திக் கொண்டு போகிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : மோப்பம் பிடிக்கிற நாய்கள் மிகப் பெரிய குற்றங்களையும், வசதி படைத்தவர்கள் செய்கின்ற குற்றங்களையும் கண்டுபிடித்து விடுகிறது என்ற காரணத்தினால் தான் அந்த நாய்கள் சரியான முறையில் பராமரிக்கப்படாமல் இறந்து விட்டன என்று சொல்லப்படுவது உண்மையா? மேலும், அதிகப்படியான நாய்களைத் தயார் செய்து பதுக்கல்காரர்களைக் கண்டுபிடிப்பதற்கும் உபயோகப்படுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நாய்கள் சரிவரப் பராமரிக்கப்படாமையினால்தான் இறந்து விட்டன என்று சொல்வது சரியல்ல. நாய் ஒன்றுக்கு மாதம் 155 ரூபாய் செலவு செய்யப்படுகிறது. அது மனிதனுக்குச் செலவு செய்யப்படுவதை விடச் சற்று அதிகம் என்று கருதுகிறேன். பராமரிப்புக் குறையின் காரணமாக நாய்கள் செத்துப் போகவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, the Hon. Chief Minister was expressing difficulty about the paucity of these police detective dogs.





THE HON. THIRU C. N. ANNADURAI : That is exactly what I wanted my hon. Friend to avoid. Let him not say the police detective dogs' but say 'the dective dogs in the Police department'.

THIRU K. VINAYAKAM : The Hon. Chief Minister is well aware of the construction of sentences. It also means the same thing. It does not mean anything else.

Sir, may I know whether in the matter of procreation of these specialised types of dogs, the Police department are adopting family planning methods so far as these dogs are concerned?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I am sorry to learn that my hon. Friend is interested in family planning for dogs. But anyhow these detective dogs are not born but they are trained.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்திலே வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

### (i) இராமநாதபுரம் மாவட்டத்தில் உணவு தானியங்கள் கிடைக்காமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் ஆறு வந்ததில் 68-வது விதிப்படி நான்கு தீர்மானங்கள் பேரவைத் தலைமை அலுவலகத்திலேயே தள்ளப்பட்டுவிட்டன. இரண்டு தீர்மானங்கள் பேரவையில் குறிப்பிட அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப்பற்றி அறிவிக்கை கொடுத்திருக்கும் உறுப்பினர்கள் இருவரும் அந்தத் தீர்மானங்கள் எப்படி விதிகளுக்கு உட்பட்டவையாக இருக்கின்றன என்பதைப்பற்றி மட்டும் விளக்க வேண்டும். முதலில் திரு. சுப்பராஜா அவர்கள், அவருடைய ஒற்றிவைப்புத் தீர்மானத்தைப் பேரவை முன் படிப்பார்கள்.

THIRU A. A. SUBBA RAJA : Mr. Speaker, I have given notice of the following adjournment motion—

"I request that the business of the House be adjourned to discuss a definite matter of public importance, namely—

'Non-availability of foodgrains in Ramanathapuram district during off-season and the need to supply foodgrains to the villagers of the district at subsidised rates'."

இராமநாதபுர மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் குறுகிய காலத்தில் நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய மூன்று மாதங்களில் தானியம் கிடைக்காமல் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அரசாங்கம் கொஞ்சம் அக்கறை செலுத்த வேண்டுமென்ப

[Thiru A. A. Subba Raja] [1967 நவம்பர் 27

தைப்பற்றி எடுத்துக் கூறுவதற்காகச் சபையை ஒத்தி வைத்து இந்தப் பிரச்சனையைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உணவுப் பற்றாக்குறை என்பது போன்ற கேள்விகள் எல்லாம், அரசினரின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டவை. அதன் காரணமாக இது போன்றவை, ஒற்றிவைப்புத் தீர்மானத்துக்கு ஏற்றவையல்ல என்று பலமுறை தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பேரவை நடவடிக்கைப் பதிவேடு 1959-ஆம் ஆண்டு 23-வது புத்தகம் 29-30-ஆம் பக்கங்களிலும், இன்னும் பற்பல நாட்களிலும் இதுபோன்ற தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. உணவுப் பற்றாக்குறை அல்லது உணவுப் பொருள்கள் விலையேற்றம் என்பதுபற்றியெல்லாம் கொண்டு வந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. அதன்படி இதற்கும் அனுமதி மறுக்கிறேன்.

அடுத்து, நெல்லிக்குப்பம் தொகுதி உறுப்பினர் திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஆட்சேபத்திற்குரிய சில சொற்களை நீக்கிவிட்டு, திருத்தியபடி, இங்கு கூறுவதற்கு அனுமதிக்கிறேன்.

### (ii) வடலூர், நெய்வேலி சிராமிக் தொழிற்சாலையில் வேலைநிறுத்தம்

THIRU C. GOVINDARAJAN : Sir, I have given notice of the following adjournment motion—

"I request that the business of the House be adjourned to discuss a definite matter of urgent public importance, namely :—

'Strike in the Neyveli Ceramic Factory at Vadaloor, South Arcot district consequent on the refusal of the management to pay Deepavali bonus and to grant other demands of the labourers'."

சட்டமன்றத் தலைவர் அவர்களே, சேஷசாயி குரூப்பைச் சேர்ந்த வடலூரிலுள்ள கிராமத் தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்களும் சிப்பந்திகளும் 300-க்கு மேற்பட்டவர்கள் போனஸ் கோரிக்கையை தொழிற்சாலை நிர்வாகிகள் முன்வைத்தனர். நிர்வாகிகள் கோரிக்கைகளை மறுக்கவே சட்டப்பூர்வமாக வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்து 18-10-1967 முதல் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். பேச்சுவார்த்தை நடத்துவதற்குகூட யாரும் ஸ்தலத்தில் இல்லாமல் தொழிற்சாலை நிர்வாகிகள் அனைவரும் வெளியூர்களுக்குச் சென்றுவிட்டனர். இதில் குறிப்பிடத் தக்கது, என்னவென்றால் புதிதாகப் போடப்பட்டிருக்கும் போனஸ் கோரிக்கை மட்டுமல்ல அந்தத் தொழிலாளர்கள் 1½ மாதங்கள் வேலை செய்ததற்கான சம்பளம் இரண்டு லட்சம் ரூபாய் வருகிறது. அந்தச் சம்பளத்தைக்கூடக் கொடுக்காமல் இருப்பதால் அத்தனை தொழிலாளர்களுடைய குடும்பங்களும் கஷ்டத்திற்கு ஆளாகி இருக்கின்றன. இன்றுடன் அங்கு நடக்கும் ஸ்ட்ரைக் 41-வது நாளாகும். தென்னாற்காடு



1967 நவம்பர் 27] [Thiru C. Govindarajan]

மாவட்ட கலெக்டர் முதல் பல்வேறு மாவட்டங்களில் கன்சிலியேஷன் நடந்தும் பலன் ஏற்படவில்லை. தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மூலம் நடைபெற்ற சமாசப் பேச்சில் லேபர் கமிஷனர் கொடுத்த ஆலோசனையைக் கூட ஏற்றுக்கொள்ளவில்லை. தொழிலாளர்களுடைய ஊதியத்தைக் கூடக் கொடுக்காமல் உற்பத்தி செய்து வைத்திருக்கக்கூடிய பொருள்களை வெளியே கடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். சட்டவிரோதமான முறையில் சம்பளத்தைக் கூடக் கொடுக்காமல் இருக்கிறார்கள். ஏராளமான குடும்பங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்தப் பிரச்சனையை விட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை வேறு இருக்க முடியாது என்பதால் இதைப்பற்றிச் சிறிது நேரம் விவாதிக்க சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சனையில் அரசாங்கம் சட்டப்படி என்னென்ன செய்ய முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கனம் அங்கத்தினர் அவர்களுடைய ஒத்துழைப்போடு நிர்வாகத்தோடு பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தினார்கள். அதிலே, அவர்களுக்கு லாபம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றியும், போனஸ் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றியும், குறைந்த பட்ச போனஸ் கொடுக்க வேண்டுமென்றால் எந்த அளவு கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றியும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அரசாங்க அளவில் கூட அவர்களை அழைத்து பேசப்பட்டது. லேபர் கமிஷனரும் இரு தரப்பினரையும் அழைத்து தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தினார்கள். இதற்குப் பின்றாலே, சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்கக் கூடுமோ அதை எடுப்பதற்கும் அரசாங்கம் ஆயத்தமாக இருக்கிறது. ஏற்கனவே தர வேண்டிய சம்பளத்தைக் கொடுக்கவில்லை என்றால் அதற்கும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வழிவகை இருக்கிறது. அந்த வழக்கையும் அரசாங்கம் முன்னின்று நடத்தும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இது ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்குப் பொருத்தமானது அல்ல. கேள்விகளாகவோ வேறு முறையிலோ கொண்டு வரலாமே தவிர, ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு உட்பட்டது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை, நம் விதிகள் 50 உள்விதி 8-ன் கீழ், அனுமதிக்கக் கூடாதென்று பல முறை தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.
28—7—1953-ல் அப்போதிருந்த பேரவைத் தலைவர் அவர்கள் இதே மு.ப.
காரணத்தைத் தொழில் தகராறு என்று கூறி அனுமதி மறுத்து 10-30
உள்ளார்கள். பின், எத்தனையோ முறை, ஏறத்தாழ 25 முறைகளுக்கு மேல், வேலை நிறுத்தம் பற்றிய ஒற்றிவைப்புத் தீர்மானங்களைக் கொண்டுவரக் கூடாதென்று தீர்ப்புகள் இருப்பதால், அந்தத் தீர்ப்புகளையொட்டி, இதற்கு அனுமதி கொடுப்பதற்கு மறுக்கவேண்டியவனாக இருக்கிறேன்.

3. அரசினர் மசோதா.

### 1967-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக் கட்டளைகள் (திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக் கட்டளைகள் (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மசோதா அறிமுகப்படுத்தப் பட்டது.

THIRU K. VINAYAKAM : On a point of information. Sir. The State is awaiting very keenly the introduction of this Bill and in fact many people interested in public affairs like education and activities of such kind are eagerly awaiting the passage of this Bill into an Act. May I know from the Minister whether there is enough time within these two days to have it brought before this House and passed into an Act?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இத் திருத்த மசோதா விரிவான முறையில் கொண்டுவரக்கூடிய முறையில் திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. இது ஒரு சிறு பகுதிதான். அதை மட்டுமே நாளை மறுநாள் கொண்டு வரமுடியும். விரிவான திட்டம் பின்னால்தான் எடுத்துக் கொள்ள முடியும்.

### 4. 1967-68-ம் ஆண்டு தமிழக மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று கட்சித் தலைவர்கள் உரைகளாற்றுவார்கள். அதற்கு முன் சிறிது நேரம் திரு. அண்ணாமலை அவர்கள் உரையாற்றுவார்கள்.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை :** சட்டமன்ற தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இடைக்கால நிதிக் கோரிக்கையை ஆதரித்து பேச வாய்ப்பு பெற்றமைக்கு நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்தியத் துணைக்கண்டத்திலேயே மின்சார வாரியம் தமிழ்நாட்டில் சிறந்த முறையில் அது உற்பத்தி செய்யப்பட்டும் உற்பத்தி செய்வதற்கான ஆரம்ப காரியத்தில் தமிழ் நாட்டிலுள்ள பொறியியல் வல்லுனர்கள் மிக்கத் திறமையோடு அதற்கான முன்



திட்டங்களையும், ஏற்பாடுகளையும் செய்து மின்சார உற்பத்தி பெருமளவிற்கு உற்பத்தி செய்யப்படுவதற்கு மூலகாரணமாக இருந்த நம் பொறியியல் வல்லுனர்களை இந்த நேரத்தில் நான் மனமாற பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, குந்தா மின்சார உற்பத்தி நிலையத்தை நான் சென்று பார்த்தபோது அத் திட்டத்தை உருவாக்குவதற்கு திட்டமிட்ட தமிழ்நாடு பொறியியல் வல்லுனர்களான திரு. முத்துகுமாரசுவாமி முதலியார் அவர்களையும், மற்றும் வாரியத்தின் தலைவர் போன்றவர்களையும் நாம் நிச்சயமாக பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். திட்டமிடுதல் என்பதை நினைக்கும்போது அங்குள்ள கொடிய விலங்குகள், நச்சுப் பாம்புகள், பெரிய புதர்கள், காட்டாறுகள் இவற்றையெல்லாம் சமாளித்து எப்படி திட்டமிட்டார்கள் என்பதை வியந்து நோக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் சிறப்பான முறையில் திட்டமிட்டு செய்ததை, நம் தேவைக்கேற்ப உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள வாரியம் அதன் செயல்முறைகளை திருத்திக் கொள்வதன் மூலம் இந்த நாட்டு மக்கள் தங்கள் மின்சாரத் தேவையை முழு அளவிற்கு பயனுறச் செய்யமுடியும் என்பதைக் குறித்து கடந்த இரண்டு நாட்களாக இந்த மன்றத்தில் மேன்மைதங்கிய உறுப்பினர்கள் அருமையான யோசனைகளை எல்லாம் நல்கினார்கள். இவற்றையெல்லாம் நம் அரசு கருத்தில் கொள்ளவேண்டுமென்பது மட்டுமல்லாமல் மின்சார வாரியத்தின் பொறுப்பில் இருக்கிறவர்கள் மிகப் பொறுப்போடு அவைகளை யோசிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இங்கு மின்சாரத் துறையில் போடப்பட்டிருக்கும் பெரு முதலுக்கேற்ப அதில் கிடைக்கும் லாபம் மிகக் குறைவு என்பது மட்டுமல்ல, பெரு நஷ்டத்தை நாம் சந்திக்க வேண்டிய துர்பாக்கியமான சூழ்நிலையில் மின்சார வாரியம் இருப்பதை உணருகிறோம். உண்மையாகவே சிக்கனம் என்று சொன்னால் தொழிலாளர்களைக் குறைத்துக் கொள்வதன் மூலம் மட்டுமே சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது என்றால் இந்த நாட்டிலுள்ள வேலையில்லா திண்டாட்டத்தை மேலும் மேலும் ஊக்குவிப்பதற்குத்தான் அது அமையுமே தவிர அமைதியை ஏற்படுத்துவதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் அது துணை செய்வதாக அமையாது.

இங்கு சில நண்பர்கள் சொன்னார்கள். மின்சார இணைப்புக் கம்பங்கள் இருக்கின்றனவே அந்த சிமென்டால் ஆக்கப்பட்ட கம்பங்கள் ஒப்பந்த பணியாளர்களுக்கு கொடுக்கப்படுவ்தாகவும் அப்படி ஒப்பந்தப் பணியாளர்களுக்கு கொடுக்கப்படுகிற தொகை ஒரு சிமென்ட் கம்பத்திற்கு 85 ரூபாய் என்றும் அதை மின்சார வாரியத்தைக் கொண்டு செய்வதன் மூலம், மின்சார அலுவலகத்தில் பணியாற்றுகிற தொழிலாளர்களைக் கொண்டு செய்வதன் மூலம் 65 ரூபாயில் சிக்கனமாகவும், செம்மையாகவும்,, தரமுள்ளதாகவும் உறுதிபடைத்ததாகவும் செய்ய முடியும் என்று கூறி நான் கேட்டிருக்கிறேன். ஏறத்தாழ கம்பம் ஒன்றுக்கு 20 ரூபாய் லாபம் கிடைக்கிறது. அதே நேரத்தில் தொழிலாளர்களின் வேலையில்லாத்

திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் அத்திட்டம் பயனுள்ளதாக அமையும். ஆகவே கம்பம் ஒன்றுக்கு 20 ரூபாய் அதிகமாக வீண் செலவு செய்வதை மாற்றியமைத்தால் பல லட்சக் கணக்கான ரூபாயை நாம் மிச்சப்படுத்த முடியும். அந்த நிலையில் இனிமேல் இந்த வாரியம் சிக்கனத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் லாபகரமான நிலையில் அவற்றை ஆக்கவேண்டுமென்றும் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். 'எக்ஸ் ஸ்டாக்' முறை என்று சொல்கிறார்கள். அதாவது அவர்கள் தேவை எவ்வளவோ அந்தத் தேவையைச் சொல்கிறபோது இந்த இந்த சாமான்களை இந்த இந்த கம்பனியார் எங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று விலை நிர்ணயம் செய்யாமலேயே முன்கூட்டியே ஒரு கம்பனியுடன் பேசிக்கொள்வது. அப்படிப் பேசிக் கொள்கிற முறையில் இந்த வாரியம் பல லட்சக் கணக்கான ரூபாய் நஷ்டத்தை ஏற்றிருக்கிறது என்று எனக்கு தகவல் கிடைத்துள்ளது. உண்மையாகவே திடுக்கிடும்படியான தகவல் என்று கூறாமல் இருக்க முடியவில்லை. எங்களுக்கு இந்த மாதத்தில் இவ்வளவுடன் மின்சாரம் சம்பந்தப்பட்ட கருவிகள், துணைப் பொருள்கள் தேவை என்று கூறி. . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : நேற்று முன் தினம் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசிக் கொண்டு வந்ததுபோலவே கனம் கடம்பத்தூர் தொகுதி உறுப்பினர் அவர்களும் பேசிக் கொண்டு வருகிறார்கள். அவைகளை எல்லாம் என்னிடம் தனியாகக் கொடுக்க வேண்டுமென்று டாக்டர் அவர்களைக் கேட்டுக் கொண்டதைப் போலவே கனம் உறுப்பினர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். இந்த மின்சார வாரியம் பற்றிய தவல்களைப் பற்றி மட்டும் பேசுவது பொருத்தமாகயிருக்கும்.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை** : தமிழ்நாட்டில் மின்சாரக் கழகம் ஏற்படுத்தப்பட்டு சற்றேறக்குறைய பத்து ஆண்டுகளாகி விட்டது என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். நம் தமிழ் நாட்டில் மின்சாரக் கழகம் தோற்றுவிக்கப்பட்ட பிறகு பிற மாநிலங்களில் தோற்றுவிக்கப்பட்ட மின்சாரக் கழகங்கள் செயல்படுகிற முறைகள் சரிதானா என்பதைப் பற்றி தணிக்கை செய்வதற்கு என்று தணிக்கை குழு நியமித்திருக்கிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ அந்த மின்சாரக் கழகம் செயல்படுவதைத் தணிக்கைக் குழுவினர் ஆராய்ந்து கண்டுபிடித்து, ஒழுங்கான முறையில் நடைபெறும் முறையில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதே போன்று தமிழகத்தில் ஏற்படுத்தினால் மின்சாரக் கழகம் செயல்படும் முறைகள் நன்றாக அமையும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மற்றும், அந்தத் துறையிலே வேலை செய்கிற எண்ணற்ற, ஏராளமான, ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் இன்றளவும் நிலையில்லா ஊழியர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். 'எப்போது என் சீட்டுக் கிழிக்கப்படுமோ நான் அறியேன் பராபரமே!' என்ற நிலையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.



65032



இரண்டு ஆண்டுகளாக வேலை செய்து வந்த கமர்ஷியல் அஸிஸ்டென்ட் காரணம் இல்லாமல் வீட்டுக்கு அனுப்பப்படுகிறார். மூன்று ஆண்டுகளாக வேலை செய்து வந்த கமர்ஷியல் அஸிஸ்டென்ட் குற்றம் குறை எதும் கூறப்படாமலேயே வீட்டுக்கு அனுப்பப்படுகிறார். துணை ஊழியர்களாக இருக்கிறவர்கள், [illegible] [illegible]வர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். நிரந்தரப் பணியாளர்களுக்குள்ள சலுகைகளெல்லாம் இவர்களுக்கு அளிக்கப்படவில்லை. நிரந்தர ஊழியர்களுக்குக் கடமைகள் என்னென்ன உண்டோ அவைகளில் சிறிதளவுகூடக் குறையாமல் கடமைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதை அந்த வாரியத்தின் பொறுப்பினர் நன்றாக அறிவார்கள். அந்தக் குறையைப் போக்கி, காயமில்லாத தன்மையை, நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிற தன்மையைப் போக்கி, எல்லா ஊழியர்களையும் நிரந்தரமாக ஆக்கும் முறையை மேற்கொண்டால், ஏழைப் பாட்டாளி மக்களின் வாழ்க்கைப் பிரச்னைக்கு, அன்றாட வேலைப் பிரச்னைக்கு வழி வகை செய்ததாக அமையும். அதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் மேல்மதுரமங்கலம் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அங்கே 26 மின் பொறிக் கம்பங்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்த 26 கம்பங்களுக்கும் பல்புகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒரே ஒரு பல்புதான் எரிகிறது. நான் அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினன். நான் அந்தக் கிராமத்திற்குச் சென்றால், என்னைப் போற்றுவார்களா? அல்லது தூற்றுவார்களா? இவ்வளவு பெரிய சாதனைகளைக் கண்டிருக்கின்ற வாரியத்தின்கீழ் உள்ள நிர்வாகத்தில், சிறந்த முறையில் பணியாற்றுகிறது என்று பேசப்படுகிற வாரியத்தின்கீழ் உள்ள நிர்வாகத்தில், ஒரு கிராமத்தில் உள்ள 26 பல்புகளில் 25 பல்புகள் எரியவில்லை. இதைப் பற்றி ஏ.ஈ.-யிடம் சொன்னால், "நான் என்ன செய்வேன், பல்புகள் இல்லை; டீ.ஈ. யிடம் சொல்லுங்கள்' என்று சொல்லுகிறார். டீ.ஈ.-யிடம் போய்க் கேட்டால், 'எஸ்.ஈ.-ஐப் போய் பாருங்கள்' என்று சொல்லுகிறார். எஸ்.ஈ.-யைப் போய்க் கேட்டால், தனக்கு பல்பு போட அதிகாரம் இல்லையென்றும், சேர்மனுக்கு எழுதியிருப்பதாகவும் சொல்லுகிறார். இவரைக் கேட்டால், அவரைக் காட்டுகிறார்; அவரைக் கேட்டால், இவரைக் காட்டுகிறார். இந்த நிலைமை மாற மாவட்டத் தலைமைப் பொறியாளர்களுக்கு ஓரளவு உரிமை அளிக்கப்பட்டால்தான், தேவை ஏற்பட்டவுடன் தேவையைப் பூர்த்தி செய்ய வழி வகை செய்ததாக அமையும். அந்த முறையை இந்த வாரியம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலே சொன்னதைப் போல, சிமெண்ட் கம்பங்களை நிச்சயமாக டிபார்ட்மெண்ட்டே ஏற்று உற்பத்தி செய்வதின் மூலமாக, ஒட்டு மொத்தமாக, தோராயமாக 10 லட்சம் ரூபாய் மிச்சம் பிடிக்க முடியும் என்று புள்ளி விவரம் கிடைத்திருக்கிறது. இது ஒரு கணிசமான

தொகை. அந்த ஒன்றையாவது எதிர்காலத்தில் மேற்கொள்ளும் வகையில் இந்த வாரியம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், அங்கத்தினர்கள் பல பேர்கள் எடுத்துச் சொன்னார்கள். தனியார் துறையில் இருக்கிற, தொழில் ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்படுகிற மின்சாரத்திற்கு 1¼, 2, 3, 4 காசுகள் என்ற அளவில் அவர்களுக்குச் சலுகை கொடுத்துவிட்டு, இந்த நாட்டில் உள்ள மனிதன் உயிர் வாழ உணவு அளிக்கக்கூடியவர்களாக விளங்குகிற விவசாயிகளுக்கு, விளை நிலங்களுக்கு நீர் இறைப்பதற்காக உபயோகப்படுத்துகிற மின்சாரத்திற்கு விதிக்கப்படும் கட்டணம் மிக அதிக அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. தனியார் ஒருவர் பம்ப் செட் வைத்துவிட்டு விண்ணப்பம் போட்டு மின்சார கனெக்ஷன் வேண்டுமென்று கேட்டால், "நேற்று விண்ணப்பம் போட்டுவிட்டு கனெக்ஷன் கேட்கிறாயே, உங்கள் அப்பன் காலத்தில் போடப்பட்ட விண்ணப்பம் இன்னும் அப்படியே இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றி விவசாயி, விவசாயத்திற்கு என்று கேட்டால், எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் தனிச் சலுகை அளித்து அவர்களுக்கு உடனடியாக மின்சார இணைப்புக் கொடுக்கும் முறையில் இந்த வாரியத்தின் அமைப்பு செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நிதி நிலை அறிக்கையை மனதாரப் பாராட்டி வரவேற்று, முடித்துக்கொள்கிறேன்.

■ திரு. கே. என். குமாரசாமி : சபைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் பேரில் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சாரம் சம்பந்தப்பட்ட மட்டில், தமிழகம் முன்னணியில் நிற்பதாக அரசாங்க அறிக்கையிலே கூறப்பட்டிருப்பது உண்மைதான். இருந்தாலும் பல பகுதிகளிலே மின்சாரம் வினியோகிக்கப்படாத நிலைமை இருக்கிறது. கோவை ஜில்லாவிலே 100 அடி, 150 அடி ஆழம் கிணறு தோண்டியும்கூட அந்தப் பகுதியிலே விவசாய உற்பத்திக்கு மின்சாரம் கொடுக்கப்படாமல், விவசாய உற்பத்தியில் ஈடுபட முடியாமல் இருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் விண்ணப்பம் போட்டு 2 ஆண்டுகள் 3 ஆண்டுகள் ஆகியும்கூட அவர்களுக்குக் கனெக்ஷன் கிடைக்காத சூழ்நிலையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளைக் கேட்டால், மின்சாரக் கருவிகள் பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தப் பகுதியில், குறிப்பாக பல்லடம், சோமனூர் பகுதிகளில் மூன்று ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும் கனெக்ஷன் கிடைக்காமல் இருக்கிறது. இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், அந்தப் பகுதி விவசாயிகள் உற்பத்தியில் ஈடுபட வேண்டும். அதே நேரத்திலே 100 அடி ஆழத்திலிருந்து தண்ணீர் எடுக்கவேண்டுமென்றால் எருது, மாடு வைத்துத் தண்ணீர் இறைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. பல கிணறுகள் எடுத்தும், விவசாயம் செய்ய முடியாமல் பல ஏக்கர் பூமிகள்





காத்துக் கிடக்க வேண்டிய நிலையில், புன்செய் தானியங்களைப் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த பல்லடம், சோமனூர் பகுதி விவசாயிகளுக்கு உடனடியாக மின்சார கனெக்ஷன் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் 2—3 ஆண்டுகளுக்கு முன்னால் விண்ணப்பம் போட்டும் அந்த விண்ணப்பம்கூட இல்லை என்று சொல்லும் அளவுக்கு அதிகாரிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் இருக்கும் பட்சத்தில் சோதனையிட்டுப் பார்த்து, எந்தெந்த விண்ணப்பங்கள் விஷயத்தில் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று பார்த்து, விசாரித்து, அந்தப் பகுதி விவசாயிகளுக்கு மின்சார கனெக்ஷன் கிடைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க குந்தா ஸ்கீமில் வேண்டிய அளவு மின்சாரம் கிடைக்கும் என்று வாக்குறுதி அளித்திருந்தார்கள். அந்த வேலைகளை உடனடியாக முடித்தால், வேண்டிய அளவு மின்சாரம் கிடைக்க வாய்ப்புகள் இருக்கின்றன. அதை உடனடியாகச் செய்ய அரசு முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சார வாரியத்தில் வேலை செய்கிற தொழிலாளர்களை டெம்பரரியாகவும், வேலை இருக்கும்போதும் வைத்துக்கொள்கிறார்கள். வேலை இல்லாதபோது அவர்களை வெளியே அனுப்புவது சரியானதல்ல. ஆகவே, மின்சார அபிவிருத்தி மூலமாக அவர்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்க வாய்ப்புகளை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைகள் ஓரளவுக்கு இருந்தாலும் அவைகளை நிவர்த்தி செய்ய போர்டார் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

நான் முதலில் சொன்னபடி அந்தப் பகுதி விவசாயிகளுக்கு மின்சாரத்தின் மூலமாகத்தான் விவசாயம் செய்ய முடியும் என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு மின்சாரம் வழங்குவதில் அந்தப் பகுதியின் விஷயத்தில் அதிக அக்கறை காட்டும் முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த விவசாயிகளுக்கு, கிணறுகளிலிருந்து அவர்களுடைய தோட்டத்திற்குத் தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் அதற்கு மின்சாரத்தை உபயோகப்படுத்தும்போது, அதிக சார்ஜ் போடுவதை நிறுத்தி, குறைந்த சார்ஜில் தண்ணீர் எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விசைத்தறிகளுக்கு கரண்ட் வழங்குதல் காலதாமதம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான தறிகள் சும்மா முடங்கிக் கிடக்கின்றன. விசைத் தறிகளுக்கு அரசாங்கம் மின்சாரம் கொடுப்பதாகச் சொல்லியும்கூட, அந்தப் பகுதியில் இருக்கிற ஆயிரம் தறிகளுக்கு வழங்காமல் தறிகள் அப்படியே பழுதாகிக் கொண்டிருக்கின்றன. அதிகாரிகளைக் கேட்டால், 'எங்களுக்கு இன்னும் மின்சாரக் கருவிகள் கிடைக்கவில்லை' என்று சொல்லிக்கொண்டு

இருக்கிறார்கள். அந்த ஆயிரம் தறிகளின் மேல் பணம் போட்டிருந்த மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு அவர்கள் குடும்பங்கள் வட்டிகூட கட்டமுடியாத நிலையிலும், அந்தத் தறிகள் ஓடாத சூழ்நிலையிலும் இருக்கிறது. அவர்களுக்கு உடனடியாக மின்சார கனெக்ஷன் அளிக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகின்றேன். இந்த மின்சார வாரியத்தில் அரசு தீவிர முயற்சி எடுப்பதன் மூலம் நாட்டின் தொழில் உற்பத்தியையும், விவசாய உற்பத்தியையும் அதிகப்படுத்த முடியும். இந்த நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். இதற்கு அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அழகர்சாமி அவர்களை 10 நிமிடங்களுக்கு உட்பட்டு உரையாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*** திரு. சோ. அழகர்சாமி:** மதிப்பிற்குரிய சபாநாயகரவர்களே, மின்சார போர்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்தைச் சுருக்கமாகச் சொல்லிக்கொள்ளுகிறேன். நமது மின்சார போர்டானது நமது மாநிலத்தில் ஒரு மகத்தான சாதனையைச் செய்திருக்கிறது. அதற்காக போர்டாரையும், சம்பந்தப்பட்ட பணியாளர்களையும் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். நமது மாநிலத்திலே உள்ள கிராமங்களில் 27,000 கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்பட்டிருக்கிறது. பாக்கியுள்ள கிராமங்களிலும் சீக்கிரமாக மின்சாரத் தொடர்பை ஏற்படுத்தி வேளாண்மைக்காக மின்சாரம் வழங்குதல் நமது அரசு அதிக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதை நாம் பாராட்ட வேண்டும். ஆனால் 9 இலட்சம் கிணறுகளுக்கு மின்சாரம் வழங்க வேண்டியிருக்கிறது. அதிலே, இன்று மூன்றில் ஒரு பகுதி, அதாவது 3 இலட்சம் கிணறுகளுக்குத்தான் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக இன்று கிணறுகள் உள்ள இடங்களில் பழைய முறையில் மாடுகள் வைத்தோ, வேறுவிதமான சாதனங்கள் மூலமாகவோ இறைவை செய்து விவசாயம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. ஏனென்றால், கிணறுகளின் ஆழம் அதிகரித்திருப்பது மட்டும் அல்ல, அந்த முறை கட்டுப்படியாகாத நிலையிலும் இருக்கிறது. ஏனைய தொழிற்சாலைகளில் உற்பத்தியைப் பெருக்குவது அத்தியாவசியமான மூலப்பொருட்களைப் பொறுத்தே அமைகிறது. பருத்தி போன்ற மூலப் பொருட்களைக் கிணற்றுப் பாசனத்தின் மூலமாக அதிக உற்பத்தி செய்ய முடியும். ஒன்பது இலட்சம் கிணறுகளில் மூன்று இலட்சம் கிணறுகளுக்குத்தான் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அதை, உடனடியாக, சீக்கிரமாக எல்லாக் கிணறுகளுக்கும் வழங்க அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று குறிப்பாக கோவில்பட்டி வட்டாரத்தில் மானம் பார்த்த பூமிகளில் கிணற்றுப் பாசனத்தின் மூலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். அங்குள்ளவர்கள் மின்சாரத்திற்கு மனுச் செய்தும்



இருக்கிறார்கள். மூன்று, நான்கு வருஷங்களுக்கு மேல் ஆகியும் கூட மின்சாரம் கிடைக்காமல் இருக்கிறது. பல இடங்களில், 50, 60 கிணறுகள் உள்ள இடங்களில் உள்ளவர்கள் மனுச்செய்து 3, 4 வருஷங்களாகியும் எந்தவிதமான பதிலும் இல்லாமலே இருக்கிறது. அதிலும் அவர்கள் டெபாசிட் கட்டி ஒரு வருஷத்துக்கு மேலாகியும் மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்குக் காரணம் 'வயர்'கள், 'போல்'கள் இல்லை என்று சொல்லப்படுகிறது.

கிராமங்களிலும், நகரங்களிலும் ஏறக்குறைய 30, 40 பல்புகள் போட்டிருந்தும் 2, 3 லைட்டுகள்தான் எரிகின்றன. ஐந்தாறு மாதங்களாகப் பல ஊர்களிலும் லைட்டுகள் எரியப்படாமலேயே இருந்து வருகின்றன. அதைக் கவனித்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரிசன குடியிருப்புப் பகுதிகளில் மின் இணைப்புக் கொடுப்பதற்கு அதிகமான மானியம் அரசு கொடுக்க வேண்டும். கிராமங்களிலும், ஒதுக்குப்புறங்களிலும் வீடுகள் உள்ள அரிசனங்களுக்கு மின் இணைப்பு இல்லாமல் இருப்பது அவர்களுடைய போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறது. கிராமங்களில் மின் இணைப்பு ஏற்படுத்துவதற்கு நிதியை அதிகமாக ஒதுக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தனியார் துறையிலுள்ள நிறுவனங்கள் தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்றன. அவர்கள் செய்யவேண்டிய மின் இணைப்பிற்கான வேலைகளில் அக்கறை காட்டாமல் அசட்டையாக இருக்கிறார்கள். அதைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே நேரத்தில் நமது மின்சார போர்டில் தொழிலாளர் பிரதிநிதி ஒருவரைச் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். நமது அண்டை மாநிலமான கேரளத்தில் தொழிலாளர் பிரதிநிதி ஒருவரை சேர்த்திருப்பதாக கேள்விப்படுகிறேன்.

பெரும்பாலான ஊழியர்கள், பல வருஷங்களாக வேலையில் ஈடுபட்டு வந்தாலும்கூட தற்காலிக ஊழியர்களாக, 'டெம்பரரி' ஊழியர்களாக இருக்கிறார்களே தவிர 'பர்மனெண்டாக' ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய வேலைக்கு உத்தரவாதம் இல்லாமல் இருக்கிறது. தற்காலிகமாக உள்ள அந்த ஊழியர்களை நிரந்தரமாக ஆக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் விவசாயத்திற்கு அளிக்கும் மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு 8¼ பைசா கட்டணம் வசூலிக்கப்படுகிறது. உற்பத்திச் செலவு 17 பைசாவாக இருக்கிறது என்பதால் கட்டணத்தைக் கூட்ட வேண்டியிருந்தும் நாங்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை என்று அறிக்கையிலே இருக்கிறது. உணவு உற்பத்தி மிக மிக அவசியமாக இருக்கிற காரணத்தாலும், ஏனைய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகக்கூடிய பண்டங்கள் விற்பனையாகக்கூடிய மார்க்கெட்டைப் பெறுவதற்கும், விவசாயிகளுக்கு அதிக வருமானம்

வரக்கூடிய வகையிலும் இன்னும் இந்தக் கட்டணத்தை குறைத்தாலும் குறைக்கலாமே தவிர கூட்டக் கூடாது. வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதன் மூலமாக உணவுப் பஞ்சத்தைப் போக்குவதற்கு நாம் கூடும் எடுத்துக்கொள்ள முடியும். அதே நேரத்தில், மின்சாரத்திற்கு விண்ணப்பம் செய்து, மின்சாரம் வழங்கும் நேரத்தில் ஏழை விவசாயிகளிடமிருந்து 100 ரூபாய், 200 ரூபாய் மின் இலாகா கடன் வசூல் செய்யும் பழக்கம் இருக்கிறது. அதை அவர்கள் நிறுத்த வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆகவே, இந்த முறையிலே உடனடியாக இன்று கிராமங்களில் பாக்கியிருக்கக்கூடிய கிணறுகளுக்கு, மனுச்செய்தவுடன் குறிப்பிட்ட இரண்டு மாதங்களுக்குள்ளே மின் இணைப்புக் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும். இது உற்சாகத்துடன் விவசாயத்திலே ஈடுபட்டு அக்கறையோடு உற்பத்தி செய்து உணவுப் பஞ்சத்தைப் போக்கும் வாய்ப்பாக அமையுமென்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நல்லசிவன் அவர்கள் 10 நிமிட காலவரம்பிற்கு உட்பட்டு உரையாற்றுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. க. ர. நல்லசிவன் : பெருமதிப்பிற்குரிய தலைவரவர்களே, மின்சார வாரியத்தில் நடைமுறை சம்பந்தமான குறிப்புகளை, முதலமைச்சர் தன்னிடத்தில் சொல்லிவிடுவது நலம் என்று சொன்னார்கள். எனவே நேரில் சொல்லிவிடலாம் என்ற எண்ணத்துடன், பொதுவாகச் சொல்லக்கூடிய கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். இன்று மின்சார உற்பத்தியைப் பொறுத்த வரையிலே அனல் மின்சாரம், புனல் மின்சாரம் என்று இரண்டு வகை உற்பத்தி இருக்கிறது. இரண்டு வகையிலும், நமது ராஜ்யத்தில் பெருவாரியாக உற்பத்தி செய்யப்படுகிறது. இன்றைக்குப் புனல் உற்பத்தி முறைகளில் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. அவைகளைப் பொறுத்தவரையில் சர்க்கார் கவனத்தில் வைத்துக் கொண்டு இந்தப் பகுதியில் சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அதாவது புனல் மின்சார உற்பத்தி என்று சொன்னால், நீர்ப்
மு.ப. 11-00 பாசனம் துவக்கி இருக்கக்கூடிய பகுதிகளில் அணைகளைக்கட்டி மின்சாரம் உற்பத்தி செய்யும் முறைதான். இதனுடைய விளைவாக பல இடங்களில் நீர் பாசன இலாகாவிற்கும் மின்சார இலாகாவிற்கும் ஒத்த தன்மை இல்லாததனாலே பாசன வசதி தடைபடக்கூடிய நிலைமை இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோல பல்வேறு பகுதிகள் இருக்கின்றன. உதாரணமாக சொல்லப் போனால், ஒன்று—கீழ் பவானி, இரண்டு—அமராவதி, மூன்று—மணிமுத்தாறு. நான்கு—பரம்பிக்களம்-ஆளியாறு. இதுபோன்ற இடங்களிலே நீர்ப்பாசன அணைகளுக்கு மேலாக மின்சார அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இரண்டும்





ஒன்றாக இணைக்கப்பட்டு நீர்ப்பாசன அணைகளுக்கு முதன்மையான இடம் கொடுக்கப்படாமல் இருக்கின்ற நிலை இல்லாமல் இருப்பதனால் நீர்ப்பாசன இலாகா ஒரு பக்கம், மின்சார இலாகா ஒரு பக்கம் என்று அணைகள் கட்டிக் கொண்டிருப்பதனால் நீர்ப்பாசனத்திலே பல்வேறு சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாக கீழ் பவானிக்கு மேலாக சுமார் 14 அணைகளை மின்சார இலாகா கட்டியிருக்கிறது. சாதாரணமாக கீழ் பவானியிலிருந்து பாசனத்திற்குக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. ஒரு முறைக்கு 100 க்யூசெக்ஸ், 200 க்யூசெக்ஸ் என்ற அளவிலேதான் தண்ணீர் விடப்படுகிறது. அந்த முறையிலே கீழ் பவானி பகுதிக்கு தண்ணீர் கிடைப்பதற்கு மின்சார வாரியம் ஒப்புதல் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே சர்க்கார் இனிமேல் இந்த புனல் மின்சார உற்பத்திக்கு அணைகள் கட்டும்போது நீர்ப்பாசன வசதி முறைகளுக்குத் தடங்கல் இல்லாமல் நீர்ப்பாசன திட்டங்களுக்கு முதன்மையான இடம் கொடுத்து, இந்த புனல் மின்சார திட்டங்களை செயல்படுத்த வேண்டுமென்பதை ஒரு அடிப்படையாகக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அகில இந்திய ரீதியிலும் பாசன வசதிக்கு முதலிடம் கொடுத்து, மின்சார வசதிக்கு இரண்டாவது இடம் கொடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படை இல்லாமல் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஆகவே இதிலே ஒரு தெளிவான முடிவுக்கு இந்த அரசாங்கம் வர வேண்டுமென்றுக் கூற விரும்புகிறேன். பாசன வசதிக்கு அணைகள் கட்டுவதற்கு முதலிடமும், மின்சார வசதிக்கு அணைகள் கட்டுவதற்கு இரண்டாவது இடமும் கொடுக்ககூடிய முறையில் இந்த அரசு செயல்படவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். தேவையான அளவு மின்சாரத்தை புனல் மின்சார நிலையங்கள் மூலம் அதிகப்படுத்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம் இராஜ்யத்தைப் பொறுத்தவரையில், நெய்வேலி, என்னூர், கல்பாக்கம், தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் ஒன்றிரண்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் ஒன்றிரண்டு பகுதிகளில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. இவைகளை எல்லாம் துரிதமாக நிறைவேற்றுவதன் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்து நீர்ப்பாசன பகுதிகளுக்குத் தொல்லை கொடுக்காமல் இருக்க முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்கு மின் இணைப்புக் கொடுப்பது ஓரளவு துரிதமாக நடந்த போதிலும்கூட, தேவையை வெகுவாக பூர்த்தி செய்யக்கூடிய அளவிலே இல்லை. அதுவும் இன்றைக்கு மின் வாரியம் 48,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கும் நிலையில் இருந்தாலும்கூட, பண வசதி, மற்றும் மத்திய சர்க்காருடைய நிதி உதவி இவைகள் காரணமாக பூரணமாக எல்லா பம்ப் செட்டுகளுக்கும் இணைப்பு கொடுக்க முடியாத நிலை இருக்கிறது.

[திரு. க. ர. நல்லசிவன்] [1967 நவம்பர் 27

மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து எந்தந்த வகையில் பண உதவி பெற முடியுமோ, கடன் உதவி பெற முடியுமோ அந்த வகையில் எல்லாம் உதவி பெற முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

மற்றொரு பக்கம், மின் வாரியம் விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கொடுப்பதற்கு ரூபாய் 200 முதல் ரூபாய் 250 வரை ஆகுமென்று கருதுமானால் அதற்கும் ஒரு வழி சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக ஒரு விவசாயிக்கு மோட்டார் பம்பு செட்டுக்கு இணைப்புப் பெறுவதற்கு குறைந்த பட்சம் ரூபாய் 200-லிருந்து ரூபாய் 500 வரை செலவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. அந்த தொல்லை குறைக்கப்படுமானால் ரூபாய் 200-லிருந்து ரூபாய் 500 வரையிலே மின்சார வாரியம் விவசாயிகளிடமிருந்து கடன் பெற முடியும். அந்தக் கடனை வைத்துக் கொண்டு இப்பொழுது 48,000 பம்பு செட்டுகளுக்கு இணைப்புக் கொடுத்திருக்கிறோம் என்பதை 50,000 பம்பு செட்டுகளுக்கு இணைப்புக் கொடுத்தோம் என்ற நிலையை உருவாக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றிருக்கக்கூடிய மொத்தக் கிணறுகள் 9 இலட்சம். அதிலே 3 இலட்சம் கிணறுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் உள்ள 6 இலட்சம் கிணறுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுப்பதற்கு இப்பொழுதுள்ள வேகத்தில் போனால் இன்னும் 12 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகள் வரை தேவைப்படும். இன்னும் புதிய கிணறுகளை வைப்பதற்கு நாம் அதிகமாக உதவி செய்து வரும் நிலைமையில் வரக்கூடிய காலத்தில் கிணறுகளின் எண்ணிக்கை மேலும் அதிகமாகக் கூடும். இந்திய நாட்டிலே வேறு எந்த மாநிலத்திலும் காணாத அளவுக்கு நம்முடைய மாநிலத்திலே ஏராளமான கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்ற காட்சியை நாம் பார்க்க முடிகிறது. அவைகளுக்கு எல்லாம் இணைப்பு கொடுப்பதற்கு இப்பொழுது இருக்கக்கூடிய மீதி 6 இலட்சம் கிணறுகளையும் சேர்த்து இணைப்புக் கொடுப்பதற்கு ஒரு 10 ஆண்டு திட்டத்தை வகுத்து, அந்த காலத்திற்குள்ளேயே திட்டவட்டமாக மின்சார இணைப்புக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல இந்த மின் விநியோகத்தில், விவசாயிகளுக்குக் கொடுப்பதாலே ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று அமைச்சர் அவர்களுடைய உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நஷ்டத்தை ஈடு செய்வதற்கு, மின் வாரியத்தில் காணமல் போவதாகச் சொல்லப்படுகிற பொருள்கள் குறிப்பிடக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அதை ஒழித்தால்—ஒழிப்பதற்கு முயற்சி எடுத்தால்—கோடிக்கணக்கான ரூபாய் மிச்சமாகும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அந்தத் துறையிலே அதிகக் கவனம் செலுத்தி பொருள்கள் காணமல் போவதைப் பார்த்துக் கொண்டால் அந்த



1967 நவம்பர் 27] [திரு. க. ர. நல்லசிவன்]

நஷ்டத்தை ஈடுகட்டிக் கொள்ள முடியும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அதற்கு மேலே 'ஹை டென்ஷன்' பகுதிகளுக்கு கொடுக்கிற மின்சாரத்தின் தொகையை ஒரு பைசா உயர்த்தினால் கூட, அந்தப் பகுதியில் அதிகப் பணத்தைப் பெற முடியும். அந்த அடிப்படையில் விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய நஷ்டத்தை சரிப்படுத்திக் கொள்ள முடியும்.

விவசாய மின் இணைப்புக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலே வரி உயர்த்தக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் அடிப்படை வரி இருக்கிறதே, அதைக் கட்டுவதிலே எங்களுக்குச் சங்கடம் ஒன்றும் கிடையாது. புதிய வரியை மாத்திரம் தயவு செய்து விவசாயிகள் மீது போட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு மேலே மின்துறை வாரியத்திலே தற்போதுள்ள தொழிலாளர்களுடைய நிலையைப் பார்க்க வேண்டும். அங்கே தொழிலாளர்களுடைய எண்ணிக்கையைக் குறைப்பதற்கான கூறுகள் இருக்கின்றன. அதாவது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை பில்லை வசூல் செய்வது என்ற திட்டத்தை அமலில் கொண்டு வந்தால் பல தொழிலாளர்களை வெளியேற்ற வேண்டிய அவசியம் ஏற்படும் என்று நினைக்கிறேன். அந்த பில்லை மாதா மாதம் கட்டக்கூடிய நிலை இருந்தால் விவசாயிகளும் நல்ல முறையிலே பில்லைக் கட்ட முடியும். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை பில்லை கட்டவேண்டுமென்று சொன்னால் அது விவசாயிகளுக்கு பெரும் தொல்லையாகப் போய்விடும். அந்தத் திட்டத்தினால் ஒரு பக்கம் விவசாயிகளுக்கும் கஷ்டம். மற்றொரு பக்கம் தொழிலாளர்களைக் குறைக்க வேண்டிய நிலையும் ஏற்படும். ஆகவே, அந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு மேலே, இந்த மின்சார வாரியத்திலே இருக்கக்கூடிய மேலதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் இடையே இருக்கக்கூடிய உறவு முறை சரியாக இல்லை என்று நான் நினைக்கிறேன். அமைச்சரவர்கள் தன்னுடைய உரையிலே கடைசி வரியிலே சூசகமாக சொல்லி இருக்கக்கூடிய வார்த்தைகளை சரியாக அமல்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

"இருதரப்பினரும் புரிந்து கொண்டு செயல்படும் எண்ணமும் பொது நல உணர்வுமிருந்தால், இன்னும் முடிவுறுமலுள்ள கோரிக்கைகளும் கருத்து வேறுபாடுகளும் விரைந்து இணங்கி, இசைந்து, தீர்க்கப்படுவதில் எள்ளளவு இடர்ப்பாடும் இருப்பதற்கில்லை" என்று அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்தக் கருத்தை அமைச்சரவை வேகமாக நடை முறையிலே கொண்டு வருவதற்கான முயற்சி எடுத்துக்கொண்டால், நிச்சயமாக நான் சொல்லுகிறேன், இந்த வாரியத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையே இருக்கக்கூடிய தொல்லைகளை தீர்ப்பதிலே இது ஒரு

பெரிய முன்னோடியாக இருக்கும். ஆகவே, இந்த நடை முறையை சீக்கிரம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது பேசும்போது போதுமான பண வசதி இல்லை என்ற ஒரு குற்றச்சாட்டு திரும்பத்திரும்ப முன் வருவதால் அந்த வசதியைப் பெருக்குவதற்கான யோசனைகளை முதலில் சொல்ல வேண்டுமென்று கருதி, அதிகமாக இல்லாமல் வரிசைப்படுத்திச் சொல்லுகிறேன்.

தனியார் துறையில் பலரோடு, மின்சாரம் செலவாவதற்கு, உற்பத்திச் செலவுக்கும் கம்மியான ரேட்டுகளிலே செய்யப்பட்டிருக்கிற ஒப்பந்தங்கள் அனைத்தையும் ரத்து செய்து விட வேண்டும். ஆகக்கூடிய செலவுக்குத் தகுந்த, அதை விட கூடுதலான ரேட்டுகள் இல்லா விட்டாலும் ஆகக் கூடிய செலவை சரிக்கட்டக் கூடிய ரேட்டில் தான் தனியார் துறைக்குத் தர வேண்டும். அதற்கு மாறான ஒப்பந்தங்கள் அனைத்தையும் ரத்து செய்து விட வேண்டும்.

கறுப்புப் பட்டியலில் இடம் பெற்றிருக்கக்கூடியவர்களோடு இருக்கக்கூடிய ஒப்பந்தங்களை ரத்துச் செய்து விடவேண்டும்.

இந்த இலாக்காவுக்குத் தேவையான கருவிகளை மற்றப் பொருள்களை வாங்குவதற்குரிய ரேட்டிலே மோசடியான டெண்டர்கள் மூலமாக ஏராளமான நஷ்டம் ஏற்படுகிறது. இவற்றை உன்னிப்பாக பரிசீலிப்பதற்காக ஒரு கமிட்டி அமைத்து, அதைப் பற்றி கவனிக்க வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, காலாவதியாகி, பழைய, பயன்படுத்த முடியாத பல விதமான சாமான்கள் ஏராளமாக வாங்கப்பட்டு பல வருடங்களாக போடப்பட்டிருக்கின்றன. அப்படி வாங்குவதை நாம் உடனடியாக நிறுத்த வேண்டும். அதைப் போன்றப் பொருள்கள் ஏராளமான அளவில் வாங்கிக் கொடுக்கப்பட்டு ஸ்டோர்களில் வைக்கப்பட்டிருப்பது உண்மை. அதிலிருந்து பெரிய அளவுக்கு திருட்டு நடந்து கொண்டே இருக்கின்றது. பல பொருள்கள் காணமல் போய்க்கொண்டே இருக்கின்றன. பெரிய அளவுக்கு நஷ்டத்தை இது ஏற்படுத்துகிறது. இதைத் தடுப்பதற்கு அவசர கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, இந்த போர்டின் கீழ் இருக்கக் கூடிய வாகனங்கள், மோட்டார், இவைகளை முழுவதும் ஒரு 'சென்ட்ரல் பூல்'—மையமான ஒரு பூல்—அமைத்து முறையாகப் பயன்படுத்துவதற்கு நாம் கவனம் செலுத்த வேண்டும். அது தேவையற்றவர்களுக்கு விநியோகம் செய்யப்படுவதன் மூலம் அதிகாரம் துஷ்பிரயோகம்



செய்யப்படுகிறது. இதன் மூலம் இலட்சக்கணக்கில் பெட்ரோல் விரயமாகிறது. இந்த விரயத்தைத் தடுப்பதன் மூலம் வாரியத்திற்கு அதிக அளவுக்குப் பணம் மிச்சம்.

அடுத்து, அதிகாரிகளை டிரான்ஸ்பர் பண்ணுவது. மேல் அதிகாரிகளை மட்டுமல்லாமல் கீழே இருக்கிற ஊழியர்களையும் ஏராளமாக டிரான்ஸ்பர் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. இந்த டிரான்ஸ்பர்களைக் குறைப்பதன் மூலம் ஏராளமான அளவுக்கு சிக்கனப்படுத்துவதற்கு இடம் உண்டு என்று நான் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, அவசர காலத்தை உத்தேசித்து, 10 சதவிகிதம் டி.ஏ.' செலவைக்கட்டுப்படுத்த வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடு உழைப்பாளர்களைப் பொறுத்த மட்டில் கறாராக அமல் படுத்தப்படுகிறது. ஆனால், உயர்தர அதிகாரிகளைப் பொறுத்தமட்டில் அமல்படுத்தாதது மட்டுமல்ல, அதிகமாக 'டி. ஏ.' செலவு ஆகக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, இதை ஒழுங்குபடுத்துவதன் மூலம் இதில் பெரிய அபிவிருத்திக்கு இடம் உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, முக்கியமானது, சர்வ தேசத் துறையிலே ஒப்பிட்டுப் பார்த்தோமானால் லைன் லாஸ் 10 சதமானம்தான், போகப் போக ஏற்படக் கூடிய நஷ்டம். ஆனால், நமது போர்டின் கீழே, எத்தனையோ பல சிறப்புகள் இருந்தபோதிலும், 17 1/2 சதமானம் லைன் லாஸ் ஏற்படுகிறது. இதற்குப் பிரதானமான காரணம் பெரிய பிராசுதாரர்கள், கிராமப்புறங்களில் இருக்கக் கூடிய அரிசி மில் முதலாளிகள் என்று சொல்லப்படுகிறது. எனர்ஜியை திருடுகிறார்கள் பெரிய திருடர்கள், சில்லரை திருடர்கள் அல்ல. மிகப் பெரிய திருடர்கள். இதனால் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்று உணரப்படுகிறது. டிரான்ஸ்பார்மர் லெவலிலேயே மீடர் வைக்கப்பட்டு இதைக்கண்டு பிடித்து தடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இது நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டும். இம்மாதிரி பெரிய நஷ்டம் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும். போர்டுக்கு இது ஒரு முக்கியமான நஷ்டம் என்று நிபுணர்களால் கருதப்படுகிறது.

அடுத்து, ஹைடென்ஷன் கன்ஸ்யூமர்ஸ் பற்றி எல்லோரும் குறிப்பிட்டார்கள். ஒரு பைசா உயர்த்தினால் ஏராளமான ரூபாய் கிடைக்கும். நஷ்டம், நஷ்டம் என்ற முதலாளிகளின் கூப்பாட்டை கேட்டுக்கொண்டிருக்கக்கூடாது. ஏற்கனவே அப்படித்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். என்றைக்கும் நஷ்டம் இல்லை, லாபகரமாக தொழில் நடக்கிறது என்று ஒத்துக்கொள்வது கிடையாது. எதற்கும் நஷ்டம் என்று பெரிய முதலாளிகள் சொல்லிக் கொண்டிருப்பார்கள். நஷ்டம் என்றால், மின் கட்டணம் என்று நம் தலையில் பழியை சுமத்துவார்கள். அந்தக் கூப்பாட்டைக் கொஞ்

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1967 நவம்பர் 27

சமும் கவனிக்காமல் ஒரு பைசா ஹைடென்ஷன் கன்ஸ்யூமர் ஸுக்கு உயர்த்தவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த போர்டுக்குச் சொந்தமான சொத்துக்களை (அஸெட்ஸ்) மதிப்பீடு செய்வது சம்பந்தமாக 'கமர்ஷியல் வால்யுயேஷன்' செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் தேய்மானம் என்பதன் பெயரால் தவறான நடவடிக்கைகள் கையாளப்படுகின்றன. இயந்திரங்களின் உண்மையான மதிப்பின் மீது தேய்மானம் என்றில்லாமல், கற்பனையாக (நோஷனல்) மதிப்பீட்டின் மேல் பல மதிப்பீடுகள் தேய்மானத்தில் நடக்கின்றன. அது தவறானது. காலாவதியான இயந்திரங்களுக்கு 300 சதமானத்திற்கு மேலும் தேய்மானம் போடப்பட்டது. இன்னும் தேய்மானம் எழுதிக்கொண்டிருக்கிறோம். அதன் மதிப்பைப் போல் மூன்று மடங்கு தேய்மானத்திற்காக ஒதுக்கப்பட்டு முடிவடைந்து விட்டது. இயந்திரமும் காலாவதியானது. 1929-ம் வருஷத்திய சரக்குகள். இன்னும் அவைகளுக்கு தேய்மானம் என்று ஏராளமான தொகை ஒதுக்கப்படுகிறது. இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

அடுத்து சர்க்காருக்கு தரக்கூடிய வட்டி வெளியில் கிடைக்கும் வட்டியை விட அதிகமாக இருக்கவேண்டிய அவசியமில்லை. சர்க்கார் பக்கத்தில் முன் முயற்சி எடுத்து, அதிக வட்டி வாங்கக் கூடாது. ஏற்கனவே இருந்த ஏற்பாட்டில் இருந்தது. அது மாற்றப்படவேண்டும். புதிய அரசு ஏற்பட்டவுடன் செய்யவேண்டிய ஒரு முக்கியமான வேலை.

இந்த போர்டு 'இன்வெஸ்ட்மெண்ட் பாலிஸி', முதலீடு செய்யும் கொள்கை சம்பந்தமாக உன்னிப்பாகவும், நெருக்கமாகவும் பரிசீலனை செய்ய வேண்டும். தான் பெறும் வட்டி விகிதத்தை காட்டிலும் கம்மியான வட்டி விகிதத்தில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற புகார்கள், ஐயப்பாடு ஏராளமாக உண்டு. ஆகவேதான் உன்னிப்பாக பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இது தவிர, எருக்கன்சேரி, நீலகிரி ஆகிய இடங்களில் நில ஆர்ஜிதத்திற்காக செலவழிக்கப்பட்ட தொகைகள் சம்பந்தமாக ஊழல்கள் நிறைந்திருக்கின்றன. அதிகப்படியான தொகைகள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. அது சம்பந்தமாக அறிக்கைகளும் இருக்கின்றன என்று நான் கேள்விப்படுகிறேன். ஆகவே, இதைப் பற்றி நெருக்கமாக பரிசீலனை செய்வது மிகவும் அவசியம் என்று வலியுறுத்துகிறேன்.

இது போக, காபர் வைர்ஸ், செப்புக் கம்பிகள் ஆயிரக்கணக்கான மைல்கள் திருடப்படுகிறது என்ற புகார்கள் மலிந்திருக்கின்றன. கிடைக்காத, கிடைப்பதற்கு அரிய பொருள். இதனால் ஏராளமான நஷ்டம் தான் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.



1967 நவம்பர் 27] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

இது போக, நமக்குத் தேவையான பொருள்களை வெளியிலே வாங்குவதைக் காட்டிலும், நமது பணிமனைகளிலேயே உற்பத்தி செய்வது என்ற பழக்கத்தை கைக்கொண்டால், பெரிய அளவுக்கு சிக்கனத்திற்கு இடமுண்டு என்று கருதப்படுகிறது. வெளியே நாம் ஆர்டர் கொடுத்து வாங்கினாலும் சரி, அல்லது தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் பண்டங்களை வாங்கினாலும் சரி, செலவு அதிகமாகிறது. நாமே நமது பணிமனைகளில் இவைகளை உற்பத்தி செய்ய முடியும் என்கின்ற கருத்தை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். அதிகமான பணத்தை மிச்சம் செய்வதற்கு உதவியாக இருக்கும். பல உதாரணங்கள் கொடுக்கலாம். உதாரணமாக குறிப்பிடப்பட்டது. ஆர். ஸி. போல்ஸ் ரூ 50 செலவழிக்கக் கூடியதற்கு, ரூ. 70, 80 கொடுத்து வெளியிலிருந்து வாங்கிக் கொண்டிருக்கிறோம். அதைப்போலவே, போர்டுக்குத் தேவையான காகிதங்கள், அச்சடிக்க வேண்டியவைகள் இவற்றிற்கு 'ஸ்டேஷனரி அண்டு பிரிண்டிங் ரிக்கொயர்மென்ஸ்' இவைகளுக்காக ஒரு மையான அச்சுக்கூடம் ஏற்பாடு செய்துக்கொண்டு, அதன் மூலம், இந்தத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டால் லட்சக்கணக்கான ரூபாய் மிச்சமாகும் என்ற ஒரு முக்கியமான கருத்தையும் அரசு பரிசீலிக்கவேண்டும்.

காண்டிராக்ட் முறை ஒழிக்கப்படவேண்டும். வேலைகளை காண்டிராக்ட் மூலமாக செய்வதால், ஏராளமான லஞ்ச ஊழல்களுக்கு இடமளிக்கிறது, விரயத்திற்கு இடமளிக்கிறது, நஷ்டத்திற்கு இடமளிக்கிறது. டிபார்ட்மெண்டு மூலமாகவே பல வேலைகளைச் செய்தால் இந்த நஷ்டத்தை தவிர்க்க முடியும். அதனால் போர்டுக்கு அதிகப்பணம் மிச்சம் ஏற்படும்.

இது தவிர, எலக்டிரிஸிடி போர்டு கொடுக்கக்கூடிய எஸ்டிமேட்களை ரொம்பவும் உன்னிப்பாக பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். ரூபாய் 10 கோடி செலவழிக்கக்கூடிய இடத்தில், ரூ. 12 கோடிக்கு எஸ்டிமேட் போட்டு, பின்னாலே ரூ. 11 கோடி செலவாகி, பாக்கி ரூ. 1 கோடி என்ன ஆயிற்று என்று கேட்கக்கூடிய முந்தா சம்பந்தமான ஏற்பாட்டை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். இதுபோன்ற ஓவர் எஸ்டிமேட் தவிர்க்கப்பட்டால், பணம் விரயமாகாது, மோசடியோ என்ற ஐயப்பாடு எழாமல் இருக்கும். ஆகவே, இதில் அதிகமான கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போர்டு, மற்ற நிறுவனங்கள் செய்வது போல, கமர்ஷியல் பாலன்ஸ் ஷீட் போடவேண்டும், லாப நஷ்டக் கணக்கு போடவேண்டும். அதைப் பார்த்தால் தான் எங்கே ஓட்டைகள், சந்து பொந்துகள் இருக்கின்றன என்று கண்டுபிடிக்க முடியும், சந்து பொந்துகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு உதவியாக இருக்கும்.

அதுபோல பாலன்ஸ்ஷீட்டைப்பொறுத்து, ஆடிட்டர் சொல்லியிருக்கக்கூடிய ஒன்றிரண்டு முக்கியமான கருத்துக்களை நான் இங்கே நினைவுபடுத்துவது அவசியம் என்று கருதுகிறேன். என்

கையில் இருப்பது 1963-64-ம் வருஷத்திய பாலன்ஸ்ஷீட் அண்ட் ஆடிட் ரிபோர்ட்டு. அந்த ரிபோர்ட்டில் 8, 9, 10-வது அயிட்டங்களை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மத்திய சர்க்கார் நிலக்கரி கப்பலின் மூலமாக கொடுப்பதால் ஏற்படக்கூடிய அதிகச் செலவை ஈடு கட்டுவதற்கு ஸப்ஸிடி ரூ. 34.27 லட்சம் தருகிறார்கள். அந்தப் பணத்தை வருவாயில் காட்டவில்லை. 'அதர்மிஸலேனியஸ் டெபாசிட்ஸ்' என்ற தலைப்பின் கீழ் காட்டுகிறார்கள். இது வருவாயை குறைத்துக் காட்டுகிறது, உற்பத்திச் செலவைக் கூடக் காட்டுகிறது என்று அகௌண்டெண்ட் ஜெனரல் குறிப்பு தந்திருக்கிறார். அது இன்னும் கவனிக்கப்படாமல் இருக்கிறது.

அடுத்து, முதலீடு செய்யும்பொழுது, முதலீட்டுக் கணக்கில் காட்டவேண்டியதை ரெவின்யூ கணக்கில் காட்டி, வருவாயைக் குறைத்துக் காட்டக் கூடிய ஏற்பாடு இருக்கிறது. அதாவது அயிட்டம் 9

"The expenditure incurred on investigation on new schemes has been charged off as expenditure in the Revenue Account instead of being taken to Capital Account to be eventually transferred to the cost of the project. The expenditure thus charged off to Revenue Account during the year 1963–64 amounted to Rs. 5·51 lakhs".

என்று இருக்கிறது. ரூ. 5½ லட்சம் வருவாய் துறைக்கு வரவேண்டியது கைவிடப்பட்டிருக்கிறது. வருவாயை கம்மி என்று காண்பிக்க ஏற்பாடு என்று தோன்றுகிறது. இருக்கும் வருவாயைக் குறைத்துக் காட்டி, பணம் இல்லை என்று காரணம் காட்டக்கூடிய ஏற்பாடு என்ற ஐயப்பாடு இருப்பதனால், இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து 'இன்டரெஸ்ட் ரியலைஸ்ட் ஆன் இன்வெஸ்ட்மெண்ட்ஸ்', அதாவது தேய்மான நிதி, விஷே ரிசர்வ் சேமிப்பு நிதி இவைகளிலுள்ள பணத்தை முதலீடு செய்து கிடைக்கக்கூடிய வட்டி ரூ. 27.01 லட்சம் 'பன்ட் அகௌண்ட்' அதாவது நிதிக் கணக்கிற்கே கொண்டு போகப்பட்டிருக்கிறது, ரெவின்யூ கணக்குக்கு கொண்டுவரப்படவில்லை. இப்படி வருவாயைக் குறைத்துக் காட்டுகிறார்கள். இப்படிப்பட்ட ஏற்பாடுகள் இருக்கின்றன என்று அகௌண்ட்டெண்ட் ஜெனரல், மதராஸ், ஆடிட் ரிபோர்ட்டில் குறிப்பிட்டிருக்கும்போது, அவற்றை சற்றும் கவனிக்காமல் உதாசீனம் செய்து மேலும் தொடர்ந்து இதே ஏற்பாடு இருப்பது வருத்தப்படவேண்டிய அம்சம். புதிய அரசு ஏற்பட்டபிறகாவது இது உடனடியாக திருத்தப்படவேண்டிய விஷயம் என்பதற்காகத்தான் அதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து. இன்னும் ஒன்றிரண்டு விஷயங்களை அவையின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். கமிட்டி போட்டு பரிசீலனை செய்வதற்கு ஏராளமான விஷயங்கள் உண்டு என்பது ஏற்கனவே அவையில் நடந்த பேச்சுக்களிலிருந்து





தெரியும். நான் அதை விவரிக்க விரும்பவில்லை. ஆனால், அது குறித்து ஏராளமான விவரங்கள் இருக்கின்றன என்பதை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அப்படியிருக்கும்போது இம் மாதிரியான விஷயங்களை ஒரு கமிட்டியின் மூலம் பரிசிலனை செய்வது என்பது மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். கமிட்டி போடுவது இந்த அவைக்குத் தெரிய வேண்டும், வெளியிலே இருப்பவர்களுக்கும் தெரியவேண்டும். அப்படியில்லாமல் ரகசியமாக கமிட்டி அமைத்து, அறிக்கை பெறுவது என்பது உதவி அளிக்காது. அதைக் குறித்து நான் சொல்லவேண்டியதற்குக் காரணம் என்னவென்றால், ஏற்கனவே சர்க்கார் அச்சுக்கூடம் சம்பந்தமாக இந்த அவையிலே எழுப்பப்பட்டு, ஒரு விசாரணை கமிட்டி போடவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டபொழுது, அமைச்சர் அம்மையார் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். நியாயம்தான், ஒரு கமிட்டி போடவேண்டும் என்று ஒப்புக்கொண்டார்கள். திரு. கெய்வார் கமிட்டி என்று ஒரு கமிட்டி போடப்பட்டு, ரிப்போர்ட்டு வரும் தருவாயில் இருக்கிறது என்று அறிகிறேன். அப்படிச் செய்வது சரியாக இருக்காது. கமிட்டி வேண்டும் என்று கேட்டவர்களுக்கு கமிட்டி போட்டவுடன் தெரிவிக்கவேண்டும். இந்த அவைக்கும் தெரிவிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் கமிட்டியின் முன்பு சாட்சியம் கொடுப்பதற்கு . . .

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கடந்த முறை விவாதத்தின்போது சொல்லப்பட்டது, அது குறித்து ஒரு கமிட்டி போடவேண்டும் என்று. அதன் பேரில் உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, ரெவின்யூ போர்டு முதல் மெம்பர் திரு. கெய்வார் அவர்களைப் போட்டிருப்பதாக கனம் உறுப்பினருக்கு பதில் அளித்தேன். அவர்கள் விசாரணை நடத்தி, அதன் பேரில் விவரங்கள் அளிக்க வேண்டும். அவர்கள் அளித்த பிறகுதான் அந்தக் கமிட்டியின் நடவடிக்கைகள் என்ன என்றும், அதன் பேரில் சர்க்கார் என்ன செய்யவிருக்கிறது என்றும் அவையில் சமர்ப்பிக்க இருக்கிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** அந்த விவரம் எனக்குத் தெரியவில்லை, அப்படிக் கமிட்டி போட்டிருக்கும் தகவல் பொது மக்களுக்கு, ஊழியர்களுக்கு தெரியவில்லை என்றுதான் குறிப்பிடுகிறேன். அப்படித் தெரிந்தால்தான், சம்பந்தப்பட்டவர்கள் தகவல்களைக் கொடுக்கவும், அந்தக் கமிட்டி பரிசீலித்து முறையான அறிக்கை கொடுக்கவும் உதவியாக இருக்கும் என்று சொல்லுகிறேன். இன்றைக்கு மின்சாரம் சம்பந்தமாக நான் வற்புறுத்தும் கமிட்டி அமைந்தால், அந்தக் கமிட்டி அமைப்பது நமக்குத் தெரியவேண்டும். பொதுமக்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட்டேன்.

உழைப்பாளர்களைப் பழி வாங்குவதுபற்றி அங்கத்தினர்கள் பலர் பேசி விட்டார்கள். நான் குறிப்பிடத் தேவையில்லை.

இந்த போர்டின் தலைவர் விசேஷத் திறமை வாய்ந்தவர் என்பதில் சந்தேகம் இல்லை. அதற்காக, பிரசாரத்திற்காகத் தானோ என்னவோ, அவருடைய பதவிக்காலத்தை நீடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அது அனாவசியமானது. அங்கே 60,000 ஊழியர்கள் இருக்கிறார்கள். எவ்வளவோ குறைபாடுகள், ஊழல்கள், விசாரணைக்குறியவை. பழிவாங்கப்படுவதும் எடுத்துக் கூறப்பட்டது. இப்படிப் பல காரியங்கள் இருக்கும் போது, பதவி காலத்தை நீட்ட வேண்டிய அவசியம் என்ன? இப்படியே நீட்டி, நீட்டிக்கொண்டு போவது விரும்பத்தக்கது அல்ல. இந்த 'எக்ஸ்டென்ஷன்' என்பதே ஒரு விஷஸ் ப்ராக்டீசாகப் போய்விட்டது. அது தேவையில்லை. இதனால் அரசுக்குக் கெட்ட பெயர்தான். இந்தத் துறை என்ன அப்படி அறிவிற்கு அப்பாற்பட்ட துறையா? ஏராளமான வல்லுநர்கள் இருக்கிறார்கள். திறமைக் குறைவு கிடையாது, ஆள் குறைவு கிடையாது. ஒருவர் போனால் மற்றவர் பின்னால் வந்து பார்த்துக் கொள்கிறார். எதற்காகப் பதவி நீடிப்புக் கொடுக்க வேண்டும்? இதனால் அரசுக்குத் தவறான பெயர்தான் வருகிறது. ஏற்கனவே இருந்தவர்கள் செய்தார்கள் என்பதற்காகச் செய்ய வேண்டுமா? ஒரு குறிப்பிட்ட துறையில், ஏதோ அசாதாரணமான வேலைக்கு ஒருவர் வேண்டும் அவரால் தான் அது முடியும் என்றால், எக்ஸ்டென்ஷனை ஒப்புக் கொள்ளலாம். ஆனால், ஒரு கவர்ன்மெண்ட் ஃபோர்மென் முதல், எலெக்ட்ரிசிடி போர்டு சேர்மென் வரை கொடுப்பதென்றால் அது சரியாகாது. ரொம்ப காலமாக நடந்துக் கொண்டே வருகிறது என்பதற்காகச் செய்யக் கூடாது. தயவுசெய்து இந்த எக்ஸ்டென்ஷன் முறையை அருள்கூர்ந்து நிறுத்தி விடுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த மாதிரியான நீடிப்பு அவசியமே இல்லை. நல்ல முன்னேற்றத்திற்கு வாய்ப்பு இருக்கும் போது, நல்ல பல வல்லுநர்கள் இருக்கும் போது, இப்படி எக்ஸ்டென்ஷனைக் கொடுத்து, வேண்டாத பெயரையும் சர்க்கார் வாங்கிக் கொள்ள வேண்டாம். இந்த எக்ஸ்டென்ஷன் ஏற்பாட்டை இனிமேலாவது நடக்கவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, சுதந்தரா கட்சிக்கு 20 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. திரு. மெய்யப்பன் பத்து நிமிடங்களும் திரு. ஆதிமூலம் பத்து நிமிடங்களும் பேசுவார்கள்.

திரு. சா. மெய்யப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் குறிப்பிட்ட ஆண்டு நிலை அறிக்கைமீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நாட்டில் மின்சார வெட்டு இல்லாமல் இனிமேல் பார்த்துக் கொள்ளப் போவதாகச் சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது. மின்சாரத்தை நல்ல காரியங்களுக்கு உபயோகிக்கும் போது, விவசாயக் காரியங்களுக்கு உபயோகிக்கும் போதும், விவசாயிகள்





3" டெலிவரிப்பைப் வைத்து தங்களுடைய நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் போது, அவர்களுடைய வீட்டுக்கு கரண்ட் எடுத்துக் கொண்டால், உயர்ந்த கட்டணம் போடுகிறார்கள். விவசாயத்திற்கு கொடுக்கும் போது போடும் கட்டணமே அதற்கும் விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

டெம்பரரி கனெக்ஷன் கொடுக்கும்போது, டெம்பரரி கனெக்ஷன் முடிந்தபிறகு டெபாசிட்டை திருப்பிக் கொடுக்க லோகல் அசிஸ்டெண்ட் என்சினியருக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இங்கே சென்னையிலிருக்கும் சூப்ரெண்டெண்டிங் என்சினியருக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. அவர்களிடமிருந்து செக்குகள் வழங்கப் படுகின்றன. அதனால் மிகுந்த காலதாமதம் ஏற்படுகின்றது. அங்கேயே இருக்கும் லோகல் அசிஸ்டெண்ட் என்சினியருக்கு அதிகாரத்தைக் கொடுத்தால், டெம்பாரி கனெக்ஷன் டெபாசிட்டை சீக்கிரமாகவே வாங்கிக் கொள்ளலாம். காலதாமதம் இல்லாமல் இருக்கும்.

அடுத்து, மின் சப்ளை வயர்ஸ் அறுபட்டு இருந்தால், அல்லது பழுது பட்டிருந்தால், உடனே அதை ஒட்டவைத்து விடுகிறார்கள். அதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஏனென்றால், அதிகப் படியான வயர் செலவாகும் என்று, வயர் கேபிளில் இரண்டு துண்டுகளை எடுத்து, ஒட்டவைத்து கணக்குக் குறையாமல் செய்து விடுகிறார்கள். மின்சார வாரியத்திற்கும் அதைக் கண்டுபிடிக்க முடியாது. அது சம்பந்தமாக மின்சார வாரியம் ஒரு விதியைப் போடவேண்டும். அப்படி ஒட்டவைத்தால், சமீபத்தில் எங்கள் பகுதியில் 15 மோட்டார்கள் எரிந்துவிட்டன.

அடுத்து, எஜுகேஷன் டிபார்ட்மெண்ட், ஆஸ்பத்திரி போன்ற இடங்களுக்கு 110 வாட்ஸ் என்று வைத்தால், குறைந்த ஆபத்து உள்ளதாக இருக்கும். சில ஆண்டுகளுக்கு முன், டி.சி. கரண்டை ஏ.சி. கரண்டாக மாற்றியபோது சற்று செலவு ஆயிற்று என்றாலும், தரம் உயர்ந்திருக்கிறது. அதே போல, 110 வாட்ஸ் என்று மாற்றுவதில் செலவு ஆனாலும், அப்படிச் செய்ய வேண்டும். அதற்குத் தக்கபடி ட்ரான்ஸ்பார்மர் வைத்துக் குறைத்துக் கொடுத்தால், ஆபத்துக் குறைவாக இருக்கும்.

பெரியகாரை, காரைக்குடி பகுதி, சாலயங்கோட்டை முதலிய இடங்களில் உள்ள விவசாயிகள், தங்களுடைய வீடுகளுக்கும், நிலங்களுக்கும் மின்சாரம் வேண்டும் என்று கேட்டு மனுக்கள் செய்து, மின்சாரம் தருவதாக முன்பு இருந்த அரசாங்கம் சொல்லியிருந்தது. அதை நம்பி அந்த விவசாயிகள் மின்சார சாதனங்களை வாங்கி வீட்டில் முதலீடு செய்து சும்மா வைத்திருக்கிறார்கள். பின்னால் பார்க்கும் போது, டெலிபோன் வயர்கள் குறுக்கே வருவதால், அது சம்பந்தமாக மத்திய சர்க்காரிலிருந்து அதற்கு உத்திரவு வரவேண்டும் என்கிற நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. முக்கியமாக பெரியகாரையில் தடைப்பட்டிருக்கிறது.

ஆகவே, மத்திய சர்க்காருக்கு உடனடியாக நம்முடைய சர்க்கார் எடுத்துச் சொல்லி, இந்தக் குறைபாட்டை நீக்க வேண்டும் என்று அந்த மக்களுக்கு மின்சாரம் அளிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

முக்கியமாக, தெருவிளக்குகளுக்கு, பல்புகள் தரக்குறைவாக இருக்கின்றன. அதனால் அவை சீக்கிரம் ஃப்யூஸ் ஆகிப் போகின்றன. அதனால் நஷ்டம் ஏற்படுகிறது. நிதி நிலை அறிக்கையில் 20-ம் பாராவில் அதுபற்றிச் சொல்லப்பட்டிருந்தாலும், விளக்கம் தேவை என்று தோன்றுகிறது. பல்புகள் எங்கு வாங்கப்படுகின்றன? வேறு மாநிலங்களிலிருந்து வரும் போது, தரம் பார்த்து வாங்குவது யார் கையில் இருக்கிறது? தரம் பார்த்து வாங்குவதில் குறை இருந்தால், அப்படி வாங்குவதை மின்சார வாரியத்திடமே விட்டு விடாமல், அதற்கென்று பர்சேஸ் கமிட்டி என்று ஒரு கமிட்டியைப் போட்டு செயல் பட்டால் நலமாக இருக்கும். அதிலேயும் கூட நம்முடைய ட்ரான்ஸ்பார்மர் உற்பத்தி திறமையாக இருக்கிறது என்கிற தகவல் இருக்கிறது. நம் மாநிலத்தில் நாம் வாங்காமல் வெளி மாநிலங் களிலிருந்து தரக் குறைவானவற்றை வாங்குவதாகக்கூடத் தகவல் கிடைத்திருக்கிறது. கல்கத்தாவிலிருந்து வாங்குவதில் குறை இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலிருந்து, உ.பி. போன்ற மாநிலங்கள் அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். அதிலிருந்து, நம்முடைய உற்பத்தி மிக நன்றாக இருக்கிறது என்று அர்த்தம். நாம் நம்முடைய உற்பத்திப்பொருளை வாங்காமல், வெளி மாநிலத்திலிருந்து வாங்குவது சரியாகாது. நம்முடையதை நாமே வாங்கினால், அதனால், நம் மக்களுக்கு நல்ல வேலை வாய்ப்புக் கிடைத்து நல்ல ஊதியம் கிடைக்கவும் வசதியாக இருக்கும். ஆகவே, அந்த முறையில் நம்முடைய பொருள்களை நாமே வாங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த வாரியத்தின் நிதி நிலை பற்றிய விவாதத்தில் பேச அனுமதி அளித்தமைக்கு நன்றி செலுத்தி முடிக்கிறேன்.

திரு. டி. எஸ் ஆதிமூலம்: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்த அறிக்கை நல்ல விதமாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வீடுகளுக்கு மின்சார விகிதத்தை இரண்டு பைசா கூட்டியிருப்பது
மு. ப. 11-30 அறிக்கை மூலம் இப்பொழுது தெரிகிறது. இந்தக் கட்டண விகிதம் இரண்டு மாதங்களுக்கு முன்பே அமலுக்கு வந்திருக்கிறது என்பது கவனிக்கத் தக்கது. எலெக்ட்ரிசிடி போர்டு என்பது ஒரு 'ஆடானமஸ் பாடி' என்ற முறையில் செயல்பட்டாலும், வீடுகளுக்கு மின்சாரக் கட்டணத்தைக் கூட்டியிருப்பதென்பது சட்டசபைக்குத் தெரியாமலேயே நடந்திருப்பதைப் பார்க்கும்போது, அது அவ்வளவு நன்றாக இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட விஷயங்களைக் கனம் மந்திரி சபையார் சட்டசபைக்குத் தெரிவிக்கப்படவேண்டும் என்பதைக் குறித்து யோசனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.





நம்முடைய தேசத்தில் விவசாயம்தான் மிகவும் முக்கியமானது. தேசீய வருமானத்தில் 45 சத விகிதம் விவசாயத்தின் மூலம் நமக்குக் கிடைக்கிறது. இந்த நாடு பெரும்பாலும் விவசாயத்தை நம்பியிருக்கக்கூடியது. அப்படியிருக்க, விவசாய பம்ப் செட்களுக்குள்ள மின்சாரக் கட்டண விகிதம் கூடுதலாக இருக்கிறது. தொழில் சம்பந்தமாக கட்டணம் மிகவும் குறைவாக இருக்கிறது. தொழில்களுக்கு மின்சாரக் கட்டணத்தைக் கூட்டவேண்டும் என்று நான் சொல்ல வரவில்லை. ஏனென்றால், அதைக் கூட்டினால், அதன் மூலம் விலைவாசி கூடும். (திரு. செ. பாலசுப்பிரமணியம் குறுக்கீடு) மின்சாரக் கட்டணத்தைக் கூட்டலாம் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதாக நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால், மின்சாரக் கட்டணத்தைக் கூட்டுவது விலைவாசி உயர்வில்தான் வந்து முடியும். சர்க்கரைப் பானைக்குள்ளே கையை விட்டவர் வாயிலேதான் துடைத்துக் கொள்வார்கள் என்கிற ஒரு பழமொழி உண்டு. சம்பளத்தைக் கூட்டினாலோ, அல்லது மின்சாரக் கட்டணத்தைக் கூட்டினாலோ, அதையெல்லாம் சாமான்களின் விலையில் கொண்டுவந்து வைப்பது முதலாளிகளின் வழக்கமாக இருக்கிறது. இந்த நிலையில், ஏற்கனவே தூக்கலாக இருக்கும் விலைவாசி இன்னும் தூக்கலாகும். ஆகவே, மின்சாரக் கட்டண விகிதத்தைக் கூட்டாமல், பழையபடியே விட்டுவிட்டு, வேறு முறையில், நம் எலெக்ட்ரிசிடி போர்டில் கவனத்தைச் செலுத்தி, விவசாயத்திற்கான மின்சாரக் கட்டண விகிதத்தை இன்னும் கொஞ்சம் குறைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

எனக்கு 'டெக்னிகாலிடீஸ்' எல்லாம் கொஞ்சம் புரியாது. ஏதோ 'லைன் லாஸ்' என்று சொல்கிறார்கள். அந்த வகையில் 12 கோடி ரூபாய் நஷ்டம் ஆகிறது என்று சொல்லுகிறார்கள். அதையெல்லாம் நமது எலெக்ட்ரிசிடி போர்டு சேர்மன் அவர்கள் கொஞ்சம் திறமையாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டும். அவர்கள் வெளிநாடுகளுக்கெல்லாம் போய் வந்தவர்கள். அங்கே உள்ள முறைகளையெல்லாம் நன்கு தெரிந்திருப்பவர்கள். அவர்கள் இன்னும் கொஞ்சம் விசேஷ கவனம் செலுத்தி, அந்த நஷ்டத்தைக் குறைப்பதற்கு வேண்டிய முறையில் நடவடிக்கைகள் எடுத்தால், விவசாயிகளுக்கு ஒன்றிரண்டு பைசா சகாயமாக மின்சாரம் வழங்கமுடியும் என்று நான் நினைக்கிறேன். அதைக் கவனிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பேசின் பிரிட்ஜ் தெர்மல் ஸ்டேஷனைப் பொறுத்து ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். அதைப்பற்றிக் கேள்விப்பட்டுத் தெரிந்துகொண்டேன். அங்கே உற்பத்தி செய்யக்கூடிய 'கபாசிட்டி' 60 மெகா வாட் என்று இருந்தபோதிலும், அதனுடைய உற்பத்தித் திறன் இப்பொழுது மூன்றில் ஒரு பங்கு அல்லது 20 மெகவாட்டாகத்தான் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, நாம் இப்படிப்பட்ட உற்பத்தி விஷயத்தில், நம்மிடம் இருக்கும் அளவைப் பூராவாகப் பூர்த்தி முயற்சி செய்தால், நம்முடைய

[திரு. டி. எஸ். ஆதிமூலம்] [1967 நவம்பர் 27

போர்டினுடைய வருவாய் கூடுதலாகும். ஆகவே, அப்படிப்பட்ட விஷயங்களில் திறமையாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கனம் மந்திரி அவர்கள் மூலம் நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விவசாய பம்ப் செட்களுக்கு மின்சாரம் கேட்டால், வருஷக் கணக்கில் சில இடங்களில் காத்திருக்கும் ஆவலாதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அதை சேர்மன் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரும்போது, கூடுமான வரையில், கொஞ்சம் துரிதப்படுத்தப் படுத்தப்பார்கிறார்கள். அவர்கள் எவ்வளவு பார்த்த போதிலும், சாமான்கள் (மெடீரியல்ஸ்) கிடைப்பதில் பற்றாக்குறை நிறைய இருக்கிறது என்பதாகத் தெரிவதால்தான், இம்மாதிரி ஒரு 'இனார்டினேட் டிலே', வருஷக்கணக்காகத் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட முறையில் பார்க்கும்போது, அது இந்த நாட்டிலுள்ள விவசாயிகளுக்கும், விவசாய உற்பத்தி முறைக்கும் மிகவும் பாதகமாக இருக்கிறது. அது விஷயத்தில், பம்ப் செட்களுக்கு மின்சாரம் வழங்கும் விஷயத்தில் 'டாப் ப்ரையாரிடி' கொடுத்து, அதற்கு வேண்டிய சமான்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நம் நாட்டில் கிடைக்கக்கூடிய அளவைத் தவிர, அன்னிய நாடுகளிலிருந்தும் அவைகளை ஒழுங்காக வாங்குவதற்கு வேண்டிய 'ஃபாரின் எக்ஸ்சேஞ்ச்' என்று சொல்லக்கூடிய அன்னியச் செலாவணியையும் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு இந்தச் சர்க்கார் முக்கியமான ஒரு ஜோலியாக, கடமையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

பல்ப் விஷயத்தை எடுத்துக்கொண்டால், கிரமங்களிலும், பஞ்சாயத்து ஏரியாவிலும், முனிசிபாலிடி ஏரியாவிலும் கூட, ஸ்க்ரூ டைப் பல்ப் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிற புகாரைக் கேட்டுக் கேட்டு காது கூட புளித்துப் போய்விட்டிருக்கும், இலாக்கா அதிகாரிகளுக்கும், எனையோருக்கும். இதற்கு ஏதாவது சீக்கிரமாக ஒரு பரிகாரத்தைத் தேட வேண்டும். அப்படி இல்லாத முறையில், சட்டசபை மெம்பர்கள் கிராமங்களில் போகும்போது, ஆவலாதிகளைச் சகிக்க முடியவில்லை.

நான் ஆரம்பத்திலே சொன்னபடி, மின்சாரக் கட்டணத்தை 30 பைசாவிலிருந்து 32 பைசாவுக்குக் கூட்டியிருப்பதை எப்படியாவது குறைப்பதற்கான வழிவகையைக் காண வேண்டும். கட்டண விகிதத்தைக் கூட்டிக்கொண்டே போனால், முக்கியமாக நடுத்தர மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, கூடுதலான விகிதம் மின்சாரம் உபயோகிக்கக்கூடியவர்களுக்குக் கட்டணத்தைக் கொஞ்சம் கூடுதல் செய்து, ஒரு குறைந்த விகிதம் உபயோகிப்பவர்களுக்குப் பழைய கட்டண விகிதத்தையே அமல் செய்ய முடியுமா என்பதைப் பரிசிலனை செய்தால் நல்லது. முக்கியமாக, இந்த நாட்டிலுள்ள பொது ஜனங்களில், 80 சத விகிதத்தினர் நடுத்தர மக்களும் ஏழைகளும்தான் என்பதைக் கவனத்தில் கொண்டு, மின்சாரம் அவர்களுக்குப் பழைய விகிதத்தில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.



1967 நவம்பர் 27] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

நான் என்னுடைய முடிவுரையாகச் சொல்வது என்னவென்றால், விவசாயத்திற்கு வேண்டிய மின்சாரத்திற்கு ரேட்டை இன்னும் குறைத்துக்கொடுக்க வேண்டும். பம்ப் செட்டுகளுக்குத் துரிதமான முறையில் கனெக்ஷன் கொடுப்பதற்கு வேண்டிய காரியத்தில் இந்த அரசு கவனம் செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காங்கிரஸ் கட்சிக்கு 35 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. திரு. விநாயகம் அவர்களுக்கு 15 நிமிடங்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு 20 நிமிடங்களும் ஒதுக்குகிறேன்.

* THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I come from a rural area. At any rate I have the honour to represent rural folk on the floor of this House from this year. So I know very well their difficulties as well as their pleasure in their area having been brought under the Madras State Electricity Board. My area having been neglected for many years, having been relegated to the background, the rural folk there have not tasted what is meant by life in a place where there are electricity facilities. Urban gentlemen or persons born in the metropolis and having seen these flourescent lamps and blue tube lights may not be able to appreciate the human service rendered or the tremendous change brought about by this department among the rural folk. The people of my area, which was for many years in the Andhra Pradesh have not known what it means to live in an electrified area. All that we know of is kerosene lamps and street lamps burning, flickering and getting extinguished and plunging the area in darkness even during the middle of the night. Such was the condition in which my area was suffering. After its amalgamation with our State, tremendous effort was put in by the Government and electricity was extended to my area on a war footing and there are not many villages now which are not electrified. It is a perfect truth which I am now ventilating on the floor of this House. Agriculturists are now utilising electric energy for running their pumpsets. I quite appreciate the complaint ventilated by some members that, when electricity is not extended, the people are put to great hardship. But these are all the usual delays in the implementation of the programmes. For these defects the Chairman, the Members of the Board, the Chief Engineer or even the Superintending Engineers need not be taken to task on the floor of this House. There are men and men in the lower cadre. Linemen or section officers or those who are immediately responsible for giving electric connection to agricultural pumpsets take some time. They are all ill-paid and naturally there may be here and there some delay as far as their work is concerned. Such small defects should not be made much fuss about on the floor of this House. It is making mountain of a molehill and attacking the whole department. I have known what a tremendous change it has brought about in my area. A

[Thiru K. Vinayakam] [1967 நவம்பர் 27

lot of small industries have sprung up, many villages have now street lights and agriculturists are getting pumpsets energised by electricity. All this mean a lot of improvement and increase in food production. I have got a very very kind word to say for the entire department. Having seen many hydel and thermal projects all over the State, I know how this department has been doing its work very promptly and in time and how it has transformed the entire phase of our State. I do not know whether many members are aware that people of other State are envious about our State. They say that in Madras State electricity has been spread to every home, hut or dwelling. If a number of industries have sprung up in our State, it is due to electricity. If an electric light does not burn in his village or a bulb gets fused, a layman immediately comes to the conclusion that the entire department has not done its job and throws the blame on the department, forgetting for a moment the tremendous change and the vast industrialisation that have been brought about in our State. I have no complaint as far as the Department is concerned. But at the same time I would like to voice forth some of the ills, wrongs and difficulties that are found in the actual working of the system. Here and there there are unusual delays, here and there there are difficulties which could be got over if the departmental officials take particular interest in these individual cases. Yesterday an erroneous impression was created in this House about the Chairman. If his work had been criticised, I would have had no objection. The view expressed may be the view of an individual member. But to say that his wife is owning shares in a number of companies is casting aspersion on his character. I have made enquiries and verified. I am perfectly satisfied that his property has been partitioned among his wife and other members of his family.

DR. H. V. HANDE : On a point of order, Sir.

THIRU K. VINAYAKAM : I am perfectly convinced that these are unholy charges levelled.

MR. SPEAKER : Let him raise the point of order.

DR. H. V. HANDE : The Act clearly says that a member shall not have interest in his own name or otherwise. What is the point in his trying to refute my point?

MR. SPEAKER : He has made that statement in my absence. Otherwise I would have drawn his attention to Rule 68 (3) (iii) which says that there shall be no reference to a person except in his official capacity. If he has already made any reference in other than his official capacity, I shall see whether it should be deleted from the proceedings.

THE HON. THIRU C. N. ANNADURAI : I may add that I interrupted in the debate and requested Dr. Hande not to pursue the matter in public but to tell me in private if he had got any



1967 நவம்பர் 27] [Thiru C. N. Annadurai]

allegation. Since I have asked Dr. Hande, I would request Mr. Vinayakam not to defend a case which has not been presented properly.

THIRU K. VINAYAKAM : I am highly obliged to the Chief Minister for the way in which he puts the entire thing for our purview. But as a lawyer I thought it was my duty to inform this House that an individual cannot be questioned about the actions of some of the members of his family after the property is partitioned.

MR. SPEAKER : The rule is very clear that no member can refer to any person except in his official capacity.

THIRU K. VINAYAKAM : I will leave the matter at that stage. Regarding purchases, it is wrong to say that the Chairman purchases the materials; it is the Board that purchases. The Board consists of the Chairman and the other personnel manning that Board. The speech gives the impression that one individual is responsible for the purchases and this impression should be erased from the mind of the Member who levelled unholy charges as well as the minds of the other Members. It is the Board that makes the purchase. The Board takes a decision after elaborate enquiry, after elaborate thinking and after going through all the tenders. After all these processes, the Board comes to a conclusion. So, one individual cannot be held responsible if there is anything wrong.

Regarding Alvitas Electric Company, I believe it is an industrial concern which is working in our Industrial Estate in Ambattur. It manufactures conductors for the use of the Electricity Department. What is wrong in purchasing from our own industrial concerns? An allegation was thrown out that this Alvitas Electric Company was a black-listed company.

(Interruption by Dr. H. V. Hande.)

I am not going to leave anything in doubt.

Sir, it was alleged that it was a black-listed company. Was it black-listed by the Government of Madras? Was it black-listed by the Government of India? I believe, it was black-listed by the Government of Mysore. For how long? For five months only and then that Government has removed it from the black-list. Now this company is carrying on business in a proper manner. If our Board has purchased some commodities from this company and has incurred any loss over it, then it is a matter for dispute or criticism. After all, out of a total transaction of about Rs. 5 lakhs in regard to the purchase of conductors, an order has been placed with this company for goods worth only Rs. 1,75,000 and the remaining order has been placed with a different company. So, why should anybody get engaged that this has not been properly looked into?

[Thiru K. Vinayakam] [1967 நவம்பர் 27

Regarding labour, I am no good at labour problems. But I admit that labourers should get a fair deal. Where does this question of the Chairman of the Electricity Board dealing with labour comes in, I am at a loss to know. As there is a Labour Officer in a company, there is also a Labour Officer in the Board and labour problems are dealt with by him. This particular individual has been charged for using filthy or improper lerguage. How could this happen?

DR. H. V. HANDE: On a point of order. The hon. Member has alleged that I used filthy language. I did not use any unparliamentary word. So far as the black-listed company is concerned, it was only during the period when the company was black-listed, that the orde was placed.

THIRU K. VINAYAKAM: That is not a point of order. He has made another speech.

My object in making this kind of speech is only to point out that an erroneous or wrong or unfair impression has been created in the minds of hon. Members here against an individual who is not here to defend himself. I am interested in establishing healthy conventions. One such convention is that we should not cast aspersion against an ex-Minister, Thiru R. Venkataraman. The whole world, the whole country and the whole State knows—everybody knows that he has been responsible for changing the Madras State from the agricultural phase to the industrial phase. He had done so much service to this State and he was once a Minister of this State. Simply because he is not here to participate in the parliamentary activities, are we to throw or sling mud at him? I think it is a parliamentary language.

MR. SPEAKER: I have gone through the rules thoroughly, but unfortunately there is no rule that a Member should not refer to somebody who is not here. The rules are clear, that if a Member refers to a person, he can refer to that person's activities in his official capacity and not in his individual capacity, even if that person is not here.

THIRU K. VINAYAKAM: My hon. Friend, Dr. Hande, has referred to the activities of Mr. Venkataraman in his official capacity as the ex-Minister for Industries. He stated that he turned a deaf ear and he did not care to what he said and he had showed undue importance to the Chairman. All these things are unwarranted and are not in good taste.

Mr. Speaker, Sir, I have a very kind word for the Electricity Board and for the yeoman services which they have rendered. I want to encourage or goad them to do much better work. With these words, I commend this Budget for the acceptance of this House.



1967 நவம்பர் 27]

திரு. பி. ஜி. கருத்திருமன்: கனம் சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும்படியான மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையை, நானும், என்னுடைய சக உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் சொன்ன மாதிரி, ஆதரிக்கும்படியான வகையில் சில ஆலோசனைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நமது தமிழ் நாட்டில் ஏற்படக்கூடிய எந்த ஒரு அபிவிருத்தியும், மின்சார உற்பத்தியைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டியது மிக மிக அவசியம். எதிர்க் கட்சியில் இருக்கும்படியான காரணத்தால், குற்றஞ்சாட்டுவதை விட எது உண்மையோ, அதை உண்மை என்று எடுத்துச்சொல்லும் படியான நிலையில், இத்தனை பாராட்டுதலுக்கும் உரியவர்கள் யார் என்பதையும் நாம் சிந்திக்கவேண்டும். சென்ற பத்து, பதினைந்து ஆண்டுகளில், முன்னால் இருந்த ஆட்சி எவ்வளவு தூரம் செய்திருக்கிறது, மின்சார இலாக்காவும், மின்சார போர்டும் எவ்வளவு தூரம் தமிழகத்திற்கே ஒளி வழங்கும்படியான செயலைச் செய்திருக்கிறது என்பதைக் குறித்து, இப்பொழுது இருக்கும்படியான மந்திரிசபையும் நிச்சயமாக உணர்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

ஆளுங்கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்களில் சிலரும் சில புகார்கள் சொன்னார்கள். எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களும் கூட, ஆதரவைத் தெரிவித்ததோடு, சில ஆலோசனைகளையும் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப் பாராட்டுதல் சொல்லும்படியான முறையில் வேலைகள் எதையும் சரியாகச் செய்ய வேண்டியிருக்கிறது என்பதை நாம் அருள்கூர்ந்து கவனிக்கவேண்டியது மிக மிக முக்கியமாகும்.

பத்து வருஷங்களுக்கு முன்னால், 14,000 பம்ப் செட்களுக்குத் தான் மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது 3 லட்சம் பம்ப் செட்டுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. முன்னால் ஆயிரம் கிராமங்களுக்குத் தான் மின் விளக்கு இணைப்பு கொடுக்கப்பட்டு இருந்தது. இப்பொழுது 25,000 கிராமங்களுக்கு மின் விளக்கு இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் அநேகமாக உலகத்தின் பல பகுதிகளுக்குச் சென்று பார்த்து வந்திருக்கிறேன். ஐரோப்பா கண்டத்திற்கும், அமெரிக்காக் கண்டத்திற்கும், ஜப்பானுக்கும் சென்று பார்த்திருக்கிறேன். ஆனால், கிராம விஸ்தரிப்பைப் பொறுத்த மட்டில், நமது தமிழகத்தில் நடந்த விஸ்தரிப்பைப் போல, உலகத்திலே எந்த நாட்டிலும் இல்லை என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள முடியும். இதற்கெல்லாம் காரணம் யார்? இந்த மின்சார வாரியத்தின் தலைமை இன்ஜினியரும், வாரியத்தில் உள்ளவர்களில் பலரும் மிகவும் நன்றாக பணி புரிந்திருக்கிறார்கள். அப்படியிருக்க ஏதோ பேசவேண்டும் என்பதற்காகப் பேசினால், நம்முடைய கடமையை மறந்துதான் பேசுகிறோம் என்ற மிகவும் வருத்தப்பட

வேண்டிய நிலைதான் இருக்கும். டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு நல்ல முறையில் முதல் அமைச்சர் அவர்கள், "ஏதாவது இருந்தால் என்னிடம் எடுத்துக் காட்டுங்கள், பார்க்கிறேன்" என்றார்கள். (டாக்டர் ஹாண்டே குறுக்கிடு) கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லவேண்டியதை யெல்லாம் சொல்லிவிட்டார். அதுவும் பத்திரிகைகளில் வந்து விட்டன. சட்டசபையில் எதை எதைப் பேச கூடாது என்ற வரையறைகள் இருக்கின்றன. கண்ணியமாகப் பேசவேண்டும். மேல்சபையிலும் டாக்டர் ஹாண்டே அவர்கள் உறுப்பினராக இருந்தார்கள். அப்பொழுது தொழில் அமைச்சராக திரு. வெங் கட்டராமன் அவர்கள் இருந்தார்கள். அப்பொழுது பெட்டியிலே அடங்கின பாம்பு மாதிரி இருந்தார் டாக்டர் ஹாண்டே அவர்கள். திரு. வெங்கட்டராமன் அவர்கள் கேட்ட கேள்விக்கு, ஒரு பதில் சொல்ல முடியவில்லை. பத்திரிகைகளில் வராத செய்திகளை யெல்லாம் வைத்துக் பேசும்படியான நிலையில் . . . .

DR. H. V. HANDE : On a point of order, Sir, I take serious exception to that statement.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I am not yielding.

DR. H. V. HANDE : Sir, I rise on a point of order.

THIRU K. VINAYAKAM : All his points of order are points of disorder.

DR. H. V. HANDE : When there is disorder in his speech, I must raise the point of order.

The hon. the Leader of the Opposition has stated—
"பெட்டியிலே அடங்கின பாம்பு மாதிரி"

If only he has got patience to read the proceedings of the other House, he will know that I have attached him enough.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ப்ரொசீடிங்ஸையெல்லாம் பார்த் திருக்கிறேன். அவர் அப்பொழுது எப்படி அடங்கியிருந்தார் என்ற காட்சியை அடியேன் பார்த்திருக்கிறேன். எதையெடுத் தாலும், வேகமாகப் பேசி, உறுதியாகப் பேசி, யாரையோ ஏதோ நான் பேசிவிட்டேன் என்று அவர்கள் சொல்லுவார்களானால், நமது சட்டசபையிலே இருக்கும்படியான அங்கத்தினர்களுக்கும், சபைக்கும் கண்ணியமான நிலையா என்பதைப் பார்க்கவேண்டும்.
நண் பகல் 12-00 ஒன்று நான் சொல்கிறேன். நாம் நம்மிடத்தில் வேலை செய்யும்படி யான, உத்தியோகத்தில் இருக்கும்படியான, நாணயமிக்க ஊழியர் களுக்கு போதுமான கௌரவம் கொடுக்கவில்லை என்றால், போது மான உற்சாகத்தை அளிக்கவில்லை என்றால், எப்படி அவர்கள் ஊக்கத்தோடு மேலும் மேலும் பணியாற்றுவார்கள் என்பதை எண் ணிப்பார்க்கவேண்டும். தவறு செய்கிறவர்களைக் கண்டிக்க வேண்டி யதுதான். அப்படியின்றி நம்முடைய மக்களுக்கு நன்மை ஏற்படக்



கூடிய காரியத்தை, நம்முடைய தொழில்கள் வளம் பெறும்படியான காரியத்தை ஊக்கமாகவும், விரைவாகவும் செய்து வருகின்ற மின்சார போர்டு தலைவரை—தனிப்பட்ட முறையில் அவரை எனக்குத் தெரியாது, அவர் முகத்தைப் பார்த்தது கூட இல்லை— அவர் ஆற்றி வருகிற பணிகளுக்காக நாம் பாராட்டியாகவேண்டும். அதைவிட்டு முறையற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துவது. கனம் உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் முதல் அமைச்சரிடம் எல்லா விண்ணப்பங்களையும் கொடுப்பதாகச் சொன்னார்கள். தைரியம் இருக்குமானால், இந்தச் சபையிலேயே வைக்கட்டும், தவறு நிரூபிக் கப்பட்டால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித் துக்கொள்கிறேன். நான் தயாராய் இருக்கிறேன். காரணம் நம் நாட்டில் நிர்வாகம் செம்மையான முறையில் நடைபெறவேண்டும். இப்படிச் சொல்வதனால் ஒரு உத்தியோகஸ்தரை ஆதரித்து நான் சொல்வதாக அல்ல என்று வற்புறுத்த விரும்புகிறேன். சபா நாயகர் அவர்கள் பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டியிலேயே சொன் னார்கள் எருக்கஞ்சேரி விஷயம். தவறு நடந்திருக்கிறது. தவறு செய்தவர்களைத் தண்டிக்கத்தான்வேண்டும். தலைவர் என்ன செய்வார் ? ஏமாற்றியவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள் வதை நான் ஆதரிக்கிறேன். அப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டால் நான் மிக மிக சந்தோஷப்படுவேன். அதைவிட்டு ஆதாரம் இல்லாத புகார்களை, அநியாயமான குற்றச்சாட்டுகளை, புகார்களைக் கொண்டுவருவது பாவம் என்று மட்டும் சொல்லிக் கொண்டே மேலே பேச ஆரம்பிக்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாநிலத்தில் 1,470 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகிறது. மேல்நாடுகளில் மின்இணைப்பு கம்பிகள் மூலம் மொத்தத்தில் ஏற்படுகிற இழப்பு 10 சதவீதத்திற்கு மேல் இருக்காது. ஆனால் நம்முடைய மாநிலத்தில் 17½ சதவீதத் திற்கு மின்சக்தி இழப்பு இருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் கரண்டு வருகிறபோதே திருட்டு நடைபெறுகிறது என்பதுதான். அவ்வாறு மின்சார சக்தி திருட்டுப் போகாதிருப் பதைக் கண்காணிப்பது அவசியம். திருட்டுப்போவதைத் தடுத்தா லேயே இன்னும் அதிகமான சக்தி உபயோகத்திற்குக் கிடைக்கும் என்று நான் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்து, ஆளும் கட்சியில் இருக்கும்படியான மெம்பர் ஒருவர் சொன்னார்கள். குந்தாத் திட்டம் இருக்கிறதே, அது நமக்கு இலவசமாகக் கிடைத்த திட்டம், அதில் மத்திய சர்க்கார் மார் வாடித் தனம் பண்ணுகிறது என்றார்கள். நான் அவர் களுக்குச் சொல்லிக்கொள்வேன். மத்திய சர்க்கார் பண்ணு கிற மார்வாடித்தனத்தைவிட, நம் சர்க்கார் பண்ணுகிற மார்வாடித் தனம்தான் இன்னும் புத்திசாலித்தனமானது. வெளிநாடுகளில் இருந்து கிடைக்கிற உதவிகளை மொத்தமாகச் சேர்த்து திட்ட அடிப்படையில், மாநில அடிப்படையில், ஒவ்வொரு மாநிலத்திற் கும் இவ்வளவு என்று மத்திய சர்க்கார் ஒதுக்குகிறார்கள்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 நவம்பர் 27

கொடுக்கிற பணத்திற்கு அவர்கள் 4½ சத விகிதம் வட்டி என்று போட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி பொதுமேடைகளிலும் சரி, மற்ற இடங்களிலும் சரி என்ன என்னவோ பேசுகிறார்கள். திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிக்கு வந்து ஒன்றும் கிடைக்க வில்லை, இவர்களுக்கு முந்தி இருந்த அரசு இத்தனை காரியங்களை யும் செய்திருக்கவில்லை என்றால், இவர்கள் வெளிச்சம் எப்படிக் கொடுக்க முடியும்? எதை வேண்டுமானாலும் பேசலாம். எல்லா வற்றையும் அழகாகக் கட்டிக் கொடுத்தவர்கள் முந்திய சர்க்கார். இவர்கள் இப்போது வந்து உட்கார்ந்துகொண்டு தூப்புத்தூசி யைத்தான் துடைக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள்கூட குந்தாத் திட்டத்தைப்பற்றிப் பல விடங்களில் சொன்னார்கள். பதினெட்டு கோடி மத்திய சர்க்காருக்கு வட்டியாகக் கொடுக்க வேண்டுமா என்கிறார்கள். மத்திய சர்க்கார் நமக்குக் கொடுத்திருப் பது 4½ சத விகிதம் வட்டிக்குத்தான். நாம் அதை மின்சார போர் டுக்கு 4½ சத விகிதம் வட்டிக்கே கொடுத்திருக்கலாமே, எதற் காக 6 சத விகிதத்துக்கு நாம் கொடுக்க வேண்டும்? இது பெரிய மார்வடித்தனம் இல்லையா என்று கேட்கிறேன். நமக்கு வட்டி மூல மாகவே 9 கோடி கிடைக்கிறது என்பதை மறந்துவிடுவதற்கில்லை.

அடுத்து இன்னொன்று. மாதாமாதம் விவசாயிகளிடம் இருந்து மின்சக்தியை பில் தயாரித்து வாங்குவதைவிட இரண்டுமாதத் திற்கு ஒரு முறை பில் தயாரித்து வாங்கும் ஏற்பாட்டைக் கொண்டு வருவதனால் வேலை குறையும், மாதாமாதம் பில் தயாரிக்கிற வேலை குறையும் என்கிறார்கள். இப்படிப்பார்த்தால் நமது அமைச்சர்கள், உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்களுக்கு எல்லாம் இரண்டு மாதத் திற்கு ஒரு முறை சம்பளம் கொடுக்கலாம். அப்படி சம்பளம் வாங்கிக்கொள்ள சம்மதித்தால் பே பில் தயாரிக்கிற வேலை குறை யும், ரெவின்யூ ஸ்டாம்ப் செலவு குறையும். அப்படிச் செய்வார் களா என்று கேட்கிறேன். விவசாயிகள் வாய் இல்லாப் பூச்சிகள், எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று யோசிப்பது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டில் நமது தொழில் அமைச்சர் அவர்கள் கெட் டிகாரத்தனம் பண்ணியிருக்கிறார். வேளாண்மைக்குப் பயன் படுத்தும் மின்சக்திக்காக யூனிட் ஒன்றுக்கு 8¼ காசு வீதமே கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்கிறார். 27 ஆயிரம் கிராமங் களுக்கு மின் சக்தி வழங்கப்படுகிறது என்கிறபோது சாதாரண எத்தனையோ விவசாயிகள் தங்கள் வீடுகளுக்கு மின்சார விளக்குப் போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு வீட்டு உபயோகத்திற்காகும் மின்சாரத்திற்கு இரண்டு பைசா கூட்டியிருப்பது எத்தனையோ விவ சாயிகளைப் பாதிக்கும். தொழில்துறைக்கு மிகக்குறைந்த அளவில் கொடுக்கிறோம். கொஞ்சம் கூட்டினாலும் தொழில்துறையில் இருந்து வருகிற வருமானம் அதை ஈடு செய்யும். வீடுகளில் இருந்து வருமானம் இல்லை. ஆகவே மின்சார போர்டார் இதை மீண்டும் கவனித்தாகவேண்டும். எந்த இடத்தில் போடுவது



1967 நவம்பர் 27] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

நல்லது என்று சிந்தித்துப் பார்த்துச் செய்யவேண்டும். வீட்டு உபயோகத்திற்கான மின்சாரத்தை 2 பைசா கூட்டியிருப்பது சரி யல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இதுவரைக்கும் மின்வெட்டு இருந்தது, இந்த ஆண்டு இருக்காது என்று சொல்லிப் பெருமைப்படுவதில் பயன் இல்லை. இதுவரையில் மழையில்லை. மின்வெட்டு இருந்தது. இந்த ஆண்டு நல்ல மழை கிடைத்திருப்பதால், மின்வெட்டு இல்லையே தவிர இதில் ஒன்றும் இவர்களது நிர்வாகத்திறமை இல்லை. இதைச் சொல்லி முன்னே இருந்தவர்களுக்கு நிர்வாகத்திறமை குறைவு என்பதை எடுத்துக்காட்ட முயல்வது சரியான வாதம் அல்ல. அதுபோல இன்னும் 250 மெகாவாட் கொடுப்பதற்குக்கூட சக்தி நம்மிடம் அதிகமாக இருக்கிறது என்றால், இவர்கள் வந்து புதிதாக ஒன்றும் அதிகமாக உற்பத்தி செய்துவிடவில்லை. இவர்கள் வந்த பிறகு தொழில் அமைதி குலைந்துவிட்டது. பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு கிடக்கின்றன. தொழில் அமைதி இருந்து தொழிற் சாலைகள் மூடப்படாமல் இயங்கினால், புதுத்தொழில்கள் உண்டாகி யிருந்தால் கையில் மின்சக்தி மிச்சமிருப்பதற்கு வழியில்லை. தொழில் துறையில் உள்ள அமைதியின்மை தான் இந்த அளவுக்கு மின்சாரம் மிச்சமாகிக் கிடப்பதே தவிர, இது அபிவிருத்தி நிலை யைக் குறிப்பது அல்ல என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

அடுத்து லோன் வாங்குகிறார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர் கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது லோனை வாங்கக்கூடாது என் றார்கள். இப்போது வாங்குகிறார்கள். பாராட்டுகிறேன். ஆனால் கடன் வாங்குகிற முறை எப்படி இருக்கிறது? எலெக்ட்ரிசிடி லோனாக இருந்தாலும் சரி, சர்க்கார் லோனாக இருந்தாலும் சரி, அதிகாரிகளைவிட்டு மிரட்டி, நெருக்கி, மக்களைக் கஷ்டப்படுத்தித் தான் வசூலிக்கிறார்கள். வாங்கும்படியான பணத்திற்கு ரசீது கூட கொடுக்கப்படாமல் இருக்கிறது, பலவிடங்களில். எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. அரூர் தாலுக்கா தாசில்தார் கொடுத்துள்ள சர்குலர் இது.

ந. க. பி. 1-67, தாலுகா அலுவலகம், அரூர்.

உங்கள்மீது கீழ்கண்ட குற்றசாட்டுகள் ஏற்படுத்தபடு கின்றன. அதற்காக உம்மை ஏன் உடனடியாக வேலையிலிருந்து தற்காலிகமாக ஆறு மாதங்களுக்கு நீக்க சிபாரிசு செய்யக்கூடாது என்பதற்கு உங்கள் எழுத்து மூலமாக சமாதானத்தை இக்குற்றப் பத்திரிகை உங்களுக்குச் சார்வு செய்ததிலிருந்து ஏழு தினங் களுக்குள் அரூர் தாசில்தாருக்குக் கிடைக்கும்படியாக அனுப்பிக் கொள்ள வேண்டியது. தவறினால் உம்முடைய சமாதானம் எதுவும் இல்லை என்று கருதி மேல் நடவடிக்கை தொடரப்படும்.

குற்றம் 1.—தமிழக அரசுக் கடனுக்காக உங்கள் கிராமத்தில் குறைந்த பட்சம் ரூபாய் 5,000 வசூல் செய்ய இலக்கு குறித்தும் நீங்கள் இதுவரை உங்கள் கிராமத்தில் ஒரு நபரையாவது

அணுகி, தமிழக அரசு கடன் எழுப்பியுள்ளதைப்பற்றி கூறி, அவரிடம் இருந்து கடன் வசூல் செய்ய முயற்சி செய்யாது அசிரத்தையாக இருந்தது.

குற்றம் 2.—இதனால் சர்க்காருடன் ஒத்துழைக்காததும், முக்கிய மான பணியில் அசிரத்தை காட்டியதும்.

தாசீல்தார், அரூர்.

இப்படி கீழ் அதிகாரிகளை விரட்டி, மக்களைக் கொடுமைப் படுத்தி—சர்க்கரை வேண்டுமா கடனுக்குப் பணம் கொடு, அதுவேண்டுமா இவ்வளவு ரூபாய் கொடு என்பதாக மக்கள் வாய் இல்லாப்பூச்சிகள் என்று எண்ணி அவர்கள் தலையில் கட்டி கடன் வசூல் செய்யப்படுகிறது. அதிகாரிகள் வாங்குகிற பணத் திற்கு ரசீது கூட பலவிடங்களில் கொடுக்கப்படவில்லை. ரசீது இல்லாமல் இருப்பதால், அவர்கள் எவ்வளவு வாங்கினார்கள் என்ப தற்குக் கணக்கு எங்கே இருக்கிறது ? அவர்கள் எவ்வளவு செலுத் தினார்கள், பாக்கியை எடுத்துக்கொண்டார்களா என்ன என்பதற்கு என்ன கணக்கு இருக்கிறது ? மின்சாரம் வரவேண்டும், பம்ப்செட் வரவேண்டுமென்று கடன் கொடுக்கலாம், ஆனால் கொடுக்கப்படுகிற கடன்மூலம் நல்ல முறையில் அபிவிருத்தி ஏற்படுகிறது என்ற நிலைமை இருந்தால் அதை ஏற்றுக்கொள்ளலாம். அப்படியில்லை, மக்களிடமுள்ள அதிருப்தியை நான் இந்த மாமன்றத்திலே சமர்ப் பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ரசீது இல்லாமல் வாங்கியிருக்கிறார்கள் என்ற நிலையை ஸ்பெஸிஃபிக் ஆகக் குறிப்பிடுவார்களானால், அதுபற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஸ்பெஸிஃபிக் ஆகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அதற்கு நான் லட்சக்கணக்கானவை சொல்ல முடியும். அதன்மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அதோடு இதற்கும் இதிலே குறிப்பிட்டதைப்பற்றியும் நடவடிக்கை எடுக்கலாம். நான் இதுமாதிரி எத்தனையோ குறிப்பிட்டு அனுப்பி யிருக்கின்றேன். ஆனால் விவசாய அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். . .

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஒரு ஏக்கருக்குக் குறைந்த நிலமுள்ள விவசாயிகளிடமிருந்து வாங்கியதாக இப் பொழுது கூட குறிப்பிட்டுச் சொன்னால், நான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர் அவர்கள் இப்பொழுது வரட்டும். வந்தால் நான் அதுபற்றி நிரூபிக்கச் செய்கிறேன்.



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஒரு ஏக்கருக்குக் குறைந்த நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து வாங்கவேண்டா மென்று அரசாங்கம் உத்தரவு போட்டிருப்பதை நான் எதிர்க் கட்சித் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஒரு ஏக்கர் நிலம்தான் இருக்கிறது என்பதற்கு ரசீது கொண்டுவரவேண்டுமென்று சொல்கிறார்கள். அதை வாங்குவதற்காகக் கஷ்டப்படவேண்டுமே, அதற்காக மணியக்காரர் அல்லது கணக்கப்பிள்ளை இவர்களிடம்தானே போகவேண்டியிருக்கிறது என்ற காரணத்தால், அவர்கள் எடுத்துக் கொண்டு போங்கள் என்று சொல்லி விடுகிறார்கள். அப்படித் தான் கொடுக்கிறார்களே தவிர, " என்னிடம் இருக்கிறது, எடுத்துக் கொண்டு போங்கள் " என்று அவர்களாகச் சொல்கிற தர்மவான் இந்த உலகத்திலே யாரும் இல்லை. அந்தக் கட்சியிலே இருக்கும் படியான கனம் சின்னசாமி அவர்கள் சொன்னதுபோல் எங்கள் தொகுதியெல்லாம் கோயம்பத்தூரைச் சேர்ந்தது அல்ல, மேட்டூரைச் சேர்ந்தது ஆகையால் அங்கேதான் நாங்கள் எல்லாம் போயாக வேண்டும். ஆகவே ஓலைப்பாளையம், செண்பகப்புதூர் இவற்றை சப்-ஸ்டேஷனாகச் சேர்க்கவேண்டுமென்று நான் சொல்லி வந்திருக்கிறேன், அப்படிச் செய்தால்தான் மக்களுக்கு வசதியாக இருக்கும். மக்களுடைய சௌகரியத்தைப் பார்த்து அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டங் கள் எல்லாவற்றையும் முறையாக எடுத்துச் சீக்கிரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்களுடைய பேச்சிலிருந்து தூத்துக்குடியில் அனல் மின்சாரத் திட்டம் வருவதற்கான வாய்ப்புக்கள் இல்லாத நிலைமை இருக்குமோ என்னமோ என்ற சந்தேகம் இருக்கிறது. தூத்துக்குடி மட்டுமல்ல, கல்பாக்கம் போன்ற திட்டங்களை நிறை வேற்றுவதுபற்றியும் மத்திய சர்க்காரிடத்திலே எடுத்துச் சொல்ல வேண்டும். ஒகேனேக்கல் திட்டத்தைப்பற்றியது எதுவும் இதிலே இல்லவே இல்லை. இது 800 மெகாவாட் கொடுக்கக்கூடிய பெரிய திட்டமாக வரும். கிராமங்களுக்கு வெட்டிக்கொடுக்கவேண்டிய 9 லட்சம் கிணறுகளிலே 3 லட்சம் கிணறுகள்தான் இதுவரை வந்திருக்கிறது. மீதி 6 லட்சங்கள் இன்னும் வரவேண்டுமானால், அதைச் செய்ய வேண்டும். இதைத் தவிர, எலக்ட்ரிசிடி போர்டு என்பது ஒரு பெரிய சாம்ராஜ்யம்போல் இருக்கிறது. அதிலே கமர்ஷியல், ஆப்பரேஷன் அன்ட் மெயின்டனஸ், ஜெனரேஷன் என்றெல்லாம் சொல்கிறார்கள். நல்ல திறமையான எஞ்சினியர்கள் வேலைசெய்துகொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் யாராவது ஒருவர் பணம் வாங்கியிருக்கிறார்கள் என்று சொன்ன வுடன், அதை விசாரிப்பதில் அவர்களுடைய பொன்னான நேரம் போய்விடுகிறது. ஆகவே அப்படியில்லாமல் டெக்னிக்கல் சம்பந்தப்பட்டவர்களிடம் அட்மினிஸ்டிரேஷன் வேலைகளைக் கொடுக்கக்கூடாது. அட்மினிஸ்டிரேஷனுக்குத் தனியாக இருக்க

வேண்டும். கணக்குகள் பார்ப்பது, ஒப்படைப்பது போன்ற விஷயங்களுக்கெல்லாம் தனி இலாகாவாக ஒன்று இருக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் பல விஸ்தரிப்புப் பணிகள் விரைவிலே நடைபெறும். அட்மினிஸ்டிரேஷனுக்கும், எஞ்சினியரிங்குக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருக்கக்கூடாது. விண்ணப்பத்தை வைத்துக்கொண்டு அவர்கள் ஆபீஸிலே வேலைசெய்வதைக் காட்டிலும் அவர்களே கிராமங்களுக்குச் சென்று மின் விசை வேண்டுமா என்று கேட்கவேண்டும். விண்ணப்பம் ஒருவர் போட்டால் போட்ட ஆறு மாதங்களுக்குள் அதற்கான அக்ரிமென்டை எடுத்துக்கொள்ள வேண்டும். அடுத்த ஆறு மாதங்களுக்குள் அத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். என்னமோ செல்வாக்கு இருக்கிறவர்கள் சிக்கிரத்திலே செய்துகொள்கிறார்கள். எனக்கு செல்வாக்கு இருந்தால், நான் சிக்கிரமே செய்துகொள்ளலாம், ஆனால் எல்லோரும் அப்படிச் செய்யமுடியாது. ஆகவே அப்படியில்லாமல் எல்லோருக்கும் ஒரேமாதிரி இருக்கும்வகையில் விண்ணப்பம் போட்ட ஆறு மாதங்களுக்குள் அக்ரிமெண்ட் எடுத்துக்கொள்ளும்வகையிலும், அடுத்த ஆறு மாதங்களுக்குள் வேலையை முடித்துவிடக்கூடிய வகையிலும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஆனால் இப்பொழுது அப்படியில்லை. புகார்கள் வருகின்றன, இரண்டு மூன்று வருஷங்கள் ஆகியும் இன்னும் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். சிலர் போன வருஷம் போட்டேன் கிடைத்துவிட்டது என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கக்கூடாது. மலைப் பகுதிகளாக இருக்கக்கூடிய தாளவாடி, உடையாளத்தூர் போன்ற இடங்களில் மினிமம் கியாரண்டி என்பதை வற்புறுத்தாமல் லாப நஷ்டம் பார்க்காமல் விஸ்தரிப்புகள் செய்யவேண்டும்.

சமவெளிப் பிரதேசமாக இருந்தால், அங்கே விஸ்தரிப்புகள் அதிகமாக இருக்கும், அதனால் லாபம் இருக்கலாம். ஆனால் மலைப் பகுதிகளைப் பொறுத்தவரையில் அரை மைல் அல்லது ஒரு மைல் தூரத்திற்குக் கிணறுகளே இருக்காத நிலைமை இருப்பதால் அங்கேயுள்ளவர்களுக்குத் தனிச் சலுகைகள் கொடுத்து விஸ்தரிப்புக்களைச் செய்யவேண்டும்.

மின்சார போர்டு சம்பந்தப்பட்ட செலவுகளைச் சிக்கனமாக ஆக்கவேண்டும். சாமான்கள் கிடைக்கவில்லையென்றால், அவற்றைக் கிடைக்கச் செய்வதற்காகத் தனிப் பிரிவு ஒன்றை வைத்து அதன் மூலம் சாமான்கள் லாபகரமாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கரன்ட் ஒரு இடத்திலும், மோட்டார் ஒரு இடத்திலும், பம்புசெட் ஒரு இடத்திலும் போய் வாங்கவேண்டியிருக்கிறது. அப்படியில்லாமல் கரன்ட் கொடுக்கிற வேளையிலே மோட்டாரும் கொடுத்து, பம்புசெட்டும் அவர்களே கொடுத்து அவர்களிடமிருந்து அதற்கான தொகைகளைப் பகுதி பகுதியாகத் திரும்பிப் பெற்றுக்கொள்ளலாம். அவர்களிடத்திலே அதற்கான வட்டியை வாங்கிக்கொள்ளலாம். அப்படியில்லாமல் இப்பொழுது



எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. பிளாக் டெவலப்மென்ட்லிருந்து கடனுக்காகப் போனால் அதிலே எத்தனையோ பர்சென்டேஜ் போய்விடுகிறது, கடையிலே போய் சாமான்கள் வாங்கும் பொழுது எத்தனையோ பர்சென்டேஜ் போய்விடக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அப்படியில்லாமல் திட்டங்கள் போடப்பட்டு அதன் பலன்கள் மக்களுக்குப் போய்ச்சேரக் கூடிய வகையிலே விண்ணப்பம்போட்ட ஆறு மாதங்களுக்குள் அக்ரிமெண்டும், அடுத்த ஆறு மாதத்திற்குள்ளாக பம்புசெட்டு முதலியவை போட்டுக்கொடுக்கவேண்டும். கரன்ட் கொடுக்கும் பொழுதே மோட்டார், பம்புசெட் முதலியவற்றைக் கொடுத்து அதற்கான தொகையையும் சேர்த்து மாதம் 100 ரூபாய் என்ற அளவில் பில்லோடு சேர்த்து வசூலித்துக்கொள்ளக்கூடிய வகைசெய்தால், உற்பத்தி பெருகுவது மட்டுமல்ல, தமிழகத்திலிருக்கிற விவசாயிகளுக்கு அது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு இந்த எலக்ட்ரிசிடி போர்டு சம்பந்தப்பட்ட அத்தனை பேர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், அமைச்சர் அவர்கள் இங்கே சட்டசபையிலே எந்த எந்த அங்கத்தினர்கள் என்ன கேட்டார்கள், என்ன என்ன நடைபெறவில்லை என்ன என்ன நிலையில் இருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் ஒரு செயற்குறிப்பு ஒன்றை வைத்திருப்பது குறித்து நான் அவர்களையும் பாராட்டுகிறேன், இதுமாதிரி ஒவ்வொரு இலாகாவிலும், சட்ட மன்ற உறுப்பினர்கள் என்னென்ன பிரச்சினையை எழுப்பினார்கள், அந்தப் பிரச்சினைகள் எந்த நிலையிலே இருக்கின்றன, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற குறிப்பை வைப்பார்களேயானால், மிகமிகப் பாராட்டுக்குரியதாக இருக்கும். அந்த முறையில் இப்போது மின்சாரக் குழுவைப் பொறுத்தவரை என்னென்ன நடவடிக்கைகள் உறுப்பினர்கள் கூறியவற்றின் பேரில் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சபையில் வைத்ததற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இதிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் கொடுத்து, நல்வாழ்வு கிடைக்கும்படியான வழிவகைகளைச் செய்யவேண்டும். மலைப் பகுதிகளிலும், காட்டுப் பகுதிகளிலும், மிருகங்கள் இருக்கும்படியான பகுதிகளிலும் வேலை செய்து வரக்கூடிய இந்தத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி மற்றும் பல வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். இந்தத் துறையில் 50 கோடி ரூபாய் செலவு செய்திருக்கும்படியான நிலையிலே ஏழெட்டு கோடி ரூபாய் அளவுக்கு, அதிகமான அளவுக்கு டிப்ரிசியேஷன் என்று காட்டப்பட்டிருக்கிறது. தற்போது இந்த ஆண்டில் 25,000 முதல் 30,000 கிணறுகள் வரைதான் மின்சாரம் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 1½ லட்சம் கிணறுகளுக்கு மின்வசதி செய்து கொடுக்கக்கூடிய அளவுக்கு நிலைமையை உருவாக்கினால்தான் பாக்கி இருக்கும் கிணறுகளுக்கெல்லாம் இன்னும் ஏழெட்டு ஆண்டுகளில் மின் இணைப்பைக் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படும்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 நவம்பர் 27

அப்படிக் கொடுப்பதன் மூலம் உற்பத்தி பெருகுவதோடு தொழில்களும் பெருக வழி ஏற்படும் என்று கூறி, இந்த பட்ஜெட் அதிகமான அளவுக்கு நன்மை அளிக்கக்கூடியதாக இருக்கும், அமையும் என்று அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் கொடுப்பார்கள் என்று கருதி இதை நான் ஆதரிக்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஆன் எ பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன், ஸார்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, 'பெட்டியில் இருக்கும் பாம்பு போல் . . . .' என்று சொன்னார்கள்; இன்று காங்கிரஸ் கட்சி மெம்பர்கள்தான் பெட்டியில் இருக்கும் பாம்பு போல் இருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இவர்தான் அவர்களிடம் பெட்டிப் பாம்புபோல் அடங்கியிருக்கிறார்கள்.

MR. SPEAKER : A personal explanation must be restricted to your own person and should not extend to other persons.

DR. H. V. HANDE : If you will hear me, you will know. In the case of the labour dispute, I have clearly pointed out in the Upper House the discrepancy between the speech of the previous Minister for Industries and the judgment given by Justice K. Srinivasan and asked how there can be this discrepancy. To this day there was no proper answer to the question. பெட்டியில் இருக்கும் பாம்பு யார் என்று பார்க்கிற நேரத்தில் இவர்கள்தான் பெட்டியில் இருக்கும் பாம்பு போல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 81-வது விதிப்படி, தன்னிலை விளக்கம் சொன்னால், அது தன்னைப்பற்றி விளக்கம் கூறுவதாக இருக்க வேண்டுமே தவிர, மற்றவர்களைப் பற்றிப் புதுக் காரியங்களைச் சொல்வதாக இருக்கக்கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திரு. ஹாண்டே அவர்கள் சொல்லி விட்டுப் பேசாமல் இருக்கும்படியான நிலைமையில் அன்றும் இருந்தார்கள், இன்றும் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு. திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1967-68-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதம் சென்ற மூன்று நாட்களாக இங்கே சிறப்பாக நடைபெற்று வந்திருக்கிறது. இந்த விவாதத்திலே இந்த அவையிலுள்ள உறுப்பினர்கள் அத்தனை பேரும் கட்சி அடிப்படையில் கலந்து கொள்ளாமல், கருத்துக்கள் அடிப்படையிலே கலந்துகொண்டு, தங்கள் தங்கள் கருத்துக்களைச் சிறப்பாகத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை அதிகமாக வரவேற்கிறேன் என்ற



1967 நவம்பர் 27] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

முறையில் வரவேற்று, வாரியம் எடுத்துக் கொள்ள வேண்டிய பொதுவான நடவடிக்கைகளைப்பற்றித் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விவாதம் இந்த வகையில் அமைந்ததைப் பற்றி நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த அவையிலுள்ள அத்தனை பேரும் மின்சார வாரியம் செய்து வருகின்ற பணிகள் பலவற்றைப் பாராட்டி, செய்ய வேண்டிய பணிகள் என்னென்ன, செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் என்னென்ன, காரியங்கள் செவ்வனே நடைபெறுவதற்கு என்ன வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதியைப் பொறுத்தமட்டில் மின்சார வாரியம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றியும், எத்தகைய பணிகளை இன்றைக்கு எடுத்துக் கொள்ள இயலும் என்பதைப்பற்றியும், அவற்றை எடுத்துக் கொண்டால் என்னென்ன பலன்கள் அந்தந்தப் பகுதிகளுக்கு விளையும் என்பதைப்பற்றியும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு கூறப்பட்ட கருத்துக்களின் மீது உரிய கவனம் செலுத்தி, என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமோ அந்த நடவடிக் நடவடிக்கைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறி நான் விரும்புகிறேன்.

மின்சார வாரியத்தினுடைய பணிகள் எந்த அளவுக்கு இன்றியமையாதவையாக அமைந்திருக்கின்றன என்பதைப் பற்றியும் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்த ஆண்டில் மின்சார வாரியத்தினுடைய மின்வழங்கும் நிலை எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி நான் என்னுடைய உரையிலே குறிப்பிட்டிருந்தேன், 'இந்த ஆண்டு மின்சாரத்திலே வெட்டு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை, அடுத்த ஆண்டும் வெட்டு வரக் கூடிய சூழ்நிலை இல்லை, இந்த நிலை நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தரக் கூடியது' என்று சுட்டிக் காட்டியிருக்கிறேன். அவ்வாறு சுட்டிக் காட்டியிருப்பதால் ஏற்கனவே வெட்டு ஏற்பட்டதற்குக் காரணம் இவர்கள் திறமையின்மைதான் என்று நான் சொல்லவில்லை. அவ்வாறு இருக்குமோ என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நினைத்துக்கொண்டு, அவர்களாகவே அதை வரவழைத்துக் கொண்டு, கேள்வியை எழுப்பிக் கொண்டு அவர்களே விடை கூறும் முறையிலும் பேசினார்கள். "ஆண்டுக்காண்டு தொடர்ந்து வெட்டு ஏற்படுகிற நிலை, தொடர்ந்து பல ஆண்டுகளாக இருந்து வந்த நிலை இந்த ஆண்டு இல்லை; அடுத்து வரக் கூடிய ஆண்டிலும் இருப்பதற்கான சூழ்நிலை இல்லை; 1969-ம் ஆண்டு வரையிலும் தேவையான அளவுக்கு மின்சாரம் கிடைக்கக்கூடிய நிலை இருக்கிறது; பற்றாக்குறை ஏற்படுகிற திங்கள்களில் கூட நெய்வேலியிலிருந்து மின்சாரத்தை எடுத்துக் கொள்வதற்கு அண்மையில் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது" என்றுதான் கூறியிருக்கிறேன். நல்ல நிகழ்ச்சிகள் நடந்தால் நல்லவர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதும், தீய நிகழ்ச்சிகள் நடந்தால் தீயவர்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1967 நவம்பர் 27

களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதும் உலக மரபு, தமிழக மரபு. நல்லவர்களுக்கு, இயற்கையில் நடப்பதற்கும் தொடர்பு இல்லையென்றாலும், தீயவர்களுக்கும் இயற்கையில் நடப்பதற்கும் தொடர்பு இல்லையென்றாலும் நல்லவர்களோடு நல்லவைகளையும், தீயவர்களோடு தீயவைகளையும் ஒப்பிடுவது, பொருத்திப் பார்ப்பது வழக்கம். 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்பது போல் நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மழை பெய்திருக்கிறது. நீர்த் தேக்கத்தில் நீர் இருக்கிறது. மின்சாரம் உற்பத்தியாகிறது. சூழ்நிலை மகிழ்ச்சிகரமாக இருக்கிறது என்பதைத்தான் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

நான் எதிர்க்கட்சித் தலைவனாக வீற்றிருந்தபோதும் மின்சார வாரியத்தின் பணிகளைப் பாராட்டி, போற்றித்தான் பேசியிருக்கிறேன். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், தமிழகம் இந்த வகையில் முன்னணியில் நிற்கத்தக்க அளவுக்கு வாய்ப்புக் கூறுகள் குறைவாக இருந்தாலும், எடுத்துக் கொண்ட முயற்சிகளின் விளைவாக, அரசு போட்ட திட்டத்தின் விளைவாக, அதிக ஆக்கம் தந்ததன் விளைவாக ஐந்தாண்டுத் திட்டங்களில் மூன்றில் ஒரு பங்கை மின்சாரத்திற்கு மட்டுமே செலவழித்ததன் அடிப்படையாக, இந்த வாரியத்தில் பணி புரிகின்றவர்கள் சிறப்பாகவும், பொறுப்புணர்ச்சியோடு பணியாற்றியதன் விளைவாக இந்தத் துறை மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கிற பாங்கினை நாம் அறிகிறோம். குறைந்த வாய்ப்பு வசதிகளை வைத்துக் கொண்டு அதிக வாய்ப்பு வசதிகளை வைத்துக் கொண்டிருக்கிற மாநிலங்களைக் காட்டிலும் இந்த மாநிலம் முன்னாலே இருப்பது பாராட்டி மகிழ்ச்சியுறத்தக்க ஒன்றாகும்.

குறைந்த அளவு உற்பத்திச் செலவில் நீர்மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அனல் மின்சாரமாக இருந்தாலும், அணு மின்சாரமாக இருந்தாலும் உற்பத்திச் செலவு அதிகமாகிறது. நீர் மின்சாரத்தைப் பெறுவதிலே இருக்கின்ற வாய்ப்புகள் அவ்வளவையும் ஓரளவு பயன்படுத்தி விட்டோம். இனிமேல் தேவைப்படுகின்ற மின்சாரத்தை அனல் மின்சாரத்தின் மூலமோ அல்லது அணு மின்சார நிலையத்தின் மூலமோதான் பெறவேண்டும். நீர் மின்சாரத்தின் மூலமாக நாம் மின்சாரத்தைப் பெறுவதற்கான ஒரே ஒரு வாய்ப்பு ஹொகனேக்கல் திட்டம் ஒன்றுதான், அந்தத் திட்டம் இரு மாநிலங்களுக்கும் பயன்படக்கூடும் என்ற கருத்து பல்லாண்டு காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பன்னெடுங்காலமாக இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்திலே பங்கெடுத்துக் கொண்ட உறுப்பினர்கள் பலர் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்கான விருப்பத்தினைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.



1967 நவம்பர் 27] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிற முழு ஆணையும் அதிகாரமும் அதை நிறைவேற்றுகிற திட்டமும் நம் கையில் முழுக்க முழுக்க அமையவில்லை. அது மைசூர் மாநிலத்தின் தயவைப் பொறுத்தும் இந்த மாநில அரசு எடுத்துக் கொள்கிற முயற்சியைப் பொறுத்தும் அமைகிற உடன்பாட்டைப் பொறுத்து அது அமையவேண்டும். பல சமயங்களில் மைசூர் மாநில அரசும் தமிழக மாநில அரசும் அதுபற்றிப் பேசி வந்திருக்கிறார்கள். மண்டலக் குழுவில் கூட இதுபற்றி கருத்து தெரிவித்து வந்திருக்கிறார்கள். ஆனால், தெளிவானதொரு சூழ்நிலை ஏற்படாத காரணத்தினால், அதிகமாகப் பேசுவதால் இப்பிரச்சினை கெட்டு விடக் கூடாதென்ற காரணத்தினால் நாம் மிக நாசூக்காக இப்பிரச்சினையை அணுக வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்பிரச்சினை மண்டலக் குழுவில் பல முறை விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் அளவில் இதுபற்றிக் கருத்துக்கள் பரிமாறப்பட்டு, இதிலுள்ள சாதக பாதகங்கள் என்ன, எந்த அளவில் இதன் பயனைப் பெறுகிறோம், இத்திட்டத்தை நிறைவேற்றுவ பி.ப
தனால் தமிழக மாநிலத்திற்கு எந்த அளவிற்கு நன்மை ஏற்படும், 12-30
மைசூர் மாநிலத்திற்கு எந்தெந்த வகையில் நன்மைகள் ஏற்படும் என்ற கருத்துக்கள் அதிகாரிகளால் பரிமாறிக் கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அதுகுறித்து அதிகாரிகள் உட்கார்ந்து பேசி, அவர்களாக எந்த முடிவையும் எடுக்க முடியாது. அந்தந்த அரசுகள் எந்தெந்தக் கருத்துக்களைச் சொல்லி அனுப்புகிறார்களோ அந்த அளவிற்கு மட்டும்தான் அதிகாரிகளின் வாதம் நிற்க முடியும். அதற்கு மேல் போக வேண்டுமென்றால் அரசுதான் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். அடிமட்டத்தில் கருத்துக்கள் பரிமாறப்பட்டு ஒரு சூழ்நிலை ஏற்பட்ட பிறகு, மைசூர் மாநில முதல் அமைச்சர் அவர்களும் தமிழக மாநில முதல் அமைச்சர் அவர்களும் உட்கார்ந்து பேசி நல்லுறவுகள் மூலம் தீர்த்துக் கொள்வதின் மூலம், மத்திய அரசின் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய உதவியின் பேரிலும் அதை சுமுகமாக நிறைவேற்ற வேண்டுமென்ற ஆர்வத்தின் பேரில்தான் அத்திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும் ஆகவே, அதுபற்றி திட்டவட்டமாக, அது எப்போது ஏற்படும், எவ்வளவு ஏற்படும் என்றெல்லாம் இந்தச் சூழ்நிலையில் சொல்ல இயலாத நிலை இருக்கிறது. ஹொகனேக்கல் திட்டம் பற்றி அதிகாரிகள் அளவில் கருத்துக்கள் பரிமாற்றப்பட்டு பேச்சு வார்த்தைகள் நடக்கிற அளவில் இருக்கிறது. மேலும் மின்சாரத்தைப் பெறுவதற்கான திட்ட ஆய்வுகள்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஆராய்ந்து, அதிகம் செலவு ஆகாமல் சிக்கனமாக இருக்கும் வழி வகைகளைக் கண்டு அவற்றை முறைப்படி எடுத்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம்.

மற்றைய நாடுகள் தருகிற உதவியைப் பற்றியும் இங்கு பல உறுப்பினர்கள் கருத்து எடுத்துத் தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்களும் மற்ற நண்பர்களும் சில கருத்துக்களை எடுத்துத் தெரிவித்தார்கள். கனடா, நம்

நாட்டிற்கு குந்தா திட்டத்தை அமைக்க பொறிகளையும், சாதனங்களையும், நிபுணர்கள் ஒத்துழைப்பையும் நன்கொடையாக வழங்கியுள்ளது. அந்த நன்கொடையைப் பெற்று மத்திய அரசு 9.5 கோடி ரூபாய் அளவிற்கு குந்தா திட்டத்திற்கு வழங்கியிருக்கிறது. அவர்கள் நன்கொடையாக வழங்கியிருந்தாலும், ஐந்திலிருந்து ஐந்தரை சதவிகித வட்டி விகிதத்தில்தான் இந்திய அரசு நமக்கு அந்தத் தொகையை வழங்கியிருக்கிறது. நான்கு கோடி ரூபாய் வட்டி செலுத்தப்பட்டிருக்கிறது இந்த வகையில். ஸெக் நாட்டிலிருந்து 2½ சத விகிதம் வட்டியில் 13 கோடி ரூபாய் அளவில் கடன் வழங்கியுள்ளார்கள். பன்னிரண்டு ஆண்டுத் தவணையில் 1970-71-லிருந்து செலுத்தக் கூடிய நிலையில் இதற்கும் 3 சத விதம் வட்டியில் மின்சார போர்டிற்குக் கடனாக வழங்கியிருக்கிறது. இந்திய நாட்டிற்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருப்பது பரவலாகப் போகவேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு நாம் வட்டி கட்ட வேண்டியிருக்கிறது. அந்த வட்டி விகிதங்களைக் குறைந்த அளவில் அமைத்து திட்டத்தை சாதகமாக அமைத்துக் கொள்ள முடியுமா என்பதுபற்றி இந்த அரசு வற்புறுத்திக் கொண்டு வருகிறது, இத்திட்டங்களைப் பொறுத்து.

மின்சாரக் கட்டண உயர்வைப் பற்றி எடுத்துச் சொல்லும்போது, வேளாண்மைத் துறைக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கான கட்டணம் குறைவுதான், யூனிட் ஒன்றுக்கு 8.25 காசு என்ற அளவிற்குத்தான் வைத்திருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்த வரையில், மின்சார உற்பத்தியைச் செய்ய உயர் அழுத்தத் தன்மையிலிருந்து குறைந்த அழுத்தத் தன்மைக்குப் படிப்படியாகக் கொண்டுவந்து கடைசியாக மின்சாரத்தைக் கொண்டு போய்க் கொடுக்கிறவரை 17 காசு அடக்க விலை ஆகிறது. அப்படி 17 காசு அடக்க விலையாகியும் வேளாண்மைத் துறைக்கு நாம் 8.25 காசுக்குத்தான் வழங்குகிறோம். அதன் மூலம் உற்பத்திச் செலவிலிருந்து நாம் சப்சிடி செலுத்துகிற அளவில் அந்த நஷ்டத்தை ஏற்று 8.25 காசுக்கு நாம் வழங்குகிறோம். மொத்த உற்பத்தியில் 23 சத விதம் வேளாண்மைத் துறைக்காக நாம் இப்போது செலவு செய்து வருகிறோம். அதற்காக நாம் போடுகிற கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 8.25 காசு தான். அதை இன்னும் குறைக்க வேண்டும் என்று அங்கத்தினர்கள் பலர் கருத்துத் தெரிவித்தார்கள். விவசாயிகளின் நிலையில் பார்க்கிறபோது அவர்களுக்கு பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட வேண்டும், அவர்களின் உற்பத்திச் செலவு பல வகைகளில் ஏறுகிறது, அவை குறைவதற்கான வழிகளைக் காணவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் அவர்கள் கட்டணத்தை இன்னும் குறைக்க வேண்டுமென்ற கருத்தை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள் ஆனால் மின்சார வாரியத்தின் நிலையில், இதில் உற்பத்திச் செலவு மற்றவற்றைக் கணக்கிடும்போது யூனிட் ஒன்று 8.25 காசுக்கு நாம் கொடுப்பது என்பது மிகவும் குறைந்த விலையில்தான். விவசாயிகளைப் பொறுத்த வரையில் கிணறுகளுக்கு அண்மையில் உள்ள



கம்பம்வரை அவற்றைப் பழுது பார்க்கும் செலவுகளை வாரியம் ஏற்றுக்கொள்கிறது. அச்செலவை விவசாயிகள் தலையில் வைப்பதில்லை. கிணறுகள் வற்றிப் போகும் போது குறைந்த கட்டண உத்தரவாதம் தவிர்க்கப்படுகிறது. மின் இறைவை நிறுக்கப்பட்டு மீண்டும் பொருத்தும்போது, கூலி மற்றவற்றை வாரியம்தான் ஏற்றுக் கொள்கிறது. விவசாயிகள் தலையில் அதைப் போடுவதில்லை. இவ்வளவு சலுகைகளோடு அவர்களுக்கு 8.25 காசுக்குத் தான் மின்சாரம் கொடுக்கப்படுகிறது.

மைசூர் மாநிலத்தைப் பொறுத்தமட்டில், அங்கு அனல் மின்சார உற்பத்தியைவிட நீர் மின்சார உற்பத்திதான் அதிகமாக இருக்கிறது. நீர் மின்சாரத்தின் உற்பத்திச் செலவு குறைவு என்று சொன்னேன், அப்படியிருந்தும் மைசூர் மாநிலத்தில் வேளாண்மைத் துறைக்கு யூனிட் ஒன்று 11 காசுக்கு வழங்குகிறார்கள். கேரளாவில் பெரும் பகுதி நீர்மின்சாரம்தான். கேரளாவில் நீர் மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்வதால் உற்பத்திச் செலவும் குறைகிறது. அப்படி உற்பத்திச் செலவு குறைகிறது என்பது மட்டுமல்லாமல், அங்கு கம்பிகளை இழுத்துக் கொண்டு போயிருக்கிற அளவும் விவசாயத்திற்காகத் தருகிற அளவும் மிகமிகக் குறைவு. தமிழகத்தில் 23 சதவிதம் வேளாண்மைக்குத் தருகிறார்கள் என்றால், இவ்வளவு வேளாண்மைத் துறைக்கு தருகிற பொறுப்பு கூட கேரளாவில் இல்லை; அங்கு உற்பத்திச் செலவும் குறைவு. இருந்தாலும் கேரளாவில் 8.80 காசு என்ற அளவில் விதிக்கப்படுகிறது. இங்கு நாம் 8.25 காசுக்குத் தருகிறோம், கேரளாவில் இதை விட அதிகமாகத்தான் விதிக்கப்படுகிறது. ஆந்திராவில் விவசாயத்திற்கு தருகிற அளவு, இவ்வளவு பரவலாக மின்சாரம் கொண்டு போய் சேர்க்கப்படவில்லை. அங்கு யூனிட் ஒன்றுக்கு 12 காசு வசூலிக்கிறார்கள். ஆகவே ஆந்திரா, மைசூர், இவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கு 8.25 காசு என்று வைத்திருப்பது மிகவும் குறைந்த கட்டணமாகும் என்பதை நீங்கள் உணர்வீர்கள். 12 காசுக்கு மேற்பட்டு வேளாண்மைத் துறைக்கு விதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டால் மத்திய அரசு மானியம் தருகிறது. நாம் 8.25 காசுக்குக் கொடுப்பதால் அந்த மானியத்தைக் கூட நாம் வாங்க வேண்டிய நிலை ஏற்படாத அளவிற்கு இருக்கிறோம். 12 காசுக்கு மேல் போனால் மத்திய அரசிடம் மானியம் வாங்க முடியும். ஆனால் விவசாயிகளுக்குக் குறைந்த கட்டணத்தில் கொடுக்க வேண்டுமென்றுதான் 8.25 காசுக்குத் தரப்படுகிறது. வேறு விலைவாசிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது குறைந்த விகித கட்டணமாகத்தான் இருக்கிறது.

தொழில் துறைக்கு குறைந்த கட்டண விகிதத்தில் தரப்படுகிறது என்ற அளவிற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 45 சதவிதம் மின்சாரம் தொழில் துறைக்குத் தருகிறோம். வேளாண்மைத்துறைக்கு 23 சதவிதம் தருகிறோம். உற்பத்திச் செலவு தொழில் துறைக்குக் கொடுக்கிற வகையில் குறைகிறது. உயர் அழுத்தக் கம்பிகள் மூலம் மின்சாரம் வழங்கும்போது

உற்பத்திச் செலவு 7½ காசுதான் வருகிறது. குறைந்த அழுத்த நிலைமைக்குக் கொண்டு வர அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, குறைந்த அழுத்த நிலைமையில் விவசாயிகளுக்குக் கொண்டு கொடுக்கும் சூழ்நிலையில் அது யூனிட்டுக்கு 17 காசுகளாக ஆகிறது. பெரிய தொழிற்சாலைகளுக்குக் கொண்டு போகும்போது, உயர் அழுத்த நிலையில் அப்படியே கொண்டு போய் விட்டு விடுகிறோம். தொழிற்சாலைகளில் அவர்கள் எடுத்துக்கொள்ளும் அளவுக்குக் கொண்டு போகும்போது நமக்கு 7½ காசுகள் செலவு ஆகிறது. மின்சாரக் கட்டணத்தைக் குறைத்துக் கொடுப்பதைப் பொறுத்த வரையில், அலுமினியத் தொழிற்சாலை, உருக்குத் தொழிற்சாலை போன்றவைகள் அதிக அளவுக்கு மின்சாரத்தை மூலப் பொருளாக உபயோகப்படுத்த வேண்டும். வேறு சில தொழிற்சாலைகள் மின்சாரத்தை மூலப் பொருள் அளவில் செலவிடுவது குறைவாக இருக்கும். ஆனால், அலுமினியம் தொழிற்சாலை, சோடா போன்ற கெமிக்கல்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், அவைகள் அதிகமான அளவுக்கு மூலப் பொருளாக மின்சாரத்தைச் செலவழிக்க வேண்டிய கட்டம் ஏற்படுகிறது. உதாரணத்திற்கு அலுமினியத் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால், மொத்த மூலப் பொருள்களில் 16.7 சதவிதம் மின்சாரத்திற்காகச் செலவழிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறது. சிமெண்ட் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் 9.1 சதவீதம் மின்சாரத்திற்காகச் செலவழிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறது. இதே அளவுக்கு வேறு பல தொழிற்சாலைகளுக்கு எடுத்துக்கொள்கிறார்கள் என்று சொல்லுவதற்கில்லை. நாள் பூராவும், இரவு-பகல் இரண்டு வேளைகளிலும் எல்லாத் தொழிற்சாலைகளும் மின்சாரத்தை எடுத்துக்கொண்டால்தான் உற்பத்தியாகக் கூடிய மின்சாரத்தை உபயோகப்படுத்த முடியும். தொழில் துறையைப் பொறுத்தவரையில் கொடுக்கக்கூடிய மின்சாரத்திற்கான கட்டணத்தைச் சில தொழில்களுக்குக் குறைத்துக் கொடுத்தாலும், மொத்தத்தில் 'நோ-பிராபிட், நோ-லாஸ்' பேஸில் என்ற அளவுக்கு, அடக்க விலைக்குக் குறையாத அளவுக்கு, மற்ற தொழில்களுக்குக் கொடுக்கக் கூடிய மின்சாரத்திற்கு 8-10 காசுகள் என்ற விதத்தில் வசூலித்து சரிக்கட்டப்படுகிறதே தவிர, வேளாண்மைத் துறைக்குக் கொடுப்பதைப் பொறுத்த வரையில் படிக்குப் பாதி நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு கொடுக்கும் நிலையைப் போன்று இல்லை. இந்த முறையில்தான் தொழில் துறையைப் பொறுத்த வரையில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், இரவு நேரத்தில் மின்சாரம் உற்பத்தி ஆகும்போது அதை வாங்கிக்கொள்ளக் கூடிய நிறுவனங்கள் இல்லையென்றால், உற்பத்தியாகக் கூடிய மின்சாரம் வீணாகக் கூடிய நிலைமை ஏற்படும். இரவு நேரத்தில் உற்பத்தியாகக் கூடிய பெரும் பகுதி மின்சாரத்தை அத்தகைய பெரும் தொழில்கள் வாங்கிக்கொள்ளும் கட்டத்தில் இருக்கின்றன; மின்சாரத்தை அவர்களுக்கு அளிக்கும் கட்டத்தில் நாம் இருக்கிறோம். பகல்





நேரத்தில் உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தைப் பயன்படுத்தக் கூடிய நிறுவனங்கள் நிறைய இருக்கின்றன—அலுவலகங்களும் மற்றவைகளும் உபயோகப்படுத்தக்கூடிய வாய்ப்புக்களும், வசதிகளும் இருக்கின்றன. இரவு நேரத்தில் மின்சாரத்தை வாங்கிப் பயன்படுத்தும் சூழ்நிலைகள் அதிகமாக ஏற்படுத்த ஏற்படுத்த, மின்சார உற்பத்தி பெருகிக்கொண்டு போக முடியும். இல்லாவிட்டால் இரவு நேரத்தில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர்கள் உற்பத்தி செய்துகொண்டே இருக்கும். உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தை எப்படியாவது பயனபடுத்த வேண்டும். இல்லாவிட்டால் மின்சாரத்தைப் பயன்படுத்தும் நிலைமை குறைந்துவிடும். அதையெல்லாம் கணக்குப் பார்த்துத்தான் தொழில்துறையைப் பொறுத்தவரையில் இத்தகைய ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

விட்டு உபயோகத்திற்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கான நிலைமைகளைப் பொறுத்த வரையில், யூனிட்டுக்கு 30 காசுகளிலிருந்து 32 காசுகளாக ஆன நிலைமைகளைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். 1965-ம் ஆண்டு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும்போது, மற்ற வகைகளில் கட்டணம் உயர்த்தப்பட்டதே தவிர, வீடுகளுக்கு உபயோகப்படுத்தப்படக் கூடிய மின்சாரத்திற்கான கட்டணம் உயர்த்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 1964-ம் ஆண்டு இருந்த கட்டணத்தில் 2 காசுகள் உயர்த்தப்பட்டிருக்கிறது. குறைந்த அளவுக்கே வீடுகளுக்கு உபயோகிக்கப்படும் கேரள மாநிலத்தில் யூனிட்டுக்கு 32 காசுகள் விதிக்கப்பட்டிருக்கிறது. மாநிலம் பூராவும் எடுத்துக்கொண்டால், இதனால் பெருமளவு பாதிக்கப்படும் சூழ்நிலை இருக்காது. நம் மாநிலத்தில் மொத்தத்தில் 4 சதவிதம் மின்சாரம்தான் வீடுகளுக்கு உபயோகிக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல் இந்த 2 காசுகள் உயர்வினால் மாநிலம் முழுவதும் எடுத்துக்கொண்டால் வரப் போகிற வருவாய் 42 லட்சம் ரூபாய்தான். பெருமளவுக்கு இது எல்லோரையும் சேர்த்துப் பாதிக்கும் அளவுக்கு இருக்காது. உற்பத்திச் செலவில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பில் அவர்களும் ஓரளவு பங்குகொள்ளவேண்டும் என்ற முறையில்தான் இந்த கட்டணம் ஓரளவுக்கு உயர்த்தப்பட்டது.

மற்றொன்று, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பில் போடுவது என்ற கருத்தைப்பற்றி உறுப்பினர்கள் இங்கே கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பில் போட வேண்டும் என்ற நிலைமைக்கு வந்திருக்கிற காரணமே, வொர்க் லோட் எந்த விதத்திலும் ஏறக் கூடாது என்ற முடிவை வைத்துக் கொண்டும், அதே நேரத்தில் மின்சார வாரியத்தில் செலவு அதிகமாகி விடக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டும் வாரியம் ஒரு முடிவு எடுத்திருக்கிறது. மகாராஷ்டிரத்தில் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கட்டணம் விதிக்கும் நிலைமை இருக்கிறது. டெலிஃபோன் இலாகாவில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பில் போடும் நிலைமை இருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1967 நவம்பர் 27

ரீடிங் எடுத்து இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பில் போடுவது என்ற முறை இல்லாமலிருந்தால், அதற்காக வேண்டிய அளவுக்கு நியமிக்கப்பட வேண்டியவர்களை நியமித்தால், அதன் காரணமாக் மின்சாரக்கட்டணத்தை உயர்த்தும் நிலைமை ஏற்படும். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பில் போட்டாலும், கட்டணத்தை மாதாமாதம் செலுத்துகிற முறையில் ஏற்பாடு செய்யலாம் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பில் வந்தவுடன் அந்த மாதம் ஒரு பங்கைக் கொடுத்து அடுத்த மாதம் இன்னொரு பங்கைக் கொடுக்கும் முறையில் ஏற்பாடு செய்யலாம் என்றாலும், இந்தப் பிரச்சினையைப் பற்றி ஆராய மின்சார வாரியத்தை சேர்ந்தவர்களையும், இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர் பிரதிநிதிகளையும், அதிகாரிகளையும் வைத்து மீண்டும் ஆராய்ந்து, வேலைப் பளு அதிகமாகாமல் பார்க்க வேண்டும், வாரியத்திற்கு கூடுதல் செலவு ஆகாமல் பார்க்க வேண்டும், பொது மக்களுக்கும் தொல்லை இல்லாமல் பார்க்க வேண்டும் என்ற முறையில் அதற்கு எது நல்லது என்று ஆராய்ந்து முடிவு எடுக்கலாம் என்று இருக்கிறேன். அத்தகைய ஒரு கூட்டத்தைக் கூட்டி முடிவு எடுக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த மாதம் முதல் வாரத்தில் அந்தக் கூட்டத்தைக் கூட்டலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

மின்சார இழப்புப்பற்றி இங்கே கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. முன்பு கூட இந்த மன்றத்தில் இந்தக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. நம் மாநிலத்தில் 17 சதவீதம் இழப்பு ஏற்படுகிறது என்பதைப் பற்றி, இழப்பு அதிக அளவுக்கு இருக்கிறது என்று பல நண்பர்கள் குறிப்பிட்டார்கள். அது குறைக்கப்பட வேண்டும், குறைக்க வழிவகைகள் ஆராயப்பட வேண்டும் என்று ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இழப்பு இந்த ஆண்டு 17 சதவீதமாக இருந்தது மெள்ள மெள்ள, சீர்திருத்தங்கள் செய்யப்பட்ட காரணத்தினால், 16.5 சதவீதம் அளவுக்குக் குறைந்திருக்கிறது. பிற மாநிலங்களில், மைசூரை எடுத்துக்கொண்டால் அங்கே இழப்பு 15.5 சதவீதமாக இருக்கிறது. கேரளத்தை எடுத்துக்கொண்டால் அங்கே 23 சத வீதம் லைன் லாஸ் இருக்கிறது. ஆந்திராவைப் பொறுத்த வரையில் லைன் லாஸ் 25 சதவீதமாக இருக்கிறது. வெளி நாடுகளை எடுத்துக்கொண்டால், ஜப்பானைப் பொறுத்த வரையில் லைன் லாஸ் 16–17 சதவீதம் வரையில் இருக்கிறது. 17 சதவீதம் அளவுக்கு இழப்பு இருக்கிறது என்றால், உற்பத்தி ஆகும் இடத்திலிருந்து மின்சாரத்தை உயர் அழுத்த நிலைக்குக் கொண்டு வந்து, குறைந்த அழுத்த நிலைக்கு மேலும் மேலும் படிப்படியாகக் கொண்டு போகும் போது அந்த அளவுக்கு இழப்பு ஏற்படுகிறது. திருட்டின் மூலமாக எவ்வளவு போகக் கூடும் என்று பார்க்கும் போது, அது ½ சதவீதம் இருக்கும் என்று மின்சார வாரியத்தினர் கணக்கிட்டிருக்கிறார்கள். அது கூடுதலாக இருக்குமா என்பதை இன்னும் ஆராய்ந்து பார்த்தால் அதிலே தெளிவு ஏற்படக் கூடும்.



1967 நவம்பர் 27] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இழப்பு 16.5 சதவீதம் என்பது இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் அதிகமாக இருப்பதாகச் சொல்ல முடியாது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவர்களுக்கு ஏற்படும் இழப்பை விட இது குறைவாக இருக்கிறது. மேலும் இதைக் குறைக்க வழிவகைகள் இருக்குமா என்று ஆராயப்பட்டு வருகிறது. நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக இருந்தபோதும் இது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பொதுக் கணக்குக் குழுவினாலும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. உலகத்தில் எங்கும் இவ்வளவு இல்லை என்ற கருத்து எடுத்துச் சொல்லப்பட்ட நிலையில், இதைவிட அதிகமான அளவுக்கு இழப்பு இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்று கூற விரும்புகிறேன். ஆகவே, இதைக் குறைக்க வழியில்லை என்று சொல்ல வரவில்லை. மேலும் எந்த வகையில் குறைக்க முடியுமோ அதற்கு முயற்சி எடுக்கலாம் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

மின்சார வாரியம் உபயோகப்படுத்தும் கம்பங்களைப் பற்றி திரு. மலைச்சாமி, திரு. துரைசாமி, திரு. சங்கரய்யா போன்றவர்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மின்சாரக் கம்பங்களைத் தயாரிப்பதில் முழுப் பொறுப்பையும் வாரியமே எடுத்துக்கொள்ளலாமே என்று கூறினார்கள். மின்சார வாரியத்திற்கு ஆண்டுக்கு 3,50,000 கம்பங்கள் தேவைப்படுகின்றன. ஒப்பந்தக்காரர்களுக்கு தயாரிப்பதற்காக வழங்கப்பட்டிருப்பது 1.21 லட்சம் அளவுக்குத் தான். மிச்சம் மின்சார வாரியத்தின் மூலமாகவே செய்யப்படுகின்றன. இதனால் ஒன்றும் அதிகம் ஆகிவிடுவதில்லை. மின்சார வாரியமே எல்லாவற்றையும் செய்வதென்றால், மூலதனச் செலவு செய்து பணத்தை முதலீடு செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த 74 அடி கம்பத்திற்கு விலை, வாரியத்தின் மூலம் 80.

(திரு. வி. எஸ். கோவிந்தராஜன் தலைமை.)

ரூபாயும், 77 அடி கம்பத்திற்கு 105 ரூபாயும் ஆகிறது. ஒப்பந்தக்காரர்கள் மூலமாகவும் செய்து பெறப்படுகிறது. ஒப்பந்தக்காரர்கள் மூலம் சப்ளை செய்யும் கம்பங்களின் விலை சற்றுக் குறைவு. ஆகவே, இதில் நஷ்டம் என்பது இல்லை. எல்லாவற்றையும் மின்சார போர்டே தயாரிப்பது என்றால் அதிக மூலதனச் செலவும், பொறுப்பும் ஏற்படும். மின்சார வாரியமும் செய்கிறது. ஒப்பந்தக்காரர்களுக்கும் கொஞ்சம் தரப்படுகிறது. அதிலும் நஷ்டம் அதிகமில்லை என்று குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அரிசன குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்குவதுபற்றி உறுப்பினர்கள் சொன்னார்கள். 1½ இலட்சம், ஆண்டு ஒன்றுக்கு வழங்கும் முறை இருந்தது. இப்பொழுது 3 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 2,500 அரிசன குடியேற்றங்கள் மின்சாரம் பெற்றிருக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு 300 கிராமங்கள் இவ்வசதியைப் பெறவேண்டும் என்பது நோக்கம்.

*திரு. பி. எம். முனுசாமி கௌண்டர்:* 1966-லிருந்து அது இருக்கிறது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஏற்கனவே 1½ இலட்சமாக இருந்தது 3 இலட்சமாக ஆக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சியிலே ஆக்கப்பட்டிருக்கிறது, அந்த ஆட்சியிலே ஆக்கப்பட்டிருக்கிறது என்பது அல்ல. ஆக்கப்பட்டிருக்கும் நிலை இருக்கிறது. இது தொடர்ந்து வருகிறது. இந்த நிலைமைகளை ஒப்புக்கொள்ளவோ, மறுக்கவோ வேண்டிய அவசியமில்லை. இருக்கும் உண்மையைச் சொல்லுகிறேன். நாங்கள் ஆக்கினோம் என்று குறிப்பிடவில்லை என்பதை கனம் உறுப்பினரவர்களுக்குத் தெரிவிக்கிறேன். நிதி வசதி ஒதுக்குவதைப்பொறுத்து நாங்கள் மேலும் விரிவுபடுத்த முடியும். நிதி அதிகம் ஒதுக்க வேண்டும் என்ற எண்ணமிருந்தாலும் நிதி வசதியைப் பொறுத்து மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தனியார் நிறுவனங்களைப்பற்றி என்னுடைய முன்னுரையிலே சொல்லியிருக்கிறேன். மூன்று நிறுவனங்கள் எடுத்துக் கொள்ளப்பட இருப்பதாக கனம் முதலமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். முறைப்படி எடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன. எல்லாவற்றையும் படிப்படியாக எடுத்து மேலும் அதற்கு சட்டப்படி எடுக்கவேண்டிய முறைகள், காம்பன்சேஷன், நோட்டீஸ் கொடுக்க வேண்டிய முறை ஆகியவற்றின்படி நாங்கள் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். முறைகளெல்லாம் இலாக்காவினரால் கவனிக்கப்பட்டு வருகிறது.

தொழிலாளர்களின் பிரதிநிதி ஒருவரை மின்சார வாரியத்தின் உறுப்பினராக நியமிக்க வேண்டுமென்று திரு. நாகசுந்தரம் அவர்கள் தெரிவித்தார்கள். மின்சார வாரியத்தில் பொறியியல் வல்லுனர்கள், நிதி, வேளாண்மை, கணக்கு, தொழில்துறை ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மின்சார ஆலோசனைக் குழுவில் தொழிலாளர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களின் பிரதிநிதி மேனேஜ்மெண்டில் இருப்பது என்பது எங்கும் நடைமுறையில் இல்லாத ஒன்று. அவர்கள் தொழில் ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள். மின்சார வாரியத்தின் செயல் முறைகளை இத்தகைய குழுவிலே வைத்து பரிசீலனை செய்ய வாய்ப்பிருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள தொழிலாளர்களுக்கு வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர் ஒப்பந்தம் நிறைவேற்ற வேண்டிய கருத்துக்கள், பற்றி உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது. அவர்களது கோரிக்கைகளில் 22 கோரிக்கைகள் பற்றி பேச்சு வார்த்தைகள் முடிவு பெற்றிருக்கின்றன. 5 கோரிக்கைகள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. மற்றக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவிருக்கின்றன.





தொழில்துறையில் பணியாற்றும் ஊழியர்கள்போல் நடத்தப்படவேண்டுமா, அல்லது அரசாங்கத்துறை தொழிலாளர்கள்போல் நடத்தப்பட வேண்டுமா என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்று. தொழில் துறை தொழிலாளர்கள்போல் மற்ற நிலைகள் வழங்க வேண்டுமென்று அவர்கள் விரும்பும் காரணத்தினால் அந்த வகையைக் கவனித்து எதையெதை எப்படிச் செய்யவேண்டுமோ அப்படிச் செய்ய, வாரியத்தில் ஆலோசித்துத் தக்க முடிவு எடுப்பார்கள்.

மேலும், மின்சாரப் பணிகளிலே வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் ஆறு மாதம் தொடர்ந்து வேலை செய்தால், அவர்கள் நிரந்தரமாக ஆக்கப்பட வேண்டுமென்ற கருத்தை திரு. சங்கரய்யா அவர்களும், வேறு சிலரும் தெரிவித்தார்கள். மின்சாரப்பணிகளில், பல்வேறு திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள், மற்ற வகைகளில் தேவைப்படும் அளவுக்கு, கட்டி முடியும் அளவிற்குப் பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். கட்டி முடிக்கப்பட்ட பிறகு அந்த முறை உற்பத்தியில் ஈடுபடுவதற்கும், அதை வழங்குவதற்கும் பணியாளர்களும் மற்றவர்களும் தேவைப்படுகிறார்கள். ஒரு திட்டத்தை மேற்கொள்ளும்பொழுது எத்தனை பேர்கள் இருக்கிறார்களோ அத்தனை பேர்களையும் கடைசிவரையிலும் வைத்துக் கொள்வது என்பது நடைமுறையோடு ஒத்து வர முடியாத ஒன்று. ஓரிடத்தில் வேலை முடிந்தபிறகு மற்ற இடங்களிலே வேலை துவங்கும்பொழுது அங்கு அனுப்புவதுதானே என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. ஓரிடத்தில் பணியாற்றுபவர்களை, வேறு மாவட்டத்தில் திட்டம் மேற்கொள்ளப்படும்பொழுது சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் அந்தந்தப் பகுதிகளிலுள்ளவர்கள் எங்கள் பகுதிகளில் வேலை நடக்கும்பொழுது மற்றப் பகுதியிலுள்ளவர்களுக்கே வேலை கொடுப்பதனால் எங்கள் பகுதியிலுள்ளவர்கள் வேலையற்றுப்போய் விடுகிறார்கள் என்று எடுத்துச்சொல்லுகிறார்கள். குந்தா திட்டத்தில் இருந்தவர்களையே எண்ணூர்த் திட்டத்திற்கும், எண்ணூரில் பணியாற்றியவர்களையே கோதையாறு திட்டத்திற்கும் அனுப்பினால் அந்தந்தப் பகுதியிலுள்ளவர்கள் எங்கள் மாவட்டத்தில் வேலையற்றுப்போய்விடும் என்று கருத்துத் தெரிவிக்கிறார்கள். ஆகையினால் கூடுமானவரையிலும், தேவையானவர்களையும், மற்றவர்களையும் எந்தெந்த அளவு அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு மேற்கொண்டு, அந்தந்தப் பகுதிகளில் உள்ளவர்களின் எண்ணத்தை நிறைவேற்றும் முயற்சியை நாம் மேற்கொண்டிருக்கிறோம். சில விடங்களில் வேலை முடிந்த பிறகும் பணியாளர்களை அவர்கள் போகச் சொல்லாமல் வைத்திருப்பார்களானால் அதுபற்றிய கேள்விகளை நாம் கேட்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபொழுது, "வேலை முடிந்தபிறகும் ஊழியர்களை என் 6 மாதமாக வைத்திருக்கிறீர்கள்? 8 மாதமாக வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டிருக்கிறேன். வேலை முடிந்த பிறகு உடனே வேலையிலிருந்து நீக்காமல் சம்பளம் கொடுத்து என் அதிக நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று மன்ற உறுப்பி

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1967 நவம்பர் 27

னர்களாகிய நாம் கேட்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். எனினும் ஏற்கனவே பழக்கப்பட்ட ஊழியர்களை 4, 5, 6, பேர்கள் என்றிருப்பார்களேயானால், வாய்ப்புகள் இருக்கும்பொழுது எடுத்துக்கொள்ள இயலுமா என்பதுபற்றி ஆலோசிக்கலாம்.

ஊழியர்களுக்கான பஞ்சப்படி உயர்வு, விசேஷ ஊதிய உயர்வு ஆகியவை குறித்து வாரியம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இது குறித்து தக்கதொரு முடிவு எடுக்கும்.

பல்புகள் கிடைக்காமைபற்றி மன்ற உறுப்பினர் திரு. ஆதிமூலம் அவர்கள் தெரிவித்தார்கள். மற்ற உறுப்பினர்களும் தெரிவித்தார்கள். அதை நான் என்னுடைய முன்னுரையிலேயே தெரிவித்திருக்கிறேன். தெருவிளக்குகளில் உள்ள பல்புகள் திருட்டுப் போவதன் காரணமாக புதிய பல்புகளைப் பொருத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட கம்பெனிகளிலிருந்து கிடைக்காவிட்டாலும் வேறொரு இடத்தில் டெண்டர் கொடுத்துப்
பி. ப. 1-00 பெறுவதற்கு வாரியம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. பல இடங்களிலிருந்து புகார்கள் வந்தன. அவைகளை உடனடியாக விரைவில் நீக்குவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வாரியம் ஈடுபட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் துவக்குவதுபற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தெரிவித்தார்கள். முன்னுரையிலேயே தெரிவித்திருக்கிறேன். தென்னக மாவட்டங்களில் பயன்படுத்த தூத்துக்குடியில் 100 மெகவாட் உற்பத்தித் திறன் ஏற்படுத்துவதை இந்திய அரசுக் குழு ஆராய்ந்து அனல் மின்சாரம் ஏற்படுத்தி அதன் மூலம் 100 மெகவாட் உற்பத்தி ஏற்படுத்துவதற்குப் பதிலாக என்னுரையே விரிவுபடுத்தி 110 மெகவாட்டாக ஆக்கிப் பயன்படுத்த அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அதே நிலையில் இதுவரையிலும் அனல் மின் நிலையம் ஏற்படுத்துவதன் மூலமாகத்தான் நாம் தொழில் வளர்ச்சி பெற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த நிலைமைகள் ஏற்பட்டு ஏராளமான தொழிற்சாலைகள் வருகின்ற பொழுது மின்சாரத்தை வழங்குகின்ற அத்தகைய நிலையம் இருந்து தீர வேண்டுமென்பதை இந்த மாநில அரசு வற்புறுத்தி வருகின்றது. மின்குழு கூட தங்கள் மாவட்டங்களுக்கு பயன் படுகின்ற வகையில் ஒரு அனல் மின்சார நிலையம் அமைக்கலாமா, அணுமின்சார நிலையமாக அமைப்பது கூடச் சாத்தியமா என்று ஆராய்ந்து கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதை இந்த அரசு வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. மேலும் வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் வற்புறுத்தி அதைப் பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வேறு பல நிலைமைகள் பற்றியும் வாரியம் செய்து வந்த பணிகளைப் பற்றியும் உறுப்பினர்கள் பலர் கருத்துத் தெரிவித்தார்கள். அங்கங்கு நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு சூழ்நிலைகள்



1967 நவம்பர் 27] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பற்றியும் எந்தெந்தப் பகுதிகளிலே, எந்தெந்த இடத்திலே, எந்தெந்த அளவிலே முன்னேற்றம் வேண்டுமென்பதுபற்றியும் கருத்துத் தெரிவித்தார்கள்.

விசை ஏற்றங்கள் பல வைப்பதற்கான கோரிக்கைகள் ஏராளமாக வருகின்றன. எல்லா இடங்களிலும் பம்பு செட்டு மூலமாக நீர் இறைவை செய்து விளைவைப் பெருக்க வேண்டுமென்ற ஆர்வம் எல்லோருக்கும் வந்திருக்கிறது. எல்லா இடங்களிலும் அதற்கான முயற்சிகள் மேற்கொள்கிறார்கள். நாம் ஒதுக்கியிருக்கிற நிதியினுடைய அடிப்படையிலே 4 கோடி ரூபாய் ஒதுக்கி, மேலும் 2 கோடி ரூபாய் ஒதுக்கி ,இப்பொழுது, 3,300 விசை ஏற்றங்களுக்கு இந்த ஆண்டிலே இணைப்பு தரப்பட்டிருக்கிறது.

இதுவரையிலே இந்த ஆண்டினுடைய கணக்கிலே கடந்த 7 மாத காலத்திற்குள்ளாக 27,000 விசை ஏற்றங்களுக்கு இணைப்புத் தரப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கின்ற நிதி வசதியினுடைய அடிப்படையிலே நாம் இன்னும் 7,000 விசை ஏற்றங்களுக்குத்தான் இணைப்புத் தரக்கூடிய நிலையிலே இருக்கிறோம். ஆண்டு ஒன்றுக்கு 12 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படுமானால் 48,000 விசை ஏற்றங்களுக்கும் இணைப்புத் தருகிற சக்தியையும், வசதியையும் மின்சார வாரியம் பெறக்கூடும் என்று கணக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, இப்பொழுது இருக்கிற வசதி, வாய்ப்புப்படி 33,000 விசை ஏற்றங்களுக்கு நாம் இணைப்புத் தர முடியும். இப்பொழுது நிதி வசதிக்கு 33,000-க்கு மேலே கடன் கேட்டிருக்கிறார்கள். பண வசதி வருமேயானால் இந்தத் திட்டங்களை விரைவில் மேற்கொள்ளுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

ஆங்காங்கு இருக்கிற நிலைமையைப் பொறுத்து, நீண்ட நெடுங் காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கு, இன்றியமையாத தேவைப்படுகின்றவர்களுக்கு உடனடியாக வழங்கவேண்டுமென்ற உத்தரவு இடப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே வாரியத்திலே மேலும் கவனம் செலுத்துகிற முறையிலே முடிவு எடுப்பார்கள் என்பதையும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மற்றும் இந்த வாரியத்தினுடைய பொறுப்புகளைப் பற்றியும், கடமைகளைப் பற்றியும் பலர் பலவிதமாக எடுத்துச் சொன்னார்கள். தங்கள் பாராட்டையும், வாரியத்தைப் போற்றியும், அது எந்த அளவுக்குப் பணியாற்ற வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். பலரும் பாராட்டுரை வழங்கினார்கள். பல்லாண்டு காலமாக அந்த வாரியம் ஆற்றியவைகளையும் அது தந்த பலனையும் பற்றி பலரும் எடுத்துத் தெரிவித்தார்கள்.

சிலர் குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பியிருக்கிற குற்றச்சாட்டுக்கு, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதில் அளித்தார்கள். 'சாட்டுகிற குற்றச்சாட்டுகளை தனிப்பட்ட முறையில் என்னிடத்தில் தந்து விடுவார்களேயானால் தக்க முறையில் அதை ஆராய்ந்து

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1967 நவம்பர் 27

தக்க முடிவை எடுப்பேன்' என்ற உறுதியை அவர்கள் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் தந்த குற்றசாட்டைப் பற்றியும் நான் இந்த வாரியத்தினுடைய தலைவர் அவர்களிடத்திலே கேட்டேன். அந்த குற்றசாட்டுகளுக்கு ஆதாரம் எதுவுமில்லை என்று அவர் கூறினார். அந்தக் கருத்தையும் மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்திலே தந்திருக்கிறேன். இந்தப் பிரச்சினையைப்பற்றி சபையிலே எழுப்ப வேண்டாமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிற காரணத்தாலே அந்தக் கருத்தையும் மாண்புமிகு முதலமைச்சரவர்களிடமே விட்டுவிடுகிறேன். அவர்கள் இரண்டையும் ஆராய்ந்து பார்த்து, தக்க முடிவு எடுத்து இந்த அவைக்குத் தெரிவிக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்துவார்கள்—ஏற்படுத்துகின்ற எண்ணத்திலே அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

யார் குற்றம் செய்தாலும், எவர் குற்றம் செய்தாலும் தக்கபடி விசாரித்து தக்க முடிவு எடுக்க வேண்டுமென்ற கருத்தை இந்த அவையிலேயுள்ள அத்தனை பேரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். குற்றச்சாட்டை அணுகுகின்ற விதத்திலே, எடுத்துச் சொல்லுகின்ற விதத்திலே, தக்க முறையில் அணுகவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தால் அதைப்பற்றி விசாரித்துத் தக்க முடிவு ஏற்பட இருக்கிற சூழ்நிலையில் அந்த சூழ்நிலையையும் மற்ற நிலைமைகளையும் எடுத்து விளக்குவார்கள் என்பதை இந்த சபைக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

எருக்கஞ்சேரி விவகாரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த மன்றத்தில் எழுப்பப்பட்ட பிரச்சினைகளில் அதுவும் ஒன்று. நான் எதிர்க்கட்சித் தலைவனாக இருந்தபொழுது பொதுக்கணக்குக் குழுத் தலைவனாகவும் இருந்தேன். அப்பொழுது பொதுக்கணக்குக் குழு அதைப்பற்றி ஆராய்ந்து அதைப்பற்றி ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தது. தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. அந்த பொதுக்கணக்குக் குழுவில் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இருந்தார்கள். அதிலே கட்சி மாறுபாடு எதுவும் இல்லாமல் எல்லோரும் ஒருமித்து கருத்துத் தெரிவித்ததன் அடிப்படையிலே எல்லாக் கட்சி உறுப்பினர்களும், பெரும்பான்மை கட்சியாக இருந்தவர்களும் சரி, சிறுபான்மைக் கட்சியாக இருந்தவர்களும் சரி, எல்லோரும் பொதுக் கணக்குக் குழுவில் இருந்த அத்தனை பேரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதிலே சில உறுப்பினர்கள், தலைவரைப்பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். தலைவருடைய நிலையைப் பற்றியும், அந்த விவகாரத்தில் ஆராய்ந்து பார்த்து, தலைவர் அதிலே 'இன்வால்வ்' ஆகவில்லை, அதிலே அவருக்கு பொறுப்பு இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி, யார் யார் அதிலே விசாரிக்கப்பட வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த வாரியத்தில் உறுப்பினர்களாக இருக்கிற திரு. முத்தையன், திரு. திரவியம் ஆகியவர்கள் பொதுக்கணக்குக் குழு



1967 நவம்பர் 27] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கொடுத்த அறிக்கையின் பேரில், குற்றங்கள் சுமத்தப்பட்டவர்களிடமிருந்து தக்க சமாதானம் பெற்றுச் சொல்ல வேண்டுமென்று கோரப்பட்டார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து சமாதானம் கூட வாங்கப்பட்டிருக்கிறது. அந்த சமாதானங்களின் மீது விசாரணை நடத்தி பதிலிறுக்க வேண்டிய நிலை இருக்கிறது. பிரதம பொறியாளர், பிரதம கணக்காயர், எஸ்.ஈ. (ஜெனரேஷன்), எஸ்.ஈ. (டெக்னிகல், சிவில்) ஆகியவர்கள் மீதுதான் குற்றங்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. வாரியத்தினுடைய உறுப்பினர்களாக இருக்கிற திரு. முத்தையன் அவர்களும், திரு. திரவியம் அவர்களும், அவர்களுடைய சமாதானங்களை ஆராய்ந்து பரிவுரை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய பரிவுரை கிடைத்த பின்புதான் என்ன தண்டனை கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்து, சபைக்கு அறிவிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருவாய்த் துறை பற்றியும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டில் வருவாய்க் குழுவும் (ரெவினியூ போர்டும்) கலெக்டர் அவர்களும் அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்திலிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கை வந்த பிறகு, அந்த அறிக்கை பற்றிய நிலவரமும் இந்த அவைமுன் எடுத்து வைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறைந்த விகிதங்களில் வேளாண்மைக்கும் தொழிற்சாலைகளுக்கும் மின்சாரம் வழங்குவதால் வாரியத்திற்கு மானியம் வழங்க வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தார்கள். மின்சார வாரியம் கமர்ஷயல் கன்சர்ன் போன்று உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு அதற்கு லாபம் வைத்து விற்பனை செய்யவில்லை. 17 காசுக்கு உற்பத்தி செய்து 8½ காசுக்குத் தருகிறோம். இரண்டுக்கும் உள்ள தொகையை 'சப்சிடி' யாகத் தருகிறோம். மற்ற மாநில வாரியங்கள் வட்டித் தொகை கூட கட்ட முடியாமல் இருக்கின்றன. நம்முடைய மாநில வாரியம் 9 கோடியிலே 8½ கோடி ரூபாய் வட்டியாகக் கட்டக்கூடிய அளவுக்கு நிலைமைகள் வளர்ந்திருக்கின்றன. அந்த வட்டித் தொகையை நம் மாநிலத்துக்குத் தருகின்ற காரணத்தால் வாரியத்திற்கு மேலும் கடன் உதவி செய்து வருகின்றோம்.

மற்ற மாநிலங்களுடைய வாரியங்களோடு கணக்கிடும்பொழுது இந்த வாரியம் திறமையோடு பணியாற்றி வந்திருக்கிறது—வருகிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு திருத்தம். திரு. முத்தையனும் 'அக்கௌண்ட்ஸ் கமிட்டி மெம்பர்ஸும்' எருக்கஞ்சேரி குற்றச்சாட்டை விசாரிக்கிறார்கள். திரு. திரவியம் இல்லை என்பதை இந்தப் பேரவை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1967 நவம்பர் 27

ஒரே ஒரு குறிப்பை மட்டும் சொல்லுகிறேன். ஆல்விடாஸ் கம்பெனி பற்றி ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டது. 'ஆல்விடாஸ்' கம்பெனி அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உற்பத்தி செய்து வருகிறார்கள். நம்முடைய மாநில அரசு அம்பத்தூரில் இருக்கிற தொழிற்சாலைகளுக்கு எல்லாம் 15 'பெர்சன்ட்' சலுகை கொடுக்கிறது. அந்தச் சலுகை கொடுக்கப்படாத அளவுக்குத்தான் இந்த 'ஆல்விடாஸ்' கம்பெனிக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டுப் பொருள்கள் வாங்கப்படுகின்றன. அதுவும் 555 இலட்சம் ரூபாய் பெறுமான காண்டிராக்ட் ஆர்டரில் 173 இலட்சம் ரூபாய் பெறுமான ஆர்டர் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் 1966-ம் வருடம் டிசம்பர் மாதம் மைசூர் மாநிலம் சப்ளை செய்யாத காரணத்தாலே டிசம்பர் மாதத்திலே அந்தக் கம்பெனியைத் தடை செய்து மறுபடியும் 19—5—1967-ல் அந்தத் தடையை அவர்கள் நீக்கிவிட்டார்கள். ஆகவே, இந்த மாநில வாரியம் கணக்குக் கொடுத்திருக்கிறது. கொடுத்திருக்கிற கணக்குப்படி இந்த இடைவெளிக் காலத்தில் எந்த ஆர்டரும் தரப்படவில்லை. கொடுத்த ஆர்டர் அதற்கு முன்னால், 19—5—1967-க்குப் பிறகு கொடுக்கப் பட்டிருக்கிறது. அப்படியே அதைத் தடைப்படுத்துவது என்றாலும், அந்த அரசு இந்த அரசுக்கு எழுதி, இந்த அரசு வாரியத்திற்கு எழுதி தடைப்படுத்த வேண்டும் என்ற நிலை இருக்கவேண்டும். அப்படிப்பட்ட நிலை ஏற்படுத்தப்படவில்லை. மேலும் இந்த ஆல்விடாஸ் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஆர்டர்படி சாமான்கள் ஒழுங்காக முறைப்படி வந்து சேர்ந்திருக்கிறதே தவிர, காலதாமதம் ஏற்பட்டதாகக் கூறுவதற்கில்லை. இன்னொரு காரணம் சொல்லப்படுவது என்னவென்றால், சென்னை மின்சார வாரியத்தின் தேவையை நிறைவேற்றுவதற்கு அவர்கள் கொடுத்த காரணத்தினாலே மைசூரினுடைய தேவையை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே, அந்தத் தன்மையிலே அவர்களுடைய தேவையை நிறைவேற்றாததினால், அங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற கருத்து சொல்லப்பட்டது. இந்த நிலைமைகளை மன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும் என்பதற்காகத்தான் இதை இங்கே எடுத்து வைத்திருக்கிறேன்.

இந்த அவையினுடைய உறுப்பினர்கள் பலரும் தனித்தனியாகப் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆண்டுதோறும் அவர்கள் சொல்லிய கருத்துக்களும், அவைகளின்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் நூல் வடிவத்தில் வெளிவரும் நிலையில், என்னென்ன கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, என்னென்ன கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டிய நிலையில் இருக்கின்றன என்ற குறிப்பு தரப்படுகிற சூழ்நிலையும் இருக்கும். இந்த அவையிலே உறுப்பினர்கள் பலரும் சிக்கனப்படுத்துவதற்கான முறைகளையும், வேறு பல சூழ்நிலையில் கருத்துக்களையும் எடுத்துவைத்தார்கள். அப்படிக் கூறிய கருத்துக்களை மனதில்கொண்டு, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையும் கலந்துகொண்டு, இந்த வாரியத்தைப் பொறுத்த அளவில் இன்னும் எவ்வளவுக்கெவ்வளவு சிக்கனப்படுத்த வேண்டுமோ அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, இன்னும் இதை எவ்வளவுக்கெவ்வளவு தரமாக நடத்தவேண்டுமோ அப்படி நடத்துவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு, ஆலோசனைக் குழுவினரோடும் அவ்வப்பொழுது ஆராய்ந்து, அவர்கள் கூறுகிற திட்டவட்டமான, தெளிவான கருத்துக்களின் அடிப்படையில் தக்க முடிவுக்கு வருவதற்கு இந்த அரசு முயலும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப்பணிக்கு உறுதுணையாக இருந்த அனைவரையும் பாராட்டிப் போற்றி, இந்த வாரியத்தில் பணியாற்றி வருகிற அத்தனை நிர்வாகஸ்தர்களையும், ஊழியர்களையும் பாராட்டிப் போற்றி, சிறந்த அரிய கருத்துக்களை எடுத்துரைத்த மன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன். வணக்கம்.



1967 நவம்பர் 27] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, இந்தத் துறையைப்பற்றிய விவாதம் நடைபெற்றபொழுது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அதற்குப் பொருத்தம் இல்லாதது என்றாலும், அதைச் சாமர்த்தியமாகப் பொருத்தப்படுத்தி, இரண்டு கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அதைப் பற்றிய விளக்கத்தை மட்டும் நான் தர விரும்புகிறேன். அதற்கு முன்னால் இங்கு எடுத்துச்சொல்லப்பட்ட கருத்துக்கள் மின்சாரத் துறையின் மூலம் பெறப்படுகிற வருவாயைப் பெருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு பல நல்ல கருத்துக்கள் சொல்லப்பட்டன. இந்தத் துறையின் வருவாய் அளவு பெருகவும், இது மேலும் வளர்ச்சி அடையவும், சுதந்திராக் கட்சி உறுப்பினர்கள், கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இவர்கள் எல்லோருமே தொழில் துறைக்குத் தரப்படும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தலாம் என்ற யோசனையைத் தெரிவித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது கருத்து, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் சொன்னது, அவர்கள் ஒரு தொடர்போடு பேசினார்கள். 'மின்சார உற்பத்திக்குக் காரணம் யார்? மின்சார வளர்ச்சிக்குக் காரணம் யார்? நாங்கள் அல்லவா?' என்று சொன்னார்கள். லண்டனில் வெள்ளைக்காரர்கள் இன்றுகூட "நாங்கள் அல்லவா முதன்முதலில் மின்சாரத்தைக் காட்டினோம்?" என்று சொல்லுவார்கள். அவர்களுக்கும் முன்பு கூட எடிசன் பரம்பரையினர் 'மின்சாரத்தைக் கண்டுபிடித்தது நான் அல்லவா? நான் அல்லவா இதற்குக் காரணம்?' என்று சொல்லுவார்கள். இப்படி அவர்கள் இடையிடையே தங்களுடைய பழைய நாட்களை நினைவுபடுத்திக்கொள்வதில் எந்தவிதமான நஷ்டமும் இல்லை, அந்தப் பெருமையை அவர்கள் தேடிக்கொள்ளலாம்.

ஆனால், இடையிலே என்ன சொன்னார்கள்? 'இப்பொழுது மின்சாரம் நிரம்ப இருக்கிறது என்று சொல்லலாம். அதற்கு என்ன காரணம் என்றால், தொழில் நடைபெறவில்லை, உங்கள் ஆட்சியில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன.

அதனால்தான் மின்சாரத்தை உபயோகப்படுத்த முடியவில்லை' என்று அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். எங்களிடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்ட நேரத்தில் மூடப்பட்டிருந்த பல தொழிற்சாலைகளை நாங்கள் திறந்துவைக்கின்ற ஒரு வெற்றி இருக்கிறதே தவிர, எங்களுடைய ஆட்சிக் காலத்தில் தொழிற்சாலைகள் மூடப்படவில்லை. எங்களிடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்ட நேரத்தில், கோயம்புத்தூரில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்தன. அவைகளிலே சிலவற்றை இன்றையதினம் திறந்திருக்கிறோம். சோமசுந்தரம் ஆலை திறக்கப்பட்டிருக்கிறது, ஜனார்த்தன ஆலை திறக்கப்பட்டிருக்கிறது, அம்பாள் ஆலை திறக்கப்பட்டிருக்கிறது, புதுக்கோட்டையில் காவேரி மில் திறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் காலத்தில் மூடப்பட்ட டெக்ஸ்டூல் கம்பெனி இன்றைய தினம் வேலை செய்துகொண்டிருக்கிறது. இன்னும் ஒரு வாரம், இரண்டு வாரங்களுக்குள் ரெங்க விலாஸ், கம்போடியா மில்கள் திறப்பதற்கான வழிவகைகளைப்பற்றி மத்திய சர்க்கார் அமைச்சர் திரு. தினேஷ் சிங் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் திறக்கப்பட இருக்கின்றன.

இவ்வளவு தொழிற்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன என்று நாங்கள் எடுத்துக்காட்டினால், 'இன்னும் சில மூடப்பட்டிருக்கின்றனவே?' என்று கேட்பார்கள். பத்திரிகையிலே பார்க்கும் பொழுது அப்படித்தான் தோன்றும். செல்பார்க் கம்பெனி மூடப்பட்டிருக்கிறது என்றால், அங்கே வேலை செய்கிற தொழிலாளர்கள் எத்தனை பேர்கள்? 60-க்கும் குறைவு. யூனியன் ஆக்ஸைசரீஸ் மூடப்பட்டிருக்கிறது என்றால், அதோடு தொடர்பு கொண்ட தொழிலாளர்கள் எத்தனை பேர்கள்? 80 பேர்கள். ஆக, இப்படிப்பட்ட சிறு சிறு ஸ்தாபனங்கள்—ஸ்தாபனங்கள் சிறிய அளவில் இருந்தாலும், அவைகளை நடத்துகிறவர்களின் பிடிவாதம் பெரிய அளவில் இருப்பதனால், இந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றனவே தவிர, ஓராயிரம் பேர்கள், இரண்டாயிரம் பேர்கள், 500, 600 பேர்கள் வேலை செய்யக்கூடிய எந்தத் தொழிற்சாலையும் மூடப்பட்டிருப்பதாக நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தகவல் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. (திரு. பி. ஜி. கருத்திருமன் : என்பீல்டு) அவர்கள் ஒன்று தெரிந்துகொள்ளவேண்டும். தொழில் உலக வார்த்தைகளில், தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது என்பதற்கு 'குளோஸ்டு', மூடப்பட்டுவிட்டது என்று அர்த்தம் அல்ல. 'குளோஸ்டு' என்பதற்கும் 'குளோஷர்' என்பதற்கும் வித்தியாசம் உண்டு. 'குளோஷர்' என்றால் தொழிற்சாலை இழுத்து மூடப்பட்டுவிட்டது, இனி நடக்கவே நடக்காது என்று அர்த்தம் இல்லை. 'குளோஷர்' என்றால், தகராறைத் தீர்த்துக் கொள்ளாத வரையில் குளோஷராக இருக்கலாம். அந்தக் குளோஷர் கூட நியாயமான குளோஷர் தானா, நியாயமற்ற குளோஷரா என்று சர்க்கார் கேட்டு, திறக்கலாம். 'இந்து' பத்திரிகைக் காரியாலயம் கூட ஒரு மாதம் வரையில் 'குளோஷர்' செய்யப்பட்டிருந்தது. 'இந்து' பத்திரிகை வெளிவராமலேயே இருந்தது. அது இப்பொழுது மறுபடியும் திறக்கப்பட்டுவிட்டது





ஆகவே, பெரிய அளவிலே தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்று மாலைப் பத்திரிகையிலே ஒரு வார்த்தை வர வேண்டும், அதைப் படித்து மகிழவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் விரும்பினால், அவர்கள் மகிழ்ச்சியை வருவித்துக்கொள்வதில் எனக்கு ஒரு நஷ்டமும் இல்லை. ஆனால், உண்மை அதுவல்ல என்பதை மட்டும் அவர்கள் தெரிந்துகொண்டால் போதும். அவர்கள் நண்பர்களிடம் கூட இப்படியே சொல்லலாம் மாலையிலே; ஏராளமான தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்று சொல்லலாம். 'ஆகா, அப்படியா, இவ்வளவு அக்கிரமமான ராஜ்யமா' என்று கூட அவர்கள் எண்ணிக்கொண்டாலும் எண்ணிக்கொள்ளட்டும். (திரு. கே. விநாயகம் : புதிய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றனவே.)

நம்முடைய நண்பர் எப்பொழுதும் நமக்கு உதவியாக இருப்பவர். புதிய தொழிற்சாலைகள் துவக்கப்பட்டிருப்பதைச் சொல்லாமல் விட்டுவிட்டேனே என்று அவர் கேட்கிறார். ரொம்ப அடக்கத்தோடு பொதுக் கூட்டங்களிலும், சட்ட மன்றத்திலும் தான் சொல்லிக்கொண்டு வருகிறேன். நான் விவசாயத் துறையைத்தான் முதலிடமாகக் கவனிக்கிறேன், தொழில் துறையை அல்ல என்று. அதைப் பார்த்தவுடனேயே தொழில் துறையைக் கவனிக்கவே இல்லை என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படித் தவறான எண்ணம் கொள்வார்கள் என்பதும் தெரியும். ஆனால், தொழில் துறையில் நான் புதிய தொழில் துவக்குவதைத் தடுக்கவும் இல்லை, உற்சாகப்படுத்தாமலும் இல்லை. நம்முடைய இதே அம்பத்தூரில் இரண்டு மாதங்களுக்கு முன்னால் டாடா கம்பெனியைச் சேர்ந்த ஒரு பெஸ்டிஸைட்ஸ் கம்பெனி துவக்கப்பட்டிருக்கிறது. மேட்டூரில் 3, 4 மாதங்களுக்கு முன்னால் புதியதாக பிளாஸ்டிக் தொழிற்சாலை ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. என்னுடைய நண்பர், தொழில் அமைச்சர் அவர்கள், மேட்டுப் பாளையத்தில் வாட்டில் தொழிற்சாலையைத் துவக்கிவைத்து விட்டு வந்திருக்கிறார்கள். நான் அம்பத்தூரில் இன்னொரு தொழிற்சாலையில் விரிவுபடுத்தப்பட்ட ஒரு பகுதியைத் திறந்துவைத்து விட்டு வந்தேன். இவைகளெல்லாம் மட்டுமல்லாமல், 6-க்கும் குறையாத, கூட்டுறவு முறையில் நடத்தப்படுகிற, டீ கம்பெனித் தொழிற்சாலைகளை நீலகிரி வட்டத்தில் அவர்கள் திறந்துவைத்திருக்கிறார்கள். ஆக தொழில் வளர்ச்சி இல்லை என்று சொல்வதும் தவறு, இருந்த தொழிற்சாலைகளெல்லாம் மூடப்பட்டுவிட்டன என்று கூறுவதும் தவறு.

தொழில் அமைதிக் குறைவு இருக்கிறது என்று சொன்னார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். தொழில் துறையில் அமைதிக் குறைவு இருக்கிறது. நான் கூட யோசித்துப் பார்த்தேன். 'நாம் வந்து கூட அமைதிக் குறைவு ஏற்பட்டுவிட்டதே, நான் எப்பொழுதும் அமைதியை விரும்புகிறவனாயிற்றே. நம்முடைய ஆட்சியிலா இப்படி ஏற்படவேண்டும்' என்று யோசித்துப் பார்த்தேன். இரண்டு, மூன்று வருஷத்திய பட்டியல்களைப் பார்த்தேன். எந்த

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 நவம்பர் 27

வருஷத்துப் பட்டியலும் இந்த வருஷத்தியப் பட்டியலைவிடக் குறைவாக இல்லை. அதாவது, தீபாவளி சமயத்தில் போனஸ் தகராறு வருகிறது. தீபாவளி சமயத்தில் பட்டாசு வெடிச் சத்தம் எப்படி நிச்சயம் காதில் விழுமோ, அப்படி தொழிலாளர்களின் கோரிக்கையும் விழத்தான் செய்யும். ஓர் இடத்தில் நடந்தது, 'இந்து' பத்திரிகைக் காரியாலயத்தில் நடந்தது. இப்பொழுது நடந்தது மட்டுமல்ல. போன வருஷம், இதே மாதத்தில் இதே தீபாவளி நேரத்தில், போனஸ் தகராறு விஷயமாக அந்தக் தொழிற்சாலை அந்த பத்திரிகாலயம் மூடப்பட்டது. அதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்றால், இப்பொழுது கிட்டத்தட்ட நாற்பது நாட்களுக்கு மூடப்பட்டிருந்தது. இருந்தாலும், எந்த விதமான அமளியும் இல்லை. போன வருஷம்—தர்ம ராஜ்யம்—அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருந்த நேரத்தில், மூன்றாவது நாளில் அங்கே இருந்த கண்ணாடி ஜன்னல்கள் உடைக்கப்பட்டன. (திரு. கே. விநாயகம் : மனேஜர் அடிக்கப்பட்டார் . . . .) திரு. விநாயகம் அவர்கள் சொன்னது உண்மை, ஆனால் அப்பொழுது என்ன பேசிக்கொள்ளப்பட்டது என்றால், சர்க்கார் சம்பந்தப் பட்ட யாரோ ஒரு பெரியவருடைய அனுசரணையோடு அந்தத் தொழிலாளர்கள் அப்படி நடந்தார்கள் என்று பேசிக்கொள்ளப் பட்டது. அந்தப் பகுதியை அவர்கள் மறுப்பார். அது எனக்குத் தெரியும். அந்தப் பகுதி அவர்களைப் பாதிக்கின்ற பகுதி என்பதால் அதை அவர்கள் மறுக்கிறார்கள். ஆனால், இப்பொழுது அமைதியான முறையிலே தகராறு தீர்க்கப்பட்டு விட்டது என்பதை எதிர்க் கட்சித் தலைவருக்குத் தெரிவிக்கிறேன்.

மற்றபடி, தொழில் அமைப்புக்களுக்கு இப்பொழுது போடப் படும் மின்சாரக் கட்டணம் மிக குறைவாக இருக்கிறது, அதை அதிகப்படுத்த வேண்டும் என்று உறுப்பினர்கள் குறிப்பிட்ட சிறந்த யோசனைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அந்த முறையில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்த, தக்க நேரத்தில் இந்த யோசனையைப் பயன்படுத்திக்கொள்ள, உங்கள் அனுமதி கிடைக்கும் என்று நம்பி, என் உரையை முடிக் கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்த ராஜன்) : இத்துடன் இன்றைய அலுவல்கள் முடிவடைகின்றன.
பி.ப. 1-21 நாளை காலை ஒன்பது மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

* 114. *Notification issued with G.O. Ms. No. 2125, Home, dated the 3rd August 1967, making certain amendments to the Home Guard Rules, 1963 published at pages 433-438 of Part V of the* Fort. St. George Gazette, *dated the 17th April 1963, as subsequently amended. [Laid on the Table of the House under section 15 (4) of the Madras Home Guard Act, 1963 (Madras Act III of 1963).]*

* Placed on the table of the House on 25th November 1967.



* 115. *Notification issued with G.O. Ms. No. 1309, Public Health, dated the 23rd August 1967, making certain amendments to the rules relating to the qualifications to the posts in the engineering establishment under municipal councils and to the rules relating to qualifications for certain posts in the Water-Supply and Drainage Departments of Municipal Councils, as subsequently amended. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

* 116. *Notification issued with Government Memorandum No. 86613-J2/67, Revenue, dated the 30th September 1967, making an amendment to the Revenue Department Notification II-1 No. 1061 of 1965, dated the 12th March 1965, published at pages 1–6 of Part II—Section 1 of the* Fort St. George Gazette *Extraordinary, dated the 15th March 1965. [Laid on the Table of the House under section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).]*

* 117. *Government Memorandum No. 78890 CT III-1/67-3, Revenue, dated the 18th September 1967, exempting from the liability to Entertainments Tax the cinema show, organised by the Madras Hut Dwellers' Fire Accident Relief Committee, and conducted on the 21st August 1967 at Children's Theatre, Madras, in aid of the Chief Minister's Fire Relief Fund. [Laid on the Table of the House under section 16 (4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939).]*

### B. Reports, notifications and Other Papers.

13. *Notification issued with G.O. P. No. 1068, Revenue, dated the 12th June 1967, regarding reduction of tax on sales of goods to the dealers in the districts of Kohima and Mokokchung in Nagaland under the Central Sales Tax Act, 1956.*

* Placed on the table of the House on 25th November 1967.

## APPENDIX.

[*Vide* answer to starred question No. 460 on page 17]

The statement below shows the number of licences issued in each district for the establishment of rice mills during 1966 :—

| *Name of the district.* | *Number of licences issued during 1966.* |
|---|---|
| 1. Chingleput District ... ... ... | 24 |
| 2. Thanjavur District ... ... ... | 22 |
| 3. Dharmapuri District ... ... ... | 10 |
| 4. Salem District ... ... ... ... | 47 |
| 5. North Arcot District ... ... ... | 36 |
| 6. Tiruchirappalli District ... ... ... | 4 |
| 7. Ramanathapuram District ... ... | 13 |
| 8. Madras District ... ... ... ... | Nil |
| 9. The Nilgiris District ... ... ... | Nil |
| 10. Tirunelveli District ... ... ... | 22 |
| 11. Madurai District ... ... ... ... | 3 |
| 12. South Arcot District ... ... ... | 17 |
| 13. Coimbatore District ... ... ... | 9 |
| 14. Kanyakumari District ... ... ... | 2 |
| Total ... | 209 |

65032

## APPENDIX.

[*Vide* answer to starred question No. 460 on page 17]

The statement below shows the number of licences issued in each district for the establishment of rice mills during 1966 :

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே. எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.